சித்திராங்கி

அல்லது

கைகூடாக் காதல்

ஒரு தமிழ் நாடகம்

யுத்தலோலன், வள்ளி, ப்ரஹ்லாதன்
முதலிய நாடகங்களை இயற்றிய

பா. ஸ்ரீ. துரைஸ்வாமி ஐயங்கார்

இயற்றியது

சென்னை
1937
விலை அணா 12

அறிவிப்பு

என்னுடைய அநுமதியின்றிப் பிறர் இந்நாடகத்தை உள்ளவாறும், ஒரு சிறிது மாற்றியும், சில பாகங்களையோ அல்லது பாட்டுக்களையோ தனிப்படுத்தியும் தங்கள் இஷ்டம்போல் உபயோகித்தலும், நடித்துக் காட்டுதலும், மொழிபெயர்த்தலும் புத்தக உரிமைச் சட்டத்துக்கு விரோதமாகும். இதை நடித்துக்காட்ட விரும்புவோர், நடிகருக்கு உபயோகமாகக், குறைந்தது ஆறு பிரதிகளை விலைக்கு வாங்கிக் கொள்வாராயின் என்னுடைய அநுமதியை எளிதிற் பெறக்கூடும்.

பா. ஸ்ரீ. துரைஸ்வாமி ஐயங்கார்.

To

The Beloved Memory of

Sow. Kamalam

My late lamented wife

கற்புக் கருந்ததி காணரு மானக் கவரிநன்மான்
பொற்புக் கிரதி பொறைக்கொரு பூமகள் போற்றுமென்றன்
அற்புக் கரசி அறத்துக் கெலாமன்னை ஆடகமால்
வெற்புக் குயர்ந்த மனைக்குநந் தாத விளக்கொளியே.—P. S. D.

முகவுரை

தமிழ்ப்பாஷையிலும் நாடகத்திலும் இயல்பாகவே எனக்கு இருந்த அன்பினால் நான், இருபது வருஷங்களுக்குமுன், "இளங்கன்று பயமறியாது" என்றபடி துணிந்து சிலநாடகங்களை எழுதினேன். அவை, நாடகக்கலையின் வளர்ச்சியையே முக்கிய நோக்கமாகக்கொண்டு சிறப்புற்று விளங்கிய சென்னைச் சசி விலாச சபையில் அரங்கேற்றப்பட்டன; இரண்டொரு நாடகங்கள் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன. மேற்கூறிய சபையில் அரங்கேற்றப்பட்ட நாடகங்களில் இதுவும் ஒன்று. முன்பு நான் அச்சிட்ட 'ப்ரஹ்லாதன் அல்லது உத்தம பக்தன்' என்னும் நாடகத்தின் முடிவில், சில நாடகங்கள் விரைவில் பதிப்பிக்கப்படுமென்று குறித்திருந்தேன். அவற்றுள் இந்நாடகமும் ஒன்று. வித்வான்கள் மேற்கொள்ளுதற்குரிய இச்செயலை, அவர்தம் முறையில் தமிழ் பயிலாத நான் மேற்கொண்டதிற் சிறிது அச்சம் உண்டாயிற்று. பிற நாட்டாரது கருத்தையும் பிறபாஷைச் சொற்களையும் வாக்கிய அமைப்பையும் மேற்கொண்டு, தமிழ்மொழியின் அடிப்படையான லக்ஷணங்களை அறவே புறக்கணித்து ஒதுக்கி, நடிப்பதற்கேற்ற அம்சங்கள் மிகக் குறைவாகக்கொண்டு சமீபகாலத்தில் வெளிவந்த பல நாடகங்களால் தமிழுக்கு நேர்ந்த குறை எனது நாடகங்களாலும் நேருமோவென்றஞ்சி, நான் எழுதிவைத்திருந்தவைகளைக் குறித்தபடி வெளியிட மனமில்லாதிருந்தேன். சில மெய்யன்பர்களிடம் இந்நாடகத்தையும் மற்றவற்றையும் காட்டியபோது அவர்கள் அளித்த ஊக்கம் இவை வெளியிடப்படுவதாற் குறையொன்றுமில்லை யென்ற நினைவை உண்டாக்கியது.

அன்றியும், வடமொழியிற் காளிதாஸனையும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரையும், வங்கபாஷையில் த்விஜேந்திர லால் ராயையும் போலத் தமிழிலும் சிறந்த வித்வான்கள் நாடகம் இயற்ற முன்வரும் வரையில் நாடகம் வெளிவராமல் இருப்பது சாத்தியமாகுமா? ஆதலின், எனது அன்பின் வழி உண்டான இம்முயற்சி நாடகப் பிரியர்களுக்கு இன்பத்தையே தருமென்று நம்பியும், இக்காலத்தில் கையெழுத்துப் பிரதிகளுக்குப் பலவகையில் நேரும் ஆபத்தை நினைந்தும் இந்நாடகத்தை வெளியிடலானேன்.

தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் சாரங்கதரனென்னும் நாடகத்தைப் புதுமுறையிற் சில மாற்றங்களைச் செய்து இவ்வுருவத்தில் அமைக்கலானேன். கதாநாயகியாகிய சித்திராங்கி நரேந்திரனை மணந்து பின்பு சாரங்கதரன்மேல் மோகம் கொள்வதாக உள்ளது பழையகதை. இது உயர்ந்த லக்ஷியங்களையே காவியங்களின் பாவிகமாகக் கொள்ளவேண்டுமென்ற நம் வழக்கத்துக்கு மாறானதாகவும், மனைவியர் கடமைக்கு முரணாகவும் இருக்கின்றது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" ஆதலின் அக்குறையை ஒருவாறு மாற்ற முயன்றிருக்கிறேன். இதில் சித்திராங்கி தான் சாரங்கதரனையே மணந்ததாக நம்புகிறாள்; ஆயினும் நரேந்திரன், அவள் தன்னையே மணந்ததாக எண்ணுகிறான்; சித்திராங்கி நரேந்திரன்பால் வந்தபின்னர் அவனது வஞ்சகத்தை யறிந்தும் சாரங்கதரன்பா லுள்ள காதலினால் அங்கே இருந்து வருகிறாள். பிறகு சாரங்கதரன் அவள் இருக்குமிடத்திற்கு வர நேரும்போது அவள் தன்காதலை வெளிப்படுத்துகிறாள். அவன் அவளைத் தாயென்று கூறிச் சென்றுவிடுகின்றான். நரேந்திரன் இந்நிகழ்ச்சியை மாறுபாடாக

அறிந்து சாரங்கதரனுக்கு மரணதண்டனை விதிக்கின்றான். சித்திராங்கி முதலியோர் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

இதில் சித்திராங்கி உண்மைக் காத லுடையவளாக இருந்து, பின் வஞ்சிக்கப்பட்டதை யறிந்து மனவுறுதி பூண்கின்றாள். அவளுடைய மோகம் பெருகியதால் சாரங்க தரனுடைய விருப்பமின்றியே அவனோடு குலாவ முயல்கின் றாள். இந்த ஒருகுறையை யன்றி அவளுடைய பிறசெயல் கள் அவளைச் சிறந்த கதாநாயகியாகக் காட்டுகின்றன.

சித்திராங்கி தன் மனத்துள்ள காதலைச் சாரங்கதர னுக்கு அறிவிக்கும் சமயங்களிலும் வேறுசில சமயங்களி லும் இரண்டுபொருள் அமையும்படி அவளுடைய பேச்சு அமைக்கப்பட்டிருக்கின்றது. கூடியவரையில் தன் கருத்து நிறைவேறவேண்டு மென்றும் அதை வெளிப்படையாகக் காட்டக் கூடாதென்றும் அவள் எண்ணுவது பெண்களின் அச்சமுடைய மனோவியல்புக்கு ஏற்றதாக விருக்கின்றது. அவர்கள் துணிந்தால் எதையும் செய்வார்களென்பதை அவளுடைய இறுதிச் செயல்கள் விளக்குகின்றன.

இந்த நாடகத்தை என்னுடைய வேண்டுகோட்கிணங் கிப் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் சாமிநாதையரவர்கள் தம் மாணாக்கர்களுள் ஒரு வரைக்கொண்டு திருத்தச்செய்து அனுக்கிரகம் செய்தார் கள். இவ்விஷயத்தில் தமிழ்ப்பெரியாராகிய ஸ்ரீ ஐயரவர் களுக்கும், பலவகையில் எனக்கு உதவிபுரிந்த அவர்களு டைய மாணாக்கருக்கும் நான் என்றும் கடப்பாடுடையேன்.

சென்னை,
1—3—1937.

பா. ஸ்ரீ. துரைஸ்வாமி ஐயங்கார்.
(*Senior Accountant,
Postal Audit Office, Madras*)

நாடக பாத்திரங்கள்

---

1. நரேந்திரன் ... ராஜமகேந்திர மன்னன்.
2. சித்திராங்கதன் ... பாண்டியநாட்டரசன்.
3. சுப்பாசாஸ்திரி ... நரேந்திரனுடைய புரோகிதன்.
4. நீலகண்டசாஸ்திரி ... பாண்டியனுடைய புரோகிதன்.
5. சாரங்கதரன் ... நரேந்திரனுடைய மகன்.
6. சுமந்திரன் ... சாரங்கதரன் நண்பன்.
7. சேவகன் ... சித்திராங்கியின் உத்தம [ஊழியன்.
8. ரத்னாங்கி ... நரேந்திரன் மனைவி.
9. சித்திராங்கி ... சித்திராங்கதனுடைய மகள்.
10. கனகாங்கி ... சித்திராங்கியின் சேடி.

கொலையாளிகள்.

கதை நிகழ்ச்சி :

சிறுபான்மை மதுரையிலும் பெரும்பான்மை ராஜமகேந்திரத்திலும்.

சித்திராங்கி

அல்லது

கைகூடாக் காதல்

கடவுள் வணக்கம்

[கலித்துறை]

காரங்க மேனிக் கடவுள் பயந்தவெங் காமனம்பின்
வீரங் கதறமெய் வெந்தழ லாக விழையுமுள்ளச்
சீரங்க மேவித் திகழ்சித் திராங்கி செறிந்தபுகழ்ச்
சாரங் கதரன் சரித நடிக்கச் சரணமக்கே.

அங்கம் 1.

களம் 1.

இடம்: மதுரையில் ஒரு சத்திரம்.
பிரவேசம்: சுப்பாசாஸ்திரி.

சுப்பாசாஸ்திரி—ஐயோ, ஈச்வரா! நான் பட்ட பாடு நாயும் படாது. பாடுதான் பட்டேனே, ஏதேனும் பலனைக் கண்டேனா? இவைகளை யெல்லாம் யோசித்தால் என் எண்ணம் ஈடேறாதென்றே தோன்றுகிறது. வீணாய் இக்காரியத்தில் ஏன் தலையிட்டுக்கொண்டேனோ' தெரியவில்லை. பிராமணனுக்குப் பின்புத்தி என்பது சரியாய்ப் போயிற்று. இல்லாவிட்டால், முதலில் ஒப்புக்கொண்டு பிறகு யாரேனும் இப்படி வேதனைப் பட்டுச் சாவார்களா? இந்தப் பாழும் கல்யாணத்தை

எப்படி முடித்து வைக்கப்போகின்றேனே? தெரிய வில்லே. ஆனல் சாரங்கதரனுக்கென்று ஒருத்தி பிறந் திருப்பாளேயன்றிப் பிறவாதிராள். ஏதோ காலவித்தி யாசம் அவளே எனக்குக் காட்டாமல் என்னே ஊரூ ராய் அலேயச் செய்கின்றது. இல்லாவிட்டால், எத் தனேயோ விருத்த விவாகங்களேயும் விதவா விவாகங் களேயும் வதூவரர்களுக்குத் தெரியாமலே செய்து வைத்த எனக்கு ஒரு ராஜ விவாகத்தைச் செய்து வைப்பது கஷ்டமாய்ப் போகுமா? தான் போனல் தண்ணீரும் கிடைக்காதாம், தயிருக்குச் சீட்டெழுதி அனுப்பினனும் என்ற கதையாய் முதலிற் பெண் கிடைப்பதே கஷ்டமாயிருக்கின்றது; இந்த லட்சணத் துக்குப் பார்த்துக்கொண்டு வருகிற பெண் தன்னேப் போன்ற வயோதிகனும் பார்த்து மயங்கத்தக்க ரூபவதியா யிருக்கவேண்டுமாம். உம், — உரலில் தலே யைக் கொடுத்தாய்விட்டது; உலக்கைக்குப் பயந்து என்ன பயன்? எதற்கும் இச்சித்திராங்கத பாண்டி யனுக்கு ஒரு பெண் இருக்கின்றளாம். அந்த ஆசை யையும் பார்த்துவிடுவோம். [ஒரு பக்கமாய்ப் படுத்துக் கொள்ளுகிறன்.]

பிரவேசம்: நீலகண்டசாஸ்திரி.

நீலகண்டசாஸ்திரி—ஓய்! யார்காணும் நீர்? இந்த இடத் துக்கும் போட்டியாக வந்து சேர்ந்தீர். எழுந்து வேறெங்கேனும் போய்ப் படுத்துக்கொள்ளும்.

சுப்பாசாஸ்திரி—ஐயா! நான் அயலூர். இந்த அர்த்த ராத்திரியில் வேறெங்கும் போக வழி தெரியாது. தயை செய்து அனுமதித்தால் இங்கே சற்றுத் தலே சாய்த்துவிட்டு உதய மெழுந்து ராஜ தரிசனம் பண்ணி

விட்டுப் போகிறேன். வேண்டுமானால் தாங்களும் இப்படியே படுத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஒருவிதமான ஆக்ஷேபமும் இல்லை.

நீலகண்டசாஸ்திரி—சே! கொஞ்சம் ஆக்ஷேபம் பண்ணித்தான் பாருமே?

சுப்பாசாஸ்திரி—ஐயா, நான் தங்களோடு சண்டைபோட வரவில்லை.

நீலகண்டசாஸ்திரி—ஆனால் நான்தான் வந்தேன்போல் இருக்கிறது?

சுப்பாசாஸ்திரி—தாங்களும் சண்டைக்கு வரவில்லை. நானும் சண்டைக்கு வரவில்லை. என்னுடைய கஷ்டகாலம்: எந்த வேளையில் ராஜ நரேந்திரனிடமிருந்து புறப்பட்டு வந்தேனோ தெரியவில்லை; போகிற இடத்திலெல்லாம் போர் தொடுக்கிறதாய்ப் போயிற்று! [எழுந்துட்கார்ந்து] ஐயா, தாங்களே படுத்துக்கொள்ளுங்கள்.. நான் போய்வருகிறேன்.

நீலகண்டசாஸ்திரி—அடா டா டா! சுப்பாசாஸ்திரிகளா! முன்னமே சொல்லி யிருக்கக்கூடாதா? என்னவோ இந்தப் பாழும் கல்யாண சிந்தையில் ஒன்றும் தோன்றாமல் பெரியவர்களிடத்தில் அபசாரப் பட்டுவிட்டேன். ராஜமகேந்திரத்திலிருந்து எப்பொழுது வந்தீர்கள்?

சுப்பாசாஸ்திரி—தாங்கள் யார்? தெரியவில்லையே.

நீலகண்டசாஸ்திரி—நான்தான் குப்பாசாஸ்திரி குமாரன் நீலகண்டன்.

சுப்பாசாஸ்திரி—அப்படியா! நிற்கின்றீரே! உட்காரும். உம், என்ன சமாசாரம்? ஆத்தில் எல்லோரும் க்ஷேமந் தானே?

நீலகண்டசாஸ்திரி—எல்லாம் பெரியவர்களுடைய ஆசீர்வாதம் !

சுப்பாசாஸ்திரி—உம், சரி. இந்தப் பாண்டியனுக்கு ஒரு பெண் இருக்கின்றாளாமே? அவளுக்குக் கல்யாணமாய் விட்டதா ?

நீலகண்டசாஸ்திரி—அதை ஏன் கேட்கிறீர்? அந்த இழவுக்காகத்தான் இவ்வளவு கஷ்டம்.

சுப்பாசாஸ்திரி—ஏன் ? அதில் என்ன கஷ்டம்?

நீலகண்டசாஸ்திரி—பெண் என்னவோ அதிர்ஷ்டசாலிதான். புருஷன்தான் அகப்படவில்லை. பாண்டியனோ எப்படியாவது அவளுக்கு இந்த வருஷம் கல்யாணத்தைச் செய்துவிடவேண்டுமென்று அவசரப்படுகிறான். இதற்கு என்ன செய்கிறதென்று இப்படி ஏக்கம்பிடித்து அலைகிறேன்.

சுப்பாசாஸ்திரி—சாஸ்திரிகளே, நானும் அப்படிப்பட்ட கஷ்டத்தில்தான் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறேன். ஊரூராய்ச் சுற்றி என் உள்ளங்கால்கூடத் தேய்ந்து போயிற்று. இனிமேல் குலமும் கோத்திரமும் பார்த்துப் பிரயோசனம் இல்லையென்று விட்டுவிட்டேன். பறைப் பெண்ணாய் இருந்தாலும் சரி; கண்ணுக்கு அழகாய் இருந்தால் போதும். எப்படியாவது முடிபோட்டுவைத்து விடுகிறேன்.

நீலகண்டசாஸ்திரி—நீர் யாருக்குப் பெண் தேடுகிறீர் ?

சுப்பாசாஸ்திரி—அதென்ன அப்படிக் கேட்கிறீர்? நம்முடைய நரேந்திர மகாராஜாவின் குமாரன் சாரங்கதரனுக்குத்தான்.

நீலகண்டசாஸ்திரி—என்ன ? சாரங்கதரனுக்கா? ஆனால், நான் ராஜமகேந்திரத்துக்கு வந்திருந்தபோது ஏன் எனக்கு ஒருவரும் சொல்லவில்லை ? சாஸ்திரிகளே, விளையாடுகிறீரா என்ன ? நான் இரகசியமாய் விசாரித்ததில் முதலில் நரேந்திர மகாராஜாவுக்கல்லவோ கல்யாணம் நடக்கப் போகிறதென்று சொன்னார்கள்.

சுப்பாசாஸ்திரி—சரிதான். இதிலேயே விளையாடுவது யார் என்று தெரிந்துவிட்டது.

நீலகண்டசாஸ்திரி—இல்லை; சாஸ்திரிகளே, வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறேன். இல்லாவிட்டால், அதற்கென்று போனவன் காரியத்தை முடிக்காமல் வந்திருப்பேனா ?

சுப்பாசாஸ்திரி—போகட்டும். நீர் யாரை என்ன கேட்டீர் ?

நீலகண்டசாஸ்திரி—சாரங்கதரனுக்கு இந்த வருஷம் கல்யாணம் செய்வதாக மகாராஜாவுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டோ என்று மந்திரியைக் கேட்டேன்.

சுப்பாசாஸ்திரி—அதற்கு அவர் என்ன சொன்னார் ?

நீலகண்டசாஸ்திரி—மகாராஜாவின் கல்யாணம் முடியும் வரையில் வேறெந்த விவாகத்துக்கும் முயற்சி நடவாதுபோலிருக்கிறதென்று சொன்னார்.

சுப்பாசாஸ்திரி—அதைத்தான் தாங்கள் அவ்வளவு அழகாக அர்த்தம் பண்ணிக்கொண்டீர்களோ ?

நீலகண்டசாஸ்திரி—ஆனால் மந்திரி சொன்னது பொய்யா?

சுப்பாசாஸ்திரி—பொய்யென்று யார் சொன்னது ? நீர் என்ன கல்யாணமென்று கேட்டிருந்தால் விஷயம் இன்னதென்று தெரிந்திருக்கும்.

நீலகண்டசாஸ்திரி—என்ன கல்யாண மென்று நீரே இப்பொழுது சொல்லுமே.

சுப்பாசாஸ்திரி—என்ன கல்யாணமா? கட்டை முட்டைக் கல்யாணம்! சாகிற கிழத்துக்கு வேறென்ன கல்யாணம் வேண்டியிருக்கிறது?

நீலகண்டசாஸ்திரி—ஆனால் கிழங்கள் அறுபதாம் கல்யாணம் பண்ணிக்கொள்வதில்லையா?

சுப்பாசாஸ்திரி—ஓய்! நீர் அர்த்தம்பண்ணிக்கொண்டதே சரியென்று ஸ்தாபிக்கப் பார்க்கிறீர். மகாராஜா இவ்விஷயத்தில் ஒருவிதமான பிரயத்தனமும் செய்யாததைக் கண்டு வெறுப்படைந்து மந்திரி அதை உமக்குக் கூடமாகச் சொன்னார். அதையே நீர் விபரீதமாக அர்த்தம் பண்ணிக்கொண்டீர்.

நீலகண்டசாஸ்திரி—ஆனால் சாரங்கதரனுக்கு இந்த வருஷம் விவாகம் நடப்பது உண்மைதானே? அப்படியானால், பாண்டியன் பெண்ணைத்தான் முடிவு செய்துவிடுமே.

சுப்பாசாஸ்திரி—ஆமாம்; பெண்ணைப் பாராமலா முடிவு செய்கிறது?

நீலகண்டசாஸ்திரி—இதோ, அவளுடைய படம் என்னிடத்தில் இருக்கின்றது.

சுப்பாசாஸ்திரி—ஆனால், இப்படிக் கொடும் பார்ப்போம். [படத்தை வாங்கிப்பார்த்து] அடாடாடா! என்ன அழகு! என்ன காந்தி! கோடிசந்திர பிம்பம்போற் பிரகாசிக்கும் இந்தப் பெண்ணை வைத்துக் கொண்டா பிள்ளைக்கு அலைகிறேன் என்றீர்? 'நான்', 'நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு விவாகம் செய்துகொள்வார்களே!

நீலகண்டசாஸ்திரி—அழகுமட்டும் இருந்தால் ஆய்விடுமா? எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா?

சுப்பாசாஸ்திரி—அழகிருந்தால் அதிர்ஷ்டம் தானாக வருகிறது. அது கிடக்கட்டும்; சாரங்கதரனுக்கு இவளைக் கல்யாணம் செய்துவைத்தால் எனக்கென்ன தருகிறீர்?

நீலகண்டசாஸ்திரி—உம்மாலும் ஆகாது; உம்முடைய பாட்டனாலும் ஆகாது. ஏனென்றால், அதில் ஒரு கஷ்டமிருக்கின்றது.

சுப்பாசாஸ்திரி—என்ன கஷ்டம்? சொல்லுமே. பொன் விக்கிரகத்தை வைத்துக்கொண்டு 'கஷ்டம், கஷ்டம்' என்று கிடந்தலைகிறீர்?

நீலகண்டசாஸ்திரி—வேறொன்றுமில்லை. பெண்ணின் ஜாதகம் அவ்வளவு சிலாக்கியமாக இல்லை.

சுப்பாசாஸ்திரி—அப்படி என்ன தோஷம் இருக்கப்போகிறது? சொல்லுமே.

நீலகண்டசாஸ்திரி—என்ன தோஷமா? முதலில் மூல நட்சத்திரம்.

சுப்பாசாஸ்திரி—அப்படியானால் கழுத்தில் நூலாடாது. அவ்வளவுதானே?

நீலகண்டசாஸ்திரி—என்ன காணும் இது? எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, அவ்வளவுதானே என்று வாய் கூசாமற் சுலபமாய்ச் சொல்லிவிட்டீர்?

சுப்பாசாஸ்திரி—ஓய்! நீர் லோக விவகாரம் கொஞ்சங் கூடத் தெரியாதவரென்று நினைக்கிறேன். இவைகளின் பலா பலன்களை க்ஷத்திரியர்கள் என்ன கண்டார்கள்? அப்படிக் கண்டாலுங்கூட ஜோஸ்யர்களு

டைய யுக்தியின் முன் அவர்களுடைய புத்தி எம்மாத்திரம்? இஷ்டப்படி ஜாதகத்தைத் திருத்தி எழுதக் கூடிய சக்தி நமக்கிருக்கும்போது நமக்கென்ன பயம்?

நீலகண்டசாஸ்திரி—ஓய்! நீர் முழுப் பூசுணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர்.

சுப்பாசாஸ்திரி—ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலியைக் கட்டு என்று சொல்லியிருக்கிறது. ஆகையால், நீர் சும்மா இரும். நான் இந்தக் கல்யாணத்தை எப்படியாவது முடித்துவைக்கிறேன்.

நீலகண்டசாஸ்திரி—சரி. எப்படியாவது உம்மிஷ்டம் போற் செய்துகொள்ளும். எதற்கும் பிள்ளையின் ஜாதகம் கையில் இருக்கிறதா?

சுப்பாசாஸ்திரி—சிறைப்பதற்கென்று வந்தவன் அடைப்பம் இல்லாமலா வருவான்? இதோ பிள்ளையின் ஜாதகம்! இதோ பிள்ளையின் படம்! வேண்டிய அளவு பாரும். [சாரங்கதரன் ஜாதகத்தையும் படத்தையும் கொடுத்து] பிள்ளையின் அழகைப்பற்றி யோசிக்கவேண்டியதே இல்லை. ஜாதகந்தான் கொஞ்சம்—

நீலகண்டசாஸ்திரி—ஓய்! என்ன காணும் இது? இந்த ஜாதகனுக்கு விவாகப் பிராப்தியே இல்லையே?

சுப்பாசாஸ்திரி—ஏன் காணும், விவாகப் பிராப்தியிருந்தால் நாம் இவ்வளவு கஷ்டப்படுவானேன்? நம்முடைய பிரயாசை இல்லாமலே இதுவரையில் முடிந்து போயிராதா? ஜாதகத்தையும் பொய்யாக்கிக் கல்யாணத்தை முடித்து வைக்கத்தான் நான் இக்காரியத்தில் தலையிட்டுக்கொண்டது.

நீலகண்டசாஸ்திரி—அப்படி விவாகம் நடந்தாலும் வதூவரர்களுடைய அந்யோந்ய பாவம் அவ்வளவு திருப்திகரமாய் இராதென்று தோற்றுகிறது.

சுப்பாசாஸ்திரி—இல்லாவிட்டாற் போகிறது. கல்யாணம் ஆன பிறகு அவர்கள் கட்டிப் புரண்டால் நமக்கென்ன? வெட்டி மடிந்தால் நமக்கென்ன? நம்முடைய பஹுமானத்துக்கு ஏதேனும் குறைவு வரப்போகிறதா? அதொன்று மில்லையே? புருஷன் உபயோக மில்லாதவனுல் புனர்விவாகம் கூடாதென்று எங்கேனும் சொல்லி இருக்கிறதா?

[விருத்தம்]

நல்லிய லழிந்து நாதன் நலிவுசெய் திடினும் வேறு
வல்லியின் மயங்கி னுலும் மாண்டன னெனினும் அன்பிற்
புல்லிய போக மில்லாப் புருஷனு னுலும் மண்ணில்
மெல்லியர் பிறரை வேட்டல் விதியென மொழிவர் மேலோர்.

இது தங்களுக்குத் தெரியாதுபோ லிருக்கிறது?

நீலகண்டசாஸ்திரி—தெரியாம லில்லை. தெரிந்திருந்தும் ஒரு பொருத்த மில்லாத விவாகத்தைச் செய்துவைத்தால் பிறகு நாம் இவ்வூரில் தலைகாட்ட முடியுமா?

சுப்பாசாஸ்திரி—அதனுல் என்ன கெட்டுப்போகிறது? கிடைக்கிற பஹுமானத்தை வாங்கிக்கொண்டு வேறு எங்கேனும் போயிருந்தாற் போகிறது.

நீலகண்டசாஸ்திரி—ஓய்! நீர் பெரிய விதண்டாவாதக்காரர். உம்முடைய சித்தாந்தம் எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை.

சுப்பாசாஸ்திரி—பிடிக்காவிட்டால் சும்மா இரும். நான் எப்படியாவது இந்தக் கல்யாணத்தை முடித்து வைத்

துப் பஹுமானத்தைப் பெறுகிறேன். அக்கிரமமாகச் சம்பாதிக்கிற பொருள் வேண்டாமென்றால் உம்முடைய பஹுமானத்தையும் எனக்கே கொடுத்துவிடும்.

நீலகண்டசாஸ்திரி—அதற்காகவா அடிபோடுகிறீர்? நம்பினவர்களைக் கைவிடக் கூடாதே என்று இவ்வளவு தூரம் தர்க்கித்தேனே ஒழிய, வருகிற லாபத்தை உம்மிடம் கொடுத்துவிடுவதற் கல்ல.

சுப்பாசாஸ்திரி—அப்படியானால் உமக்கு இந்த விவாகம் சம்மதந்தானே?

நீலகண்டசாஸ்திரி—ஸர்வ ஸம்மதம்! ஆனால் ஒன்று: ஜாதகப் பொருத்தத்தைப்பற்றிக் கேட்டால் என்னை இழுத்துவிடாதீர்.

சுப்பாசாஸ்திரி—நான் சொல்லுவதற்கு நீரும் குறுக்குச் சொல்லாதீர். என்ன?

நீலகண்டசாஸ்திரி—அப்படியே ஆகட்டும்.

சுப்பாசாஸ்திரி—சரி. வந்த காரியம் முடிந்தது. நான் போய் நரேந்திர மகாராஜாவிடம் சமாசாரத்தைச் சொல்லி இன்னும் எழெட்டு நாளில் கல்யாணத்தை முடித்துவைக்கிறேன். இனி எனக்கு உத்தரவுதானே?

நீலகண்டசாஸ்திரி—சரி; போய் வருகிறது. இந்தப் படத்தை நான் எடுத்துக்கொண்டு போகலாம் அல்லவா?

சுப்பாசாஸ்திரி—நன்றாய் எடுத்துக்கொண்டு போம். நானும் சித்திராங்கியின் படத்தை எடுத்துக்கொண்டு போகிறேன்.

நீலகண்டசாஸ்திரி— சரி. போய்வாரும். ஞாபகமிருக்கட்டும்!

[இருவரும் போகிறார்கள்.]

அங்கம் 1.

களம் 2.

இடம் : சித்திராங்கத பாண்டியனுடைய அரண்மனையில், சித்திராங்கியின் அந்தப்புரம்.

பிரவேசம் : சித்திராங்கி.

சித்திராங்கி—மனமே! என்னுடன் பிறந்து என்னுடன் வளர்ந்த நீ, என்னோடிருந்து என்னைத் தேற்றாமல் இடையில் வந்த ஒருவன்பின் ஓடி என்னைத் தவிக்க விட்டது உனக்குத் தருமமா? அப்படிப் போகத்தான் போனாயே, என்னுடைய மோகத்தையேனும் அவனுக்குச் சொல்லிச் சீக்கிரம் வந்து என்னை மணம் செய்து கொண்டு போகும்படி தூண்டினையா? சாரங்கதரா! ஸரஸ மனோகரா! [கையிலுள்ள அவன் படத்தை முத்தமிட்டு] உன்னுடைய சித்திரப் படத்தைக் கண்டு நான் நித்திரையில்லாமல் வேதனைப்படுவது உனக்குத் தெரியவில்லையா? உறுதியான மோகங்கொண்டவர்கள் எத்தனை காத தூரத்திலிருந்தாலும் தங்களுடைய மோக பலத்தினாலேயே தங்களுக்குள் தோன்றும் ஒவ்வொரு மனோபாவத்தையும் அவ்வப்போதே அறிந்துகொள்வார்களென்று சொல்லுவார்களே. என்னுடைய மனோபாவமட்டும் உனக்குத் தெரியாதிருக்க என்ன காரணம்? என்னுடைய மோகந்தான் உறுதியாக இல்லையா? அல்லது என் மன நிலைமை தெரிந்துதான் உனக்கு மன மிரங்கவில்லையா?

[கலித்துறை]

எய்கின்ற மன்மத னம்புபோற் கண்கள் எழிலியினீர்
பெய்கின்ற வாறங்ங னெண்ணுவை யோவன் பிணிமுகந்தான்
செய்கின்ற வாட்டமுங் கோகில வாட்டமுந் தேர்ந்துயிரிங்
குய்கின்ற வாறருள் செய்குவை யோவுயிர் உத்தமனே.

துரையே! ஏன் மௌனமா யிருக்கிறாய்? உயிரோடு உலாவும் கனக விக்கிரகம்போல் இந்தச் சித்திர ரூபத்தில் நின்று என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நீ உன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லுவது அருமையா? சுந்தரமனோகரா! சாரங்கதரா! உன்னுடைய நிஜரூபத்தைக் காட்டாமல் இன்னும் எத்தனை நாள் என்னை இப்படி வாட்டப்போகிறாய்? துரையே! உன்னுடைய படத்தைக் கண்டதுமுதல்

[கலித்துறை]

தீராத வேகப் பெருமூச்சும் சோகமும் சேர்ந்தண்ணமே
பேராத வாய்ப்புலம் பும்பெரி தாமனம் பின்னயர
வாராத நித்திரை வந்துனைக் காட்டி மறைக்கநினைச்
சேராத காமவெந் தீயினென் மேனி சிதைந்தனனே.

துரையே! சீக்கிரம் வந்து என்னை மணம்புரிந்து செல்வாய்! என்னுடைய சுயநலத்தைக் கருதி நான் இவ்வளவு ஆத்திரப்படுகிறேன் என்று எண்ணவேண்டாம். உன்னுடைய மோகத்துக்காக என்னுடைய தேகத்தையே கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன்; எனினும், நீ என்னுடைய விவாகத்தைக் கோரி வரும்போது நான் உன்னுடைய பிரிவென்னும் சோகத்தால் அழுகுலைந்திருப்பது உனக்குத் திருப்தியாய் இராதென்றே இவ்வளவு ஆத்திரப்படுகிறேன். துரையே! நீ என்னை எப்படியும் மணம் புரிவாயென்ற நம்பிக்கையினால்

ஏதோ வைத்தியக்காரிபோல் உளறிக்கொண் டிருக்கிறேன். உனக்கு என்னிடத்தில் ஆசை யில்லாவிட்டால் என்ன செய்வேன்? உன்னுடைய படத்தைக் கண்டவுடனே உனக்கு மனைவியாக நிச்சயித்துவிட்டேன். ஆகையால், நீ என்னைக் கைவிட்டாலும் நான் ஒருநாளும் என்னுடைய தீர்மானத்தினின்றும் மாற மாட்டேன்.

பிரவேசம்: கனகாங்கி.

சேடீ! என்னடி இந்த நாலைந்து நாளாய் உன்னுடைய முகதரிசனமே மிக அரிதாய்விட்டது?

கனகாங்கி—சொல்லமாட்டாயா பின்னே? நான் கேட்க வேண்டியதை நீ கேட்டுவிட்டால் உன்மேல் ஒரு குற்றமும் இல்லாமற் போய்விடுமென்று நினைத்தாயா?

சித்திராங்கி—ஆனால் என்னிடத்தில் என்ன குற்றம் கண்டாயடி? அரண்மனையில்தானே விழுந்து கிடக்கிறேன்? ஊரைவிட்டு எங்கேனும் ஓடிப்போய்விட்டேனா?

கனகாங்கி—உள்ள நிலைமையைப் பார்த்தால் அது ஒன்றுதான் குறையா யிருக்கிறதென்று தோன்றுகிறது. போகட்டும்; என்னுடைய முகதரிசனம் இனி உனக்கு எதற்கு?

சித்திராங்கி—என்னடி, என்னவோ உளறுகிறாய்? மனத்தில் ஏதோ ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் ஏதோ ஒன்றைச் சொல்லுகிறாயே?

கனகாங்கி—பெண்களின் வீரங் கதறியோட வெங்கணை கொடுக்கும் சாரங்கதரனுடைய வலையில் அகப்பட்டவர்களுக்கு என்னுடைய வார்த்தை எப்படிப் புலப்படும்?

சித்திராங்கி—ஆனால் அப்படிப்பட்ட மதனவஸ்தையிலா நான் இருக்கிறேன்?

கனகாங்கி—என்னைக் கேட்பானேன்? சித்திரப் படத்தைக் கேட்டால் தெரிகின்றது. எத்தனை துரையே! எத்தனை முத்தம்! ஆனால்தானென்ன? இப்படி வெட்கத்தை விட்டவர்களை நான் பார்த்ததே இல்லை.

சித்திராங்கி—சேடீ! நான் சொல்லிக்கொண்டிருந்தவைகளை நீ மறைந்திருந்து கேட்டாயா என்ன?

கனகாங்கி—இவைகளை மறைந்திருந்து கேட்கவேண்டுமா? உன்னுடைய ரகசியம் உனக்குமட்டுந்தான் தெரியுமென்று நீ நினைத்திருக்கிறாய். மற்றவர்களைக் கேட்டாலல்லவோ அது ஊரறிந்த ரகசியமென்று தெரியும்.

சித்திராங்கி—இருக்கட்டும். என் வருத்தம் தீர வழி ஏதேனும் ஏற்பட்டதா? போன புரோகிதர் வந்தாரா?

கனகாங்கி—சித்திராங்கி! உனக்கு இப்பொழுது என்ன தெரிந்ததென்று இப்படி ஆத்திரப்படுகிறாய்?

சித்திராங்கி—ஒன்றும் தெரியாததனால்தான் வேதனைப் படுகிறேன். தெரிந்திருந்தால் வருத்தப்படுவேனா?

கனகாங்கி—என்னடி? நான் ஒன்று சொல்லுகிறேன்; நீ ஒன்று சொல்லுகிறாயே! தன்னுடைய மனோகரனைக் கூடிச் சுகித்துச் சகல போக பாக்கியங்களையும் அனுபவித்துப் பிரிந்தவள்தான் இப்படி விரக வேதனைப்பட்டு உருகுவது ஸகஜம். உனக்கோ இன்னும் விவாகமே ஆகவில்லை; இதற்குள் இப்படி ஆத்திரப்பட்டுத் தவிப்பது நன்றா யிருக்கிறதா? சாரங்கதரனுடைய கருத்தை அறியாமல் அவன்மேல் மனத்தைச் செலுத்தலாமா? உனக்கு ஏன் இது தெரியவில்லை?

சித்திராங்கி—சேடி, என்னையும் அறியாமல் தோன்றிய மோகத்துக்கு நான் என்ன செய்வேண்டி ?

கனகாங்கி—என்ன செய்வாயா ? சாரங்கதரன் உன்னை விவாகம் பண்ணிக்கொள்ள இணங்காவிட்டால் ?

சித்திராங்கி—இணங்காவிட்டால் என் பிராணனையேனும் விடுவேனே ஒழிய வேறொருவனைத் தொடுவேனென்று எண்ணுதே. அன்றியும் நீ எனக்கு உயிர்த்துணையா யிருக்கும்போது எனக்கு என்ன குறை ? நீ மனம் வைத்தால், சாரங்கதரன் இங்கு வந்து என்னை மணம் புரிந்து செல்லாமலிருப்பானு ?

[கலித்துறை]

எறிகின்ற வேலெனுங் கண்மட வாயென தின்னலின்னே
அறிகின்ற வண்ணஞ்சொல் வாய்கன் றேகரை யத்திரத்தி
மறிகின்ற தெண்டிரைச் சங்கார வாரிக்கும் வாவியெங்குஞ்
செறிகின்ற ராஜ மகேந்திர மாநகர்ச் செம்மலுக்கே.

கனகாங்கி—சரிதான் ! தூது போகவேண்டிய தொன்று தான் பாக்கி. எனக்கொன்றும் தெரியாது. எப்படி யாவது போய்க்கொள் !

சித்திராங்கி—சேடி ! அப்படிச் சொன்னால் எப்படி ? அப்புறம் எனக்கு என்ன வழி ?

கனகாங்கி—உனக்குத்தான் நீ போகிறதே வழியா யிருக்கிறதே !

சித்திராங்கி—சேடி ! என் மனோகரன் முன்னமே என் மேல் மோகம் கொண்டிராவிட்டாலும் உன் மூலமாக வேனும் என்னுடைய ஆசையின் குணம் தெரிந்து என்னை மணம் புரிந்து செல்வானென்று எண்ணி யிருந்தேனே ! நீயும் என்னைக் கைவிட்டாயே ! இனி எனக்

கென்ன கதி? மலையளவு பாபத்திற் கடுகளவு புண்ணி யம் சேர்ந்தாற்போல் இச்சித்திரப் படத்தையேனும் முத்தமிட்டு மோகம் தீர்த்துக்கொள்ளும் பாக்கியத் தைப் பெற்றேன். ஆகையால் இதையே என் கருத் தில் வைத்து ஆனந்தித்து உயிரை விடுகின்றேன்.

பிரவேசம் : சேவகன்.

கனகாங்கி—ஏனடா? இங் கென்ன வேலை உனக்கு?

சேவகன்—சந்தோஷ சமாசாரம் ஒன்று சொல்லலா மென்று வந்தேன். வேண்டாமென்றால் இதோ போய் விடுகிறேன்.

சித்திராங்கி—சேடீ, வேலைக்காரன்மேல் வீணாக ஏன் வள்ளென்று விழுகிறாய்?

சேவகன்—அவளுடைய தோஷமன்று; அது பூர்வஜன்ம விசேஷம்.

கனகாங்கி—ஆமாம்; நீ மஹா சாதுவல்லவோ!

சேவகன்—நான் சாதுவென்று யார் சொன்னது? சாது வாயிருந்தால் ஸ்திரீகள் இருக்கும் இடத்துக்கு வரு வேனா? ஸதா ஸர்வகாலம் யோகத்திலேயே இருக்க மாட்டேனா?

சித்திராங்கி—அது கிடக்கட்டும். விவாகம் எந்த நிலையில் இருக்கிறது?

சேவகன்—விவாகமா! பாதிக் கல்யாணம் முடிந்து விட்டது; பெண் சம்மதிக்க வேண்டியதுதான் பாக்கி. என்ன? கனகாங்கி, நீ என்ன சொல்லுகின்றாய்?

சித்திராங்கி—அவள்தான் 'எனக்கொன்றும் தெரியாது; எப்படியாவது போய்க்கொள்' என்று சொல்லிவிட் டாளே.

சேவகன்—உண்மையாகவா? அப்படியானால் என்னுடைய விவாகத்தை எப்படியாவது முடித்து வைத்து விடுங்கள். நான் தங்களுடைய விவாகத்தை எப்படியாவது முடித்துவைக்கிறேன்.

கனகாங்கி—'உனக்குப் பசியா மருந்து கொடுக்கிறேன்; எனக்குப் பழங்கஞ்சி கொஞ்சம் வார்க்கிறாயா' என்று கேட்டானும்! மற்றவர்களுடைய விவாகத்தை முடித்து வைக்கச் சக்தி யுள்ளவனுக்குத் தன் விவாகத்தை முடித்துக்கொள்ளவா சக்தியில்லாமற் போய்விடும்?

சேவகன்—சக்தி யில்லாமற் போகவில்லை. அதில் ஒரு கஷ்டமிருக்கின்றது.

சித்திராங்கி—என்ன கஷ்டமோ?

சேவகன்—தங்களுடைய விவாகத்தைப் போல்வதா என்னுடைய விவாகம்? பிள்ளை சம்மதித்தானோ இல்லையோ, தாங்கள் சம்மதித்துவிட்டீர்கள். என்னுடைய விஷயம் அப்படியன்று. பிள்ளை சம்மதித்தாலும் பெண் சம்மதிப்பது கொஞ்சம் கஷ்டமா யிருக்கிறது.

கனகாங்கி—உனக்கு எதற்காக இப்பொழுது விவாகம்?

சேவகன்—எனக்கு விவாகம் வேண்டிய தில்லைதான்; ஆனால் இந்தப் பாழும் தேகம் வேண்டுமென்கிறது.

கனகாங்கி—அப்படியானால் செய்துகொள்ள வேண்டியது தான். தேகத்துக்காக விவாகத்தை விரும்புகிறவன் மோகம் மிக உறுதியாகத்தான் இருக்கும்!

சேவகன்—அப்படிச் சொல்லிவிடாதே. எனக்கு வாய்க்கிற பெண்டாட்டி மட்டும் அழகாயிருந்தால் அவள்மீது நான் என்றைக்கும் ஆசையா யிருப்பேன்.

கனகாங்கி—உன்னுடைய லட்சணத்துக்கு உனக்கு மனைவி அழகாய் இருக்கவேண்டாமோ பின்னே!

சேவகன்—நான் அழகாய் இல்லாததனுல்தான் வருகிற மனைவியாவது அழகா யிருக்கட்டு மென்று கோருகிறேன். மேலும், அழகான மனைவி ஒருத்தி யிருந்தால் பழகாதவர்கள் எல்லாம் என்னிடம் பட்சம் பாராட்டுவார்கள். எல்லோரும் என் வீடேறி வந்து என்னுடைய யோக க்ஷேமங்களை விசாரிப்பார்கள்.

கனகாங்கி—போதும்! வாயை மூடிக்கொண்டு போ! காரணம் மிகவும் நன்ருயிருக்கிறது!

சேவகன்—நான் சொன்னல் அப்படித்தான் இருக்கும். என்ன இருந்தாலும், ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா?

சித்திராங்கி—சேடி, அவன் வாயை ஏன் கிளப்புகின்ருய்? — சேவகா, அப்படியே விவாகம் செய்துகொள்வாய்: புரோகிதர் வந்தாரா என்று போய்ப் பார்த்துக்கொண்டு வா!

சேவகன்—இதோ, ஒரு நிமிஷத்திற் போய்ப் பார்த்துக் கொண்டு வருகின்றேன். [போகின்ருன்.]

சித்திராங்கி—சேடி, நீ யல்லவோ பாக்கியசாலி!

கனகாங்கி—சித்திராங்கி, அப்படித் திடீரென்று எனக்கு என்ன பாக்கியம் வந்துவிட்டது?

சித்திராங்கி—ஆ ஹா ஹா! ஒன்றும் தெரியாதவள்போல் என்ன நடிக்கிருய்! சேவகன் இத்தனை நாழிகை கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்றது யாரை என்று நினைத்தாய்?

கனகாங்கி—அப்படியா சமாசாரம்! அவன் கெட்ட

கேட்டுக்கு நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான் ஒரு குறை.

சித்திராங்கி—ஆனால் அவனுக்கு என்னடி குறை? அவனைக்காட்டிலும் புத்திசாலி வேறொருவன் உனக்குக் கிடைக்கப் போகிறானா?

கனகாங்கி—அவன் புத்திசாலி என்பது மட்டுமா? முகத்தைப் பார்த்துக்கொண் டிருந்தாலும் போதுமே.

சித்திராங்கி—பைத்தியக்காரி! முகம் அழகா யிருந்து என்ன பிரயோசனமடி? அகமல்லவா அழகா யிருக்க வேண்டும்?

கனகாங்கி—ஆனால், அகத்தின் அழகைப் பார்த்துத்தான் நீ சாரங்கதரனைக் கணவனாக வரித்தாயோ?

சித்திராங்கி—சந்தேகமென்ன? அவனுடைய ரூபத்தைக் கண்டபோதே அவனுடைய குணம் கோடிபெறும் என்று தான் நான் அவனை என் பிராணேச்வரனாய் வரித்தேன். அழகு ஐசுவரியத்தில் என்னடி இருக்கிறது? உறுதியான மோகம் ஒன்றுதான் இந்த லோகத்தில் இன்பம் தருவதாகும். அகம் மட்டும் நன்றாயிருந்தால் முகம் தானாகவே அழகுபெறும்.

கனகாங்கி—உண்மைதான். சாரங்கதரன் உன்னை விவாகம் செய்துகொள்ள இணங்காமல் மட்டும் இருக்க வேண்டும். அப்பொழுது சொல்லுகிறேன், இந்த உபந்நியாச மெல்லாம் எவ்வளவு உண்மை யென்று.

சித்திராங்கி—பைத்தியக்காரி! சாரங்கதரனுக்கு என் மேல் ஆசை யில்லாமற் போனதனாலேயே எனக்கு அவன்மேலுள்ள ஆசை யெல்லாம் போய்விடும் என்று எண்ணினையா? ஒருவர்மேல் உறுதியான உள்ளன்பு

வைத்து, அவர் எவ்வளவு மறந்திருந்தாலும் அவரையே நினைத்து வருந்தும் பாக்கியம் சாதாரணமாய் எல்லோருக்கும் எளிதிற் கிடைக்கக்கூடிய தன்று.

கனகாங்கி—இப்பொழுது அப்படித்தான் தோற்றும்.

பிரவேசம் : சித்திராங்கதன்.

அதோ, உன் தந்தை வருகிறார்போ லிருக்கின்றது.

சித்திராங்கதன்—குழந்தாய் ! என்ன செய்கிறாய் ?

சித்திராங்கி—அப்பா ! நமஸ்காரம் ! சேடியோடு வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தேன். என்ன விசேஷம் ? ஏதோ கவலையுடன் வந்ததாகத் தெரிகிறதே. என்ன காரணம் ?

சித்திராங்கதன்—விசேஷம் ஒன்றுமில்லை.

[விருத்தம்]

மண்ணையே ஆளு கின்ற மன்னனு கியுமென் தெய்வப்
பெண்ணையே வரிப்போ ரின்றிப் பெருந்துயர் தனக்கா ளானேன்
கண்ணையே போன்ற நங்காய் கடிமணம் குறித்து னக்கு
வண்ணமா மாலை சூட்டி வதுவைசெய் விக்க வந்தேன்.

ஆகையால் உன்னுடைய அபிப்பிராய மென்ன ?

கனகாங்கி—அவளுடைய அபிப்பிராயத்தைக் கேட்பானேன் ? அவள்தான் எப்பொழுது கல்யாண மென்று சொல்லப்போகிறார்கள் என்று காத்துக்கொண்டிருக்கிறாளே.

சித்திராங்கி—சேடி, நீ சும்மா இரு. அப்பா ! ஸ்திரீகளுக்கு இவ்விஷயத்தில் என்ன சுதந்திரம் இருக்கிறது ?

சித்திராங்கதன்—கண்ணே, அப்படியன்று. நீ ஒன்றும் தெரியாதவளானால் என் இஷ்டம்போல் உனக்கு விவாகம் செய்துவைப்பது நியாயமாகும். நீயோ சகல கலைகளை

யும் கற்றிருப்பதோடு லோகானுபவமும் உடையவள். ஆகையால் உன் மனத்துக் கிசைந்த புருஷனை நீயே தேடிக்கொள்ளத் தகுந்தவள். நீ கோரிய கணவன் யாரென்று சொன்னால் அவனை எப்படியாவது உனக்கு விவாகம் செய்துவைக்கின்றேன்.

சித்திராங்கி—தந்தையே, என்னுடைய கோரிக்கையில் என்ன இருக்கிறது?

கனகாங்கி—அவளைக் கேட்டால் அவள் அப்படித்தான் சொல்லுவாள். அவள் கோரிய கணவன் சாரங்கதரன்.

சித்திராங்கி—உன் கண்ணைக் குத்த! சுமக்கிறவன் சுமக்கிறான் நமக்கென்ன வென்று வாயை மூடிக்கொண்டு சும்மா இராமல் உன் வஞ்சனையைக் காட்டுகிறாயா?

கனகாங்கி—'எல்லோருக்கும் வருவதைச் சொல்லித் தான் போய்க் கழுநீர்ப் பானையில் விழுமாம் பல்லி' என்றது போல் சற்றுமுன் சேவகனைக் கோபித்துக் கொண்டதற்கு என்னை அடக்கினாயே? இப்பொழுது நீ ஏன் என் மேல் வள்ளென்று விழுகிறாய்?

சித்திராங்கதன்—கண்ணே, வீணாய் அவளை ஏன் கோபித்துக்கொள்கின்றாய்? என்னிடம் சொல்ல நீ கூச்சப்படுவா யென்று அவள் சொன்னாள். அதில் என்ன தவறு? உன் அபிப்பிராயம் அதுவானால் உன் இஷ்டம்போல் சாரங்கதரனையே உனக்கு மணம் செய்துவைக்கின்றேன்.

பிரவேசம்: சேவகன்.

சேவகன்—உம், வந்துவிட்டார்கள்.

சித்திராங்கதன்—யார் வந்துவிட்டார்கள்?

சேவகன்—புரோகிதர்.

சித்திராங்கதன்—எங்கே? ஒருவரையும் காணோமே?

கனகாங்கி—அந்தப் பைத்தியக்காரன் வார்த்தையை மகாராஜா மெய்யென்று நம்பலாமா?

சேவகன்—என்னதான் உன் விஷயத்தில் நான் பைத்தியக்காரனு யிருந்தாலும் அதை நீ மகாராஜாவிடத்திலுமா சொல்லவேண்டும்.

பிரவேசம் : சுப்பாசாஸ்திரி, நீலகண்டசாஸ்திரி.

வரவேண்டும்! வரவேண்டும்! உங்களுக்குத் தொண்ணூற்றென்பது வயது! சற்று முன்புதான் தங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தோம்.

சித்திராங்கதன்—அதென்னடா அது? நூதன ஆசீர்வாதமா யிருக்கின்றது?

சேவகன்—இல்லை; நினைக்கும்போது வராமல் ஒருநிமிஷம் கழித்து வந்ததனால் நூறு வயதென்று சொல்லாமல் ஒரு வயதைக் குறைத்துச் சொன்னேன்.

சித்திராங்கதன்—சரி! நீ சற்று வாயை மூடிக்கொண்டு அப்படிப் போயிரு. பூசுரர்காள்! போன காரியம் என்ன வாயிற்று?

[விருத்தம்]

தானமா தவத்தாற் பெற்ற சாரங்க தரனுக் கென்றன்
கானமா மயிலே யீந்து கடிமணந் தான்செய் விக்க
வானமா மதிள்சூழ் ராஜ மகேந்திர மன்ன வன்பாற்
போனபின் நிகழ்ந்த வெல்லாம் புகலுவீ ரின்றெ னக்கே,

நீலகண்டசாஸ்திரி—தங்களுக்கு இந்தவிவாகம் சம்மதந்தானென்று சொல்லிவிட்டால் விவாகம் முடிந்ததென்றே சொல்லலாம்.

சித்திராங்கதன்—எனக்கு இந்த விவாகம் சம்மதந்தானென்று அப்பொழுதே சொன்னேனே.

நீலகண்டசாஸ்திரி—விவாகம் சம்மதந்தான்,—

சித்திராங்கதன்—ஆனால் ?

நீலகண்டசாஸ்திரி—விவாகம் நடக்கவேண்டிய முறைதான் எப்படியோ ?

சித்திராங்கதன்—அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ? நமக்கென்று நூதனமான முறை ஏதேனும் ஏற்படப் போகிறதா ?

சுப்பாசாஸ்திரி—எங்களுக்கு நூதன மில்லை. தங்களுக்கு அப்படித் தோன்றினால் என்ன செய்கிறது என்று யோசிக்கிறோம்.

சித்திராங்கதன்—எதுவா யிருந்தாலும் பாதக மில்லை; சொல்லுங்கள்.

நீலகண்டசாஸ்திரி—வேறொன்று மில்லை. சாரங்கதரமகாராஜா நேரில் வந்து விவாகம் செய்துகொள்ள முடியாமையால் இந்தக் கத்தியை அனுப்பி யிருக்கிறார்.

சேவகன்—சரிதான் ; மாப்பிள்ளை யில்லாத கல்யாணம் !

சித்திராங்கதன்—பூசுரர்காள், தன்னுடைய கல்யாணத்துக்கே வரமுடியாத அவ்வளவு முக்கியமான காரணம் என்ன ?

சுப்பாசாஸ்திரி—வேறொன்று மில்லை. படையெடுத்துவந்த பகைவரை வெல்லும்பொருட்டுச் சாரங்கதரமகாராஜா சண்டைக்குப் போயிருக்கிறார்.

சித்திராங்கதன்—ஆனால் விவாகத்தை அவர் வந்தபின் ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது ?

சுப்பாசாஸ்திரி—வைத்துக்கொள்ளலாம்; ஆனால், அப்புறம் இந்த விவாகம் இப்படியே நடக்கு மென்று என்ன நிச்சயம் ?

சித்திராங்கதன்—சரி; சாரங்கதரன் சண்டையினின்றும் திரும்பி வராவிட்டால் ?

சேவகன்—விவாகத்தை இப்பொழுதே முடித்துவிட்டு அவருக்குச் சொல்லியனுப்பினல் திரும்பி வந்துவிடுகிறார். சித்திராங்கியின் மோகத்தில் அப்புறம் அவருக்குச் சண்டைசெய்யக்கூடத் தோன்றுமா ?

நீலகண்டசாஸ்திரி—இல்லை, ஜாதகப் பொருத்தங்களைப் பார்த்ததில் சாரங்கதரனுக்கும் சித்திராங்கிக்கும் இந்த முகூர்த்தத்தில் விவாகம் நடந்தால்தான் நடந்ததென்றும் சித்திராங்கி மனம் வைத்தால்தான் சாரங்கதரன் சிரஞ்சீவியாய் இருப்பானென்றும் ஏற்பட்டது. ஆகையால் தான் இந்த முகூர்த்தம் தட்டிப்போகக் கூடாதென்று—

சேவகன்—கத்தியும் கையுமாய் ஓடி வந்தார்போல் இருக்கிறது !

சித்திராங்கதன்—அதற்காகக் கத்தியை ஏன் கொண்டு வரவேண்டும் ?

சேவகன்—சாரங்கதரன் வரவில்லையென்று அறிந்து சித்திராங்கி எவ்வளவு கஷ்டப் படுவாளோ என்று கருணை கூர்ந்து காரியத்தைச் சுலபமாய் முடிக்கக் கத்தியை அனுப்பியிருக்கலாம்.

நீலகண்டசாஸ்திரி—இல்லை ; இந்தக் கத்திக்கு மாலையிட்டால் சாரங்கதரனுக்கு மாலையிட்டதுபோல் ஆகும் என்று தீர்மானித்து இதை அனுப்பினார்கள்.

சேவகன்—அவ்வளவுதானே ? வேறு விபரீதமான எண்ணம் ஒன்றும் இல்லையே ?

நீலகண்டசாஸ்திரி—அவ்வளவுதான்; இதில் விபரீதம் என்ன இருக்கிறது ?

சேவகன்—இல்லை ; ஒருவேளை இது சித்திராங்கியின் கழுத்துக்குக் கத்தியோ என்று சந்தேகித்தேன். நீங்கள் சொன்னால் சரிதான்.—ஏன், அம்மணி, கத்திக்கு மாலை யிடுவது தங்களுக்கு இஷ்டந்தானே ?

சித்திராங்கதன்—கண்ணே, என்ன யோசிக்கிறாய் ? இப் படிப்பட்ட விவாகம் உனக்கு இஷ்டந்தானா ?

சித்திராங்கி—மகாராஜா, இப்படிப்பட்ட விவாகத்தில் விருப்ப மில்லாதவளாய் நான் மயங்கவும் இல்லை. சாரங் கதரர் சண்டையினின்றும் திரும்பி வரமாட்டார் என்ற சந்தேகமும் இல்லை. எப்பொழுது நான் அவருடைய சித்திரப்படத்தைப் பார்த்தேனோ அப்பொழுதே நான் அவருடைய தர்மபத்தினி ஆய்விட்டேன். ஆகையால் இனி நாம் செய்யும் காரியங்கள் மற்றவர்கள் எங்களை சதிபதி யென்று எண்ணுவதற்கான நிதர்சனங்களே அன்றி வேறொன்றுமல்ல. அப்படிப்பட்ட நிதர்சனம் இந்தக் கத்திக்கு மாலை யிடுவதால் உண்டாகுமோ உண்டாகாதோ என்றுதான் யோசிக்கிறேன். இப்படிப் பட்ட விவாகம் சாஸ்திர சம்மதமானதுதான் என்று இவர்கள் சொன்னால் சரிதான்.

சித்திராங்கதன்—விப்பிரர்களே, நம்முடைய முன்னோர் கள் யாரேனும் இப்படிப்பட்ட விவாகம் செய்திருக் கின்றார்களா ?

சுப்பாசாஸ்திரி—இல்லாவிட்டால் நாங்கள் இதைத் தங்க ளுக்குச் சொல்லுவோமா ? காந்தாரிதேவி கத்திக்கு மாலையிட்டுத்தான் திருதராஷ்டிரனை மணம்புரிந்தது.

சித்திராங்கி—அப்படியானால் இந்தக் கத்திக்கு மாலையிடு வதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை. சேடி,

போய் மாலைகளைக் கொண்டுவா.

நீலகண்டசாஸ்திரி—வேண்டியதில்லை, வேண்டியதில்லை! இதோ நாங்களே மாலைகளைக் கொண்டுவந்திருக்கிறோம்.

சித்திராங்கி—சரி, அக்கத்தியை நான் பார்க்கலாமோ?

நீலகண்டசாஸ்திரி—ஆஹா! அதற் கென்ன தடை?

சித்திராங்கி—[கத்தியைப் பார்த்து] எந்தாய், இதில் 'நரேந்திரன்' என்று எழுதி இருக்கிறதே?

சேவகன்—ஒருவேளை வந்த அவசரத்தில் கத்தியை மாற்றி எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்களோ என்னவோ?

சுப்பாசாஸ்திரி—அப்படி ஒன்றுமில்லை. கத்தி என்னவோ தற்காலம் நரேந்திரருடையதுதான். ஆனால், பிதாவின் சொத்துக்குப் பிள்ளை பாத்தியஸ்தனாதலால், இதற்கு மாலையிட்டால் பிற்காலம் அவருடைய பட்டத்துக்கு உரியவனுக்குத் தாங்கள் பட்டமகிஷி யாவீர்க ளென்று இதை எடுத்துக்கொண்டு வந்தோம். மேலும், இது தான் வம்ச பரம்பரையாய் வருகிறது.

சித்திராங்கி—ஆனால், நரேந்திரனுக்கு முன் ராஜமகேந்திரத்தை ஆண்டவர்கள் இல்லையா? இருந்திருந்தால் அவர்களுடைய பேரல்லவோ இதில் எழுதி இருக்க வேண்டும்?

சுப்பாசாஸ்திரி—வாஸ்தவம்தான்! நரேந்திர மகாராஜா பட்டத்துக்கு வந்ததும் சமஸ்தானத்தில் சகலமும் மாறுபாடு அடைந்ததனால் அந்த ஞாபகார்த்தமாக இதில் அவருடைய பேர் எழுதி இருக்கின்றது. இந்த விதமான சந்தேகங்க ளெல்லாம் எங்களுக்கு முன்னமே உண்டாக, எல்லாவற்றையும் தீர விசாரித்துத்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்தோம். தாங்கள் ஒன்றும்

யோசிக்காமல் இந்தக் கத்திக்கு மாலையிட்டுச் சாரங்கதரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்.

சித்திராங்கி—நீங்கள் என்னை வஞ்சிக்கப்போகிறதொன்றுமில்லை. ஆயினும், பெண்புத்தி பேதைமை யுடையதாதலின், ஏதோ எனக்குண்டான சந்தேகங்களைக் கேட்டேன்.

நீலகண்டசாஸ்திரி—அம்மா, இவ் விஷயத்தில் தங்களுக்கு ஒரு சந்தேகமும் வேண்டாம். இதோ மாலை தயாரா யிருக்கிறது. முகூர்த்தம் தவறிப்போகாமல் சீக்கிரம் மாலையிடுங்கள்.

சித்திராங்கி—பிதா, தங்களுடைய அபிப்பிராய மென்ன?

சித்திராங்கதன்—கண்ணே, உன் இஷ்டம்போல் செய். உனக்குச் சம்மதமாயின் எனக்கும் சம்மதமே.

சித்திராங்கி—ஆனால், சரி.

[ஆசிரிய விருத்தம்]

விந்தையுறு சித்ரரூ பத்தினில் வந்தமத
வேள்மீது கொண்டமோகம்
வியனுலகில் யாவரும் மெய்யென்று கொள்ளவே
வேதியர் சொன்னவாறே
தந்தையொரு கையினின் றகலாது வெம்போர்
தணிக்குமிவ் வாளையேஎன்
ஸரஸமோ கனரூப சாரங்க தரராஜன்
தன்னுருவ மாய்க்கருதியே
சிந்தைமகிழ் வோடுமண மாலையது சூட்டினேன்
சீருடன் தென்மதுரையிற்
செங்கோல் புரிந்திடும் சித்திராங் கதனீன்ற
சித்திராங் கிப்பெயரினேன்
நிந்தையற வேயெனை நீள்புவியில் வாழ்வித்தல்
நின்பார மாகும்கண்டாய்

நேயமுடனுயர்மகளோடுவிளையாடிமகிழ்
நீலமா முகில்வண்ணனே.

[கத்திக்கு மாலையிடுகின்றாள்.]

சித்திராங்கதன்—விப்பிரர்களே! விவாகம் முடிந்ததா? இன்னும் ஏதேனும் ஆகவேண்டிய திருக்கின்றதா?

சுப்பாசாஸ்திரி—மாங்கல்யதாரணந்தான் ஆகவேண்டும். அதை ராஜ மகேந்திரத்துக்குச் சென்றதும் நரேந்திர மகாராஜா செய்துகொள்வார்.

நீலகண்டசாஸ்திரி—ஓய்! இன்றே புறப்பட்டு வரவேண்டுமென்ற சங்கதியைச் சொல்லவில்லையே.

சுப்பாசாஸ்திரி—ஆம். மகாராஜா, ஒன்று சொல்ல மறந்தேன். இந்த யோகபலத்தினுலேயே இன்னும் ஒரு வாரத்துக்குள் சாரங்கதரமகாராஜா சண்டையினின்றும் திரும்பி வருவார். ஆகையால், அவர் வருவதற்குள் சகல காரியங்களும் முடிந்திருக்கவேண்டுமென்று, சித்திராங்கி தேவியைத் தக்க பரிஜனங்களோடு இன்றே அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று நரேந்திரமகாராஜா ஆஞ்ஞாபித்திருக்கிறார்.

சித்திராங்கதன்—ஆனல், பிரயாணத்துக்கு நாள் கிழமை ஒன்றும் பார்க்கவேண்டாமா?

சுப்பாசாஸ்திரி—என்னத்திற்கு? இந்தச் சுபமுகூர்த்தத்திலேயே புறப்பட்டாற் போகிறது.

சித்திராங்கதன்—சரி; என்றைக்கிருந்தாலும் உரியவனுக்கு அவன் உடைமையை ஒப்புவிக்க வேண்டியது அல்லவா? அப்படியே அவர்கள் இஷ்டம்போல் அழைத்துக்கொண்டு போகட்டும். சித்திராங்கி, போய் வருகிறாயா?

சித்திராங்கி—பிதா, அப்படியே. [கண்ணீர் விடுகிருள்.]

சித்திராங்கதன்—குழந்தாய், புறப்படும்போது அபசகுனம்போல் அழாதே; என்ன செய்யலாம்? இருவரும் என்றேனும் ஒருநாள் பிரியவேண்டியவர்களே அல்லவா?

சித்திராங்கி—பிதா, நான் சென்றபின் யார் தங்களுக்குத் துணையா யிருந்து உதவிசெய்கிறவர்கள்? ஐயோ, நான் தங்களுக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தேன்! வந்து பிறந்ததும் என்னைத் தொந்திசரியச் சுமந்துபெற்ற என் அன்னையை வெந்தழலுக் கிரையாக்கித் தங்களை நொந்து தவிக்கச் செய்தேன். வளர்ந்த நாளிலும் தங்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுத்தேன். இப்பொழுதும் தங்களை விட்டுப்பிரிந்து தங்களுக்குத் துக்கத்தை விளைவிக்கின்றேன்.

சித்திராங்கதன்—குழந்தாய், என்ன செய்யலாம்? ஸம்ஸாரத்தில் விழுந்தால் பலவிதமான கஷ்டங்களையும் பட்டுத்தான் தீரவேண்டும். அதற்காகப் பெண்டு பிள்ளைகள் இன்றி இருக்கமுடியுமா? தம் வயிற்றிற் பிறந்தவர்களுடைய வாழ்வுதான் பெற்றேருக்குப் பேரானந்தம் தருவதாகும். ஆகையால், சந்தோஷமாய்ப் போய் வா. உனக்குத் தெரியாத தொன்று மில்லை. ஆனாலும், நான் சொல்லும் இரண்டொரு விஷயத்தை மட்டும் மறவாதே.

(இராகம்: சஹாரு. தாளம்: ரூபகம்.)

பல்லவி

எல்லாம் அறிந்தவுனக் கேதுமுரைத் தற்கில்லை
என்றாலும் கேளாயின் றென்சொல்லை (எல்)

அநுபல்லவி

நல்லாளென் றுன்னையிந் நானிலத் தோர்புகழ
நாளும் நடந்துகொள் நன்மை மிகத்திகழ (எல்)

சரணம்

1. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை யாதலால்
செய்வந் தனையாவும் சீருற நின்நாதன்
செய்ய மலரடிக்கே செய்குவாய் காதலால் (எல்)

2. இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே
தன்சொலால் முக்கனிச் சாறூட்டு நங்கையே
நின்சொல் நயத்தினில் என்றும் நெகிழாதே (எல்)

3. உற்றுரைத் தாங்கி உலகில்நற் பேரொடு
சற்று மினுமதியார் தந்நட்பி னைவிடு
பொற்று மரைத்திருவே போற்றிப் பொருள்கொடு
கற்று ரகமகிழக் காட்டும் பரிவொடு (எல்)

சித்திராங்கி—பிதா, அப்படியே ஆகட்டும். நான் போய் வருகின்றேன். [நமஸ்கரிக்கின்றாள்.]

சித்திராங்கதன்—தீர்க்கஸுமங்கலீபவ! கண்ணே, வேண்டிய ஸ்ரீதனங்களை எடுத்துக்கொண்டு க்ஷேமமாய்ப் போய் வா!

சித்திராங்கி—பிதா, எனக்கு எதற்கு ஸ்ரீதனம்? நான் நாலைந்து பேரோடு பிறந்து நாலைந்து பேரோடு வாழ்க்கைப்பட்டிருந்தால் மற்றப் பெண்களைப்போல் அகப்பட்டவற்றை அடித்துக்கொண்டுபோக எண்ண வேண்டும். பிறந்த வீட்டுக்கும் ஒரே பெண்; புகுந்த வீட்டுக்கும் ஒரே நாட்டுப்பெண். அப்படி இருக்கத் தாங்களா என்னை வஞ்சிக்கப்போகிறீர்கள்? அல்லது, என் மாமன் மாமியார்தாம் நான் வரிசையும் சீருமாய் வர

வில்லை யென்று என்னைக் கோபித்துக்கொள்ளப் போகிறார்களா? ஒன்று மில்லை.

சித்திராங்கதன்—அதற்காக இல்லை. புக்ககத்துக்குப் போகும்போது மங்களகரமாகச் சிலவற்றை எடுத்துக் கொண்டு போகவேண்டியது அவசிய மாயிற்றே என்று சொன்னேன்.—யாரங்கே? சேவகா, ஏனடா மயங்குகிறாய்?

சேவகன்—நானும் சித்திராங்கியோடு ராஜமகேந்திரத்துக்குப் போக உத்தரவு கொடுக்கவேண்டும்.

சித்திராங்கி—பிதா, நானே கேட்கவேண்டும் என்று இருந்தேன். போகிற இடம் எனக்குப் புதிதாகையாலும், இவர்களும் என்னைவிட்டுப் பிரிந்திருக்க இசையார்களாகையாலும் சேவகனையும் சேடியையும் என்னுடன் அழைத்துக்கொண்டு போகின்றேன்.

சித்திராங்கதன்—அப்படியே உன் இஷ்டம்போல் செய்.

[எல்லோரும் போகின்றார்கள்.]

அங்கம் 1.

களம் 3.

இடம் : ராஜமகேந்திரத்தில் சித்திராங்கியின் விடுதி.
பிரவேசம் : சித்திராங்கி, கனகாங்கி.

சித்திராங்கி—சேடி, என்னடி ஆச்சரியமாய் இருக்கின்றது! மிகவும் கேவலமான ஏழைக்கு ஒருத்தி வாழ்க்கைப்பட் டிருந்தாலும் முதன்முதல் மாமியார் வீட்டுக்கு வந்தாள் என்றால் அவளை எத்தனையோபேர் வந்து பார்ப்பார்க ளல்லவா? நான் வந்து நாலைந்துநாள் ஆயின. நான் எப்படித்தான் இருக்கிறே னென்று ஒருவராவது வந்து பார்த்துவிட்டுப் போகக் காணேமே! அதுதான் போகட்டு மென்றால் நாயும் நரியும் நாடாத இந்தக் காடாந்தகாரத்தில் சீதையைச் சிறைவைத்தாற்போல் என்னைத் தன்னந்தனியே வைத்திருக்க என்ன காரணமடி?

கனகாங்கி—பெண்புத்தி பேதைமை என்பது சரியா யிருக்கிறது. ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்தால் நாள் நட்சத்திரம் பார்த்து நகரை அலங்கரித்து ஊர்வலம் வரச்செய்து அழைத்துக்கொண்டு போகாமல் இரகசியமாய் வீட்டில் அழைத்து வைத்துக்கொள்வார்களா? இது தெரியாமல் ஆத்திரப்பட்டுச் சாகிறாயே? ஆக்கப் பொறுத்தவள் சற்று ஆரப் பொறுக்கவேண்டாமோ?

சித்திராங்கி—நானா ஆத்திரப்படுகிறேன்? நீ வெளுத்த

தெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர் என்று இருப்பவள். உன்னைச் சொல்லி என்ன பயன்? சாரங்கதரன் சண்டைக்குப் போயிருக்கிறதாகச் சொன்னார்களே; அது எவ்வளவு தூரம் உண்மை என்று உனக்குத் தெரியுமா?

கனகாங்கி—எனக்கு என்ன தெரியும்? உன்னைப்போல் நானும் இவ்வூருக்கு வந்தது முதல் இவ்வீட்டில்தானே அடைந்துகொண்டிருக்கிறேன்?

சித்திராங்கி—ஆனால் எனக்குமட்டும் எப்படித் தெரிந்தது?

கனகாங்கி—ஒருவேளை சாரங்கதரனே இங்கே வந்து சொன்னானோ என்னவோ!

சித்திராங்கி—அவன் இங்கே வந்திருந்தால் எனக்கு ஏன் இந்தச் சிந்தை? ஐயோ! நீ ஒன்றும் தெரியாதவளாயிருக்கிறாயே!

(இராகம்: சுத்தசாவேரி. தாளம்: ரூபகம்.)

பல்லவி

வாளை யனுப்பி வஞ்சித்தான் அடி கனகாங்கி

அநுபல்லவி

வேளை யறிந்திங் கென்னை நண்ணி
வேந்தன் மகிழ்ந்து மேவ எண்ணி (வாளை)

சரணம்

காளை சாரங் கதரன் தன்னைக்
கடிமணமே புரிந்த என்னை
மூளையின்றியே மூடன் கெடுக்க
முயன் றிவ்வுலகம் பழி தொடுக்க (வாளை)

கனகாங்கி—உண்மையாகவா? உனக்கு எப்படி அது தெரிந்தது?

சித்திராங்கி—இங்கே வந்த வேலைக்காரியை விசாரித்ததில் தெரிந்தது. அடி, கத்திக்கு மாலை யிடவேண்டும் என்று

வேதியர்கள் சொன்னபோதே என் வயிற்றிற் புளியைக் கரைத்தாற்போல் இருந்தது. இருந்தாலும் பிராமணர்கள் பொய் சொல்லப்போகிறார்களா என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு கத்திக்கு மாலையிட்டேன். மாலையிட்டதோடு போகாமல், எப்பொழுது என் மனோகரனைப் பார்த்து மகிழப்போகிறேன் என்ற ஆத்திரத்தில் தன்னந்தனியாய் இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டேன். இனி என்ன செய்வதடி? எனக்கு வாழ்வும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். எப்படியாவது இவ்விடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு போனால் போதுமென்று பார்த்தாலோ, சாரங்கதரன்மேல் உள்ள மோகம் என்னை எங்கும் போகவிடாமல் இங்கேயே இழுத்துப் பிடித்து வைத்துக்கொண் டிருக்கின்றதே!

கனகாங்கி—சித்திராங்கி, இப்பொழுது தைரியத்தைக் கைவிடுவோமாயின் காரியம் கெட்டுப்போகும். எப்படியாவது சாரங்கதரனை உன்னுடைய சாகசத்தால் அடையலாம்; பயப்படாதே. நம்முடைய சேவகன் எங்கே?

சித்திராங்கி—அவன் எங்கு ஒழிந்தானோ. ஒரு நிமிஷமாவது அவன் ஓரிடத்தில் பொருந்தியிருந்த துண்டா?

பிரவேசம்: சேவகன்.

கனகாங்கி—தெய்வாதீனம்! நினைக்கும்போதே வந்தான்.

சித்திராங்கி—ஏனடா? இத்தனை நாழிகை எங்கே போயிருந்தாய்?

சேவகன்—எங்கே போயிருந்தேனா? அந்தப் பரிதாபத்தை ஏன் கேட்கிறீர்கள்? கையில் கொஞ்சம் காசு எடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குப் போய்க் கண்டதை யெல்லாம் வாங்கித் தின்று வயிற்றை நிரப்பினேன். நாலைந்து நாளாய் நல்ல ஆகாரம் இல்லாததனால் அது வயிற்றிற்

போய் விழுந்ததும் ஆளைக் கொஞ்சம் கீழே தள்ள ஆரம்பித்தது. எங்கேனும் சற்று நேரம் சயனித்துவிட்டுப் போகலாமென்று ஒரு சத்திரத்திற்குப் போய்ப் படுத்தேன். உடனே ஒருவன் கையில் எதையோ எடுத்துக் கொண்டுவந்து என் பக்கத்தில் வைத்து, 'ஈ மூட்ட அட்ட உண்ணி' என்றான். 'சத்திரத்திற் சற்று நேரம் தலை சாய்த்துவிட்டுப் போகலா மென்று வந்தால், ஈ மூட்டை அட்டை உண்ணி முதலியவைகளை ஏககாலத்தில் பிடித்துக்கொண்டுவந்து என்னண்டை விடுகிறாயா?' என்று அவன் திரும்பி வந்ததும் அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டேன். அவன் பதில் சொல்லாமல் கன்னத்தைப் பிடித்துக்கொண்டு போய்விட்டான். பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண் டிருந்தவர்கள் 'பிலு பிலு' வென்று என்னைப் பிடித்துக்கொண்டு நன்றாய்ப் புடைத்து அனுப்பினார்கள். உதையைப் பட்டுக்கொண்டு வந்து சேர்ந்தேன்.

கனகாங்கி—ஆனால் பூசை நடந்ததா? அதற்காகத்தான் தகாத காரியங்களில் தலையிட்டுக்கொள்ளாதே என்று உனக்குப் பலமுறை சொல்லியிருக்கிறேன். இனியேனும் அழையாத இடங்களில் நுழையமாட்டாயே?

சேவகன்—போதும்! எனக்கு நீ புத்திசொல்ல வந்து விட்டாயோ?

சித்திராங்கி—அது இருக்கட்டும். ஊருக்குள் போயிருந்தாயே; என்னுடைய சமாசாரத்தைப்பற்றி ஏதேனும் கேள்விப்பட்டாயா?

சேவகன்—முதலில் அதைத்தான் சொல்லவேண்டுமென்று வந்தேன். உடம்பில் பட்ட உதையில் காதில் பட்ட

கதை மறந்துபோயிற்று.

கனகாங்கி—போகட்டும். இப்பொழுதாவது ஞாபகப்படுத்திக்கொண்டு சொல்.

சேவகன்—நான் விசாரித்ததில் நரேந்திரன் தங்களை நேரில் கண்டு தங்களை மயக்கி மணம் புரியும்வரையில் சாரங்கதரன் இங்கு வரக்கூடாதென்று உத்தரவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அதற்காக இன்று முதல் இவ்விடத்தில் ஒரு புதிய சேவகனைக் காவலில் வைக்க நினைத்திருக்கிறாரும்!

சித்திராங்கி—சேடி, இப்பொழுதாவது காரண மின்றி நான் சந்தேகம் கொள்ளவில்லை யென்று தெரிகிறதா? சேவகா, நரேந்திரனுடைய சூழ்ச்சியை மீறி நான் சாரங்கதரனை அடையும் உபாயத்தை நீதான் எனக்குச் சொல்லவேண்டும்.

சேவகன்—அதெல்லாம் எனக்குத் தெரியாது. சாரங்கதரனை எப்படியாவது இங்கு வரவழைக்கின்றேன். வந்த பிறகு அவனுடைய எண்ணத்தை மாற்றி மணம்புரிவது தங்களுடைய சாமர்த்தியத்தில் இருக்கிறது. என்ன, கனகாங்கி? என்னுடைய யோசனை எப்படி யிருக்கிறது?

கனகாங்கி—கேட்பானேன்? 'கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்தால் அது உருகிக் கசியும்; அப்போது அது கண்ணை மூடிக்கொள்ளும்; உடனே போய்ப் பிடித்துக்கொள்ளலாம்' என்பதுபோல் இருக்கிறது. பைத்தியக்காரா! சாரங்கதரன் இங்கு வரக்கூடாதென்று அரசன் ஆஞ்ஞாபித்திருந்தால் அவன் அதை மீறிக்கொண்டு எப்படி வரமுடியும்? வந்தபிறகு செய்யச்

சொன்ன உபாயம் சுலபந்தான். வரவேண்டுமே!

சேவகன்—அம்மணி, சாரங்கதரனை இங்கு வரச்செய் கிறது என்னுடைய பாரம். வந்தால் எனக்கு இந்தச் சேடியை மணம் செய்துவைக்கிறீர்களா?

சித்திராங்கி—அவ்வளவுதானே? அப்படியே செய்து வைக்கிறேன்.

சேவகன்—நீங்கள் சொன்னால் போதாது. என்னை மணம் செய்துகொள்வதாக அவள் கைபோட்டுத் தரவேண்டும்.

சித்திராங்கி—சேடி,—

கனகாங்கி—சித்திராங்கி, உன்னுடைய வாழ்வினும் உயர்ந் தது வேறொன்று இருக்கிறதா? இதோ அப்படியே வாக்களித்தேன். [சேவகனுக்குக் கையடித்துத்தருகின்றாள்.]

சேவகன்—இனி, சாரங்கதரனை இங்கு வரவழைக்கிறேனா இல்லையா பாருங்கள்.

சித்திராங்கி—ஆமாம்; நரேந்திரனுடைய சேவகன் வரு முன் சாரங்கதரன் இங்கு வந்தால்தானே நம்முடைய யோசனை பலிக்கும்?

சேவகன்—அந்தக் கவலை உங்களுக்கு ஏன்? அதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்யாமலா நான் அவ்வளவு நிச்சய மாய்ச் சொல்லுவேன்? நரேந்திரனுடைய சேவகனைக் கண்டு, அவனுக்கு நூறு பொன் கொடுப்பதாக வாக் களித்து, அவனுடைய வேஷத்தில் நான் இங்கே காவ லில் இருக்க அவனுடைய சம்மதத்தைப் பெற்று, அவ னுடைய உடைகளையெல்லாம் இதோ வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன்; பாருங்கள்.

சித்திராங்கி—சேடி, சேவகன் என்றால் இவன் அன்றோ சேவகன்! மேலுக்கு ஒன்றும் தெரியாதவன்போல்

இருந்து என்னுடைய விஷயத்தில் எவ்வளவு பார யோசனைகள் பண்ணிவைத்திருக்கிறன்! பார்த்தாயா?

சேவகன்—என்னைப் புகழ்வது இருக்கட்டும். நீங்கள் சற்று உள்ளே போயிருங்கள். தன்னுடைய ஏற்பாடுகளெல்லாம் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றனவென்று பார்த்துவிட்டுப் போக நரேந்திரமகாராஜா இங்கே வந்தாலும் வரக்கூடும்.

சித்திராங்கி—ஆனல், சேடி, வா; நாம் போவோம்.

[சித்திராங்கியும் கனகாங்கியும் உள்ளே போகிறார்கள். சேவகன் மாறுவேஷம் போட்டுக்கொள்ளுகிறன்.]

சேவகன்—நரேந்திரா! பிள்ளைக்கு மணம் பேசிக் கத்தியை வைத்துக் கல்யாணம் செய்து எங்கள் சித்திராங்கியை வஞ்சகமாகக் கைப்பற்ற நினைத்தாயா? நான் பாண்டிநாட்டிற் பிறந்தவனென்பது உண்மையானல் உன் எண்ணம் ஈடேற விடுகின்றேனு பார்.

பிரவேசம்: நரேந்திரன்.

நரேந்திரன்—யாரடா, சேவகன்?

சேவகன்—யாரங்கே? யார் சேவகத்தில் இருந்தால் உனக்கென்ன?

நரேந்திரன்—என்னடா? ஒன்றும் தெரியாதவன்போல் உளறுகிறய்? நான்தான் இந் நாட்டுக்கு அரசன் என்று உனக்குத் தெரியவில்லையா?

சேவகன்—நீ இந் நாட்டுக்கு அரசனனல் நான் இவ் வீட்டுக்கு அரசன். உன்னுடைய அதிகாரம் இங்கே ஒன்றும் செல்லாது; போய்ச் சேர்.

நரேந்திரன்—அடே, உன்னை இவ்வேலையில் வைத்த நரேந்திரன் நான் என்று தெரியாமல் வாய்க்கு வந்தபடி

பிதற்றுகிருயா? வேண்டாம்; அநியாயமாய்க் கெட்டுப் போகாதே.

சேவகன்—ஏய்! இந்தப் பூச்சி மிரட்டெல்லாம் யாரிடத்தில்? இதற்கெல்லாம் பயப்படுகிறவன் நானல்ல. உன்னை வெகுநாளாய் அறிவேனே. சாரங்கதரன் என்று சொன்னுல் உள்ளே விடமாட்டேன் என்று இந்த யுக்தி செய்தாய் போலும்! வீட்டை விட்டு வெளியே போகிருயா? இல்லையா? ஏதோ இளவரசன் என்று பார்க்கிறேன்; இல்லாவிட்டால்,—

நரேந்திரன்—இல்லாவிட்டால், என்ன செய்வாய்?

சேவகன்—என்ன செய்வேனு? கழுத்தில் கையைக் கொடுத்துத் தள்ளுவேன்.

நரேந்திரன்—அடே, உன்னுடைய அரசன் என்றும் பாராமல் நீ உன்னுடைய கடமையைச் செய்வதைக் கண்டு சந்தோஷம் அடைந்தேன். இதோ, என்னுடைய கையை விட்டகலாத ராஜமுத்திரை; இதனுலேனும் நான் நரேந்திரன் என்று தெரிகிறதா இல்லையா?

சேவகன்—மகாராஜா, மன்னிக்கவேண்டும். பிதாவுக்கும் பிள்ளைக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டு சாரங்கதரன் தான் வந்து என்னை ஏமாற்றிவிட்டு உள்ளே போகப் பார்க்கின்றுன் என்று எண்ணிவிட்டேன். முதலிலேயே இந்த அடையாளத்தைக் காட்டியிருக்கக்கூடாதா?

நரேந்திரன்—நான் உன்னுடைய காவல் முறையைப் பரீக்ஷிக்க எண்ணித்தான் முதலிலேயே அதைக் காட்டவில்லை.

சேவகன்—அந்த மீசை அப்படி ஒரே கறுப்பாய்ப் போக அதற்கு என்ன பூசினீர்கள்? மீசையின் முறுக்கைப்

பார்த்து நானு மல்லவோ அடையாளம் தெரியாமல் அவமதித்துப் பேசிவிட்டேன்.

நரேந்திரன்—அதற்கென்ன செய்யலாம்? நாம் செய்யும் காரியம் துஷ்காரியமா யிருந்து அதற்கு மற்றொருவனைத் துணையாகக் கொண்டால் அவன் எவ்வளவு தூக்கி யெறிந்து பேசினாலும் சும்மா இருக்கவேண்டியதுதான். ஆகையினால்தான் உன்னை நான் கோபித்துக்கொள்ள வில்லை.

சேவகன்—சரி, இப்பொழுது இங்கே வந்தது எதற்காக?

நரேந்திரன்—சித்திராங்கியைக் கண்டு அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு போக வந்தேன்.

சேவகன்—ஆமாம்; கல்யாணந்தான் முன்னமே ஆய்விட்டதே?

நரேந்திரன்—என்றேனும் அது லோக சம்மதமான விவாகம் ஆகுமா? தான் வரித்தது சாரங்கதரனைத்தான் என்று அவள் மறுத்தால்?

சேவகன்—ஆகையினால்தான் அவளுடைய மனத்தை மயக்கி அவளுடைய சம்மதத்தைப் பெறச் சாரங்கதரனைப் போல் வந்தாற்போ லிருக்கிறது! நான்தான் சேவகன்; புத்தியில்லாதவன். மீசையைமட்டும் மாற்றிச் சாரங்கதரனே என்று நான் நம்பும்படி செய்தீர்கள். சித்திராங்கி ராஜகன்னிகை; அதிலும் மகா புத்திசாலி. அவள் தங்களுடைய நரைத்த தலையையும் திரைத்த உடலையும் வளைந்த கூனையும் பார்த்தே தாங்கள் நரேந்திரர் என்று தெரிந்துகொள்வாளே.

நரேந்திரன்—அதற்கு இப்பொழுது என்ன செய்யலாம்?

சேவகன்—நான் ஒரு யுக்தி சொல்லுகின்றேன்: கேளுங்

கள். தலைமயிரை யெல்லாம் சேர்த்துப் பிடித்துத் தலைப் பாகையில் அடைத்து விடுங்கள். கூன் தெரியாமல் இருக்க அதிகமாய் இந்தண்டை அந்தண்டை போகாமல் ஓரிடத்தில் முறுக்காய் உட்கார்ந்துகொண் டிருங்கள். தெரிகின்றதா? சீக்கிரம். நான் போய்ச் சித்திராங் கியை அழைத்துக்கொண்டு வருகிறேன்.

நரேந்திரன்—சரி; அப்படியே.

சேவகன்—அம்மா! அம்மா! — ஒன்று சொல்ல மறந் தேனே: சித்திராங்கியோடு பேசும்போது முகத்தைக் கொஞ்சம் திருப்பிக்கொண்டே பேசுங்கள். அப்பொ ழுதுதான் மாப்பிள்ளை மிகவும் முறுக்காய் இருப்பதா கத் தோன்றுவதோடு முகத்தில் விளங்கும் கிழத்தன மும் அதிகமாய்த் தெரியாமலிருக்கும்.

நரேந்திரன்—சரி. நாழிகையாகிறது; நான் வந்திருப்ப தாகச் சீக்கிரம் போய்ச் சொல்.

சேவகன்—அம்மா! அம்மா! மகாராஜா வந்திருக்கிறார்.

பிரவேசம்: சித்திராங்கி, கனகாங்கி.

சித்திராங்கி—யாரடா அது?

சேவகன்—நான்தான் சேவகன். மகாராஜா வந்திருக்கிறார்.

கனகாங்கி—யார்; சாரங்கதரமகாராஜாவா?

சேவகன்—அவரைப்போல்தான் இருக்கிறார்.

சித்திராங்கி—சேடி, கந்த புஷ்பங்களைக் கொண்டுவா.

[கனகாங்கி கந்த புஷ்பங்களை ஒரு தட்டில் வைத்துச் சித்திராங்கியிடம் கொண்டுவந்து கொடுக்கின்றாள்.]

சித்திராங்கி—எங்கிருக்கிறாரடா?

சேவகன்—இதோ உட்கார்ந்திருக்கின்றார்.

சித்திராங்கி—[நரேந்திரனை ஏறெடுத்துப் பார்த்துக் கந்த புஷ்பங்களைத் தட்டோடு கைசோரவிட்டு] சேடி,

(இராகம் : புன்னுகவராளி. தாளம் : ஆதி)

பல்லவி

பார் பாரடி இவன் யார் யாரடி

அநுபல்லவி

மார்பில் மாலை யணிந்து மணமகன்போ லெனையே
மயக்க நினைத்து வந்த மாயக் கிழ வனையே (பார்)

சரணம்

கூன்விழுந்து பல்லக்குக் கொம்புபோல் வளைந்து தேகம்
தான்விழுக் தழிந்திடுந் தசையுற்றுந் தகா மோகம்
தாங்கியே மன மேங்கியே இனம்
நீங்கியே கன காங்கியே வந்தான் (பார்)

பல்லும் விழுந் திருகண் பார்வை குறைந் திருந்தும்
புல்லும் போகத்தி லாசை பூண்டு கற்பிற் பொருந்தும்
பொன்னையே நிகர் என்னையே பெறத்
தன்னையே மறந் தன்னையே வந்தான் (பார்)

இந்தக் கிழவன் இங்கேன் வந்தானடி ?

கனகாங்கி—சித்திராங்கி, எதற்கும் நீ அவருடைய எண்ணத்தை முன்னமே அறிந்தவள்போல் நடந்துகொள்ளாதே. போய் நமஸ்காரம் செய். பிறகு என்ன சொல்லுகிருரோ, பார்ப்போம்.

சித்திராங்கி—பிதா ! நமஸ்காரம் !

நரேந்திரன்—[தனக்குள்] ஆஹா ! செய்த சூழ்ச்சிகளெல்லாம் வீணுயின ! உம், காமிக்கு முறை ஏது ?

சித்திராங்கி—பிதா, என்ன விசேஷம் ? அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோக வந்தீர்களா ?

நரேந்திரன்—அதற்கு இப்படித் தனியாக வருவேனு ?

சித்திராங்கி—[சாடையாகக் கனகாங்கியிடம்] சேடி !

கனகாங்கி—ஆனால் பின் எப்பொழுது அழைத்துக் கொண்டு போக உத்தேசித்திருக்கிறீர்கள்?

நரேந்திரன்—சித்திராங்கிக்கு எப்பொழுது தயை பிறக்கிறதோ அப்பொழுது.

சித்திராங்கி—ஆனால் அதுவரையில் நான் இவ்விடத்தில் தான் இருக்கவேண்டுமா?

நரேந்திரன்—இல்லை; உன்னுடைய மௌனத்தைக் கண்டு நான் அவ்வாறு நினைக்கின்றேன்.

கனகாங்கி—ஆனால் வெட்கத்தை விட்டுத்தான் கேளடி. வீணாக இதுவரையில் என்னிடத்தில் ஆத்திரப்பட்டுத் தவித்தாயே.

சித்திராங்கி—பிதா, தயைசெய்து சீக்கிரம் என்னை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போகத்தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். எனக்கு இவ்விடத்தில் ஒரு நாள் கழிவது ஒரு யுகமாய் இருக்கின்றது.

நரேந்திரன்—கண்ணே, அதற்கு நான் செய்யவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தாயின. நீ செய்யவேண்டியவைகளைச் செய்யாததுதான் தடை.

சித்திராங்கி—[ஒருபுறமாய்க் கனகாங்கியிடம்] சேடி, கொஞ்சம் கொஞ்சமாய் வழிக்கு வருகிறான்!

கனகாங்கி—[ஒருபுறமாய்ச் சித்திராங்கியிடம்] இரு! இன்னும் என்னதான் சொல்லுகிறானோ பார்ப்போம்.

சித்திராங்கி—பிதா, தாங்கள் சொல்லுவ தொன்றும் புலப்பட வில்லையே.

நரேந்திரன்—சித்திராங்கி, நீ மிகவும் புத்திசாலி ஆகையால் நடந்த விஷயங்களைக் கொண்டே என் உள்ளக்

கருத்தை உணர்ந்திருப்பாயென்று நினைத்தேன். என்னுடைய வாயால் அதைக் கேட்கவேண்டு மென்பது உன்னுடைய விருப்பமாயின் வெளிப்படையாகச் சொல்லுகின்றேன்.

[கலித்துறை]

படத்தையே நோக்கிநின் பாசவெள் ளத்திற் படிந்துமனோ
திடத்தையே விட்டேன் சிறந்தவின் பக்கரை சேரநின்பொற்
குடத்தையே தந்தெனைக் கூடுவா யென்னுங் குறிப்புடனிவ்
விடத்தையே நாடிவந் தெய்தினன் காணெழி லேந்திழையே.

கனகாங்கி—சரிதான்; பிச்சைக்கு வந்தவன் பெண்டாள நினைத்த கதையாயிற்று!

சித்திராங்கி—மகாராஜா! என்னுடைய மனோகரனை ஈன்றெடுத்த அரசரென்று தங்களை அன்புடன் உபசரிக்க, என்னைச் சரஸத்துக்கு அழைத்தாற்போ லிருக்கிறது! ஏன் தங்களுக்கு இப்படிப்பட்ட விபரீதபுத்தி?

[விருத்தம்]

மகனுக்குத் தேடியவள் மருகி யென்றும்
மனைக்கவளே மகாலக்ஷ்மி யாகு மென்றும்
மிகநற்கு லத்துதித்தோ ரெடுத்து ரைத்த
மெய்யுரைவிட் டாசையவள் மீது கொள்ளல்
ஜகநற்கோல் தாங்கியர சாளு கின்ற
தரணிபருக் கெந்நாளுந் தகாது சொன்னேன்
புகநிற்கும் பழிகொண்டு புவியில் நீயும்
புரவலனே வாழமனம் பூண்ட தென்னே.

நரேந்திரன்—சித்திராங்கி, நான் உன்னை மணந்திருக்க, எப்படி நீ என் புத்திரனுடைய மனைவி யாவாய்?

சித்திராங்கி—என்ன? என்னை மணந்தது தாங்களா? சேடி, எங்கேயடி அந்தச் சித்திரப்படம்?

கனகாங்கி—இதோ, இருக்கின்றது. [சாரங்கதரன் படத்தைச் சித்திராங்கியிடம் கொடுக்கின்றாள்.]

சித்திராங்கி—மகாராஜா! இது யாருடைய படம்?

நரேந்திரன்—என்னுடைய படந்தான்.

சித்திராங்கி—என்ன? உம்முடைய படமா? நன்றாய்ப் பார்த்துச் சொல்லும்.

சேவகன்—[தனக்குள்] எவ்வளவு நாழிகை பார்த்தாலும் அவ்வளவுதான். வரும்போதே மூக்குக்கண்ணாடியை எடுத்துக்கொண்டு வந்திருந்தால் இந்தக் கஷ்டமிராதே!

நரேந்திரன்—உண்மையில் இது என்னுடைய படந்தான்.

சித்திராங்கி—போகட்டும்; இங்கே என்ன எழுதி யிருக்கின்றது? படியுங்கள்.

நரேந்திரன்—வேறென்ன எழுதி இருக்கப்போகிறது? நரேந்திரன் என்று எழுதியிருக்கும்.

சித்திராங்கி—சற்றுப் பார்த்துத்தான் சொல்லுங்களேன்.

சேவகன்—அம்மா! அதிகமாய் நிர்ப்பந்திக்காதீர்கள். மகாராஜா, எதோ இப்படிக் கொடுங்கள். நான் பார்த்துச் சொல்லுகின்றேன். மகாராஜா, இதில் சாரங்கதரன் என்று எழுதியிருக்கிறது. இதற்கேதேனும் சமாதானம் யோசித்து வைத்திருந்தால் சொல்லிவிடுங்கள்.

நரேந்திரன்—என்ன! சாரங்கதரன் என்று எழுதியிருக்கிறதா? சரிதான்; இது சாரங்கதரனுடைய அறையிலிருந்த படம். ஆகையால் அவன் தன்னுடைய பேரை இதில் எழுதியிருக்கக்கூடும். சித்திராங்கி, இப்பொழுது படத்தைப் பற்றிய விசாரம் எதற்கு? நீ மாலையிட்டது என்னுடைய வாளுக்கே அல்லவா?

சித்திராங்கி—ஆனால்?

நரேந்திரன்—என் மனைவி என்று கூறத் தடையென்ன?

சித்திராங்கி—ராஜன்! நான் மாலையிட்டது தங்களுடைய கத்திக்கே எனினும், அதற்கு உரியவன் சாரங்கதரன் என்றும் அதற்கு மாலையிடுவதால் நான் படத்திற் கண்ட சாரங்கதரனுக்குத்தான் உரியவள் என்றும் பிராமணர்கள் சொன்னதனால் நான் சாரங்கதரனுடைய மனைவியே யன்றித் தங்களுடைய மனைவி யாகமாட்டேன்.

நரேந்திரன்—பிராமணர்கள் சொன்னால் நீ அதை உண்மையென்று நம்பிவிடலாமா? தந்தை ராஜ்யபாரம் வகித்திருக்கும்போது ராஜாங்கத்துக்கு உரிய வாள் எப்படித் தனயனுடைய தாகு மென்று நீ கேட்டிருக்கவேண்டாமா? இவைகளை யெல்லாம் நன்றாய் அறிந்திருந்தும்,

(இராகம்: அடாணா. தாளம்: ரூபகம்.)

பல்லவி

தகுமோ மயிலே மடமான் குயிலே இந்தத்
தாமதமே வண்ணத் தார்க்குழலே பண்ணத் (தகு)

அநுபல்லவி

வெகுமோகந் தரு மத வேள் என்மேல்
வெருவக் கணை விட நின்னுடன்
மருவக் கருதிய என்னுடன் (தகு)

சரணம்

பார்த்துன் படத்தையே மனத்தில் வைத்துப்
பரிதவித்தேன் மட மானே நினைச்
சேர்த்தணைத்தா லன்றி ஜீவன் நில்லாதென்று
சிந்தை கொண்டேனடி நானே
ஆர்த்தெழுந் தோங்கி அனங்கனும் தானே
போர்த்தொழில் பூண்டதால் பூவையே நொந்தேனே
தீர்த்தருள் செய்யநின் செம்மலர்வாய்த் தேனே
திருந்துங்கனி மருந்திங்கினி
யிருந்துந்தனி யருந்தத்துனி (தகு)

சித்திராங்கி—அரசே, என்ன வார்த்தை சொன்னீர்? உம்மையும் மறந்து வார்த்தை வருகின்றுற்போ லிருக்கிறது. காடு வா என்கிறது; வீடு போ என்கிறது. இந்தக் கிழவயதில் ஏன் தங்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம்?

நரேந்திரன்—சித்திராங்கி, காடு வா என்பது உன்னைக் கூடுவதற்கே யாகும்.

சித்திராங்கி—வேண்டாம்! வீணுய்க் கெட்டுப்போகாதீர்! வந்ததும் செய்த மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும்.

நரேந்திரன்—சித்திராங்கி, நீ என்னை அவமரியாதை செய்ததனுல் நான் வருத்தப்படுவேன் என்று எண்ணுதே. எப்பொழுது என்னிடத்தில் மரியாதை யின்றிப் பேசப்போகிருயோ என்று காத்திருக்கிறேன். அன்றியும் கணப்போதே நிலைக்கின்ற காமோபசாந்தியைக் கருதியவனுயின் இவள் இல்லாவிட்டாற் போகிறதென்று நீ செய்யும் அவமரியாதைக்கு நான் கோபங் கொள்வேன். உன்னுடைய நவ யௌவன ரூபலாவண்யத்தில் ஈடுபட்டு, உள்ள அத்தனை நாளும் உன்னை என் இஷ்டநாயகியாகக் கொண்டு இன்புறக் கருதியவனுகையால் உன்னுடைய தோஷ தூஷணைகள் ஒரு நாளும் என் புத்திக்குப் புலப்படா. நீ என் மோகத்துக்கு இணங்காவிட்டால்மட்டும் எனக்கு வருத்தம் உண்டாகுமே யன்றி மற்றவைகளுக்கு நான் மனம் சலியேன்.

சித்திராங்கி—அரசே, வீணுய் என் வாழ்வை ஏன் கெடுக்கப் பார்க்கின்றீர்?

[விருத்தம்]

வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றுலகில்
நம்பினா ரிறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத் தெரியெழு கின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ
தழுவென மொழிவதற் கஞ்சிக்
கொம்பனா ளென்பாற் கொடியவிக் காதல்
கொள்ளுதல் தவிர்ந்திடாய் கோவே.

மற்றொருவன் மனைவியைக் கைபிடித்திழுத்தல் மகா பாதக மல்லவா? அதிலும் நான் தங்களுடைய மகனுடைய மனைவியல்லவா? வேண்டாம், இப்பலவந்தம். மலரைக் கசக்கி யறிவார்களோ கந்தம்?

நரேந்திரன்—அப்படிப்பட்ட பலவந்தம் ரஸிகஜனங்களுக்குத் தகாதென்றுதான் உன்னை இவ்வளவு வேண்டுகிறேன்.

சித்திராங்கி—ஐயோ! வீரங் குடிகொண்ட சாரங்கதரனுக்கே உரிய என் கற்பை வீணாய் ஏன் கெடுக்கப் பார்க்கிறீர்?

நரேந்திரன்—சித்திராங்கி, நீ பொற்பும் கற்பும் பொருந்தியவளாதலினாற்றான் நான் உன்னைக் கோருகின்றேன்.

[விருத்தம்]

பொற்பொடு கற்பு மேன்மை பொருந்திய மாத ராரே
சொற்பெறுந் துயர மெய்தித் துன்புறற் குரிய ராவர்
அற்பர்தம் நினைவின் நீக்கி அமைவுற நின்று காக்கும்
மற்பெறும் அரணம் ஒன்றும் மற்றவர்க் கில்லை கண்டாய்.

சித்திராங்கி—ஆனால் தாங்கள் என்ன, அப்படிப்பட்ட அற்பர்களில் ஒருவரா? இந்த மாநில மெல்லாம் புகழும் மன்ன ரல்லவா? இப்படிப்பட்ட குற்றங்கள் அற்

பருக்கே அழியாப் பழியை விளைவிக்குமெனின் மன்ன ருக்கு எவ்வளவு மானஹானி யாகு'மென்று சொல்ல வும் வேண்டுமா? தன் குற்றம் தனக்குத் தெரியாதது ஹுறஜம். தன்னுடைய மனைவியை மற்றொருவன் கை பிடித்திழுத்தால் தனக்கு எவ்வளவு கோபம் உண்டா கும் என்பதை எண்ணியேனும் இவ்வெண்ணத்தை விட வேண்டாமா?

நரேந்திரன்—சித்திராங்கி, மற்றொருத்தியிடம் மனமாரக் காதல்கொண்டவன் தன்மனைவியிடம் ஒருநாளும் உள் ளன்புள்ளவன் ஆகான். ஆகையால்,

(இராகம் : இந்துஸ்தானி பீலு; தாத்ரா.)

['மஜா தேதேஹைய்ன் க்யாயார்' என்ற மெட்டு]

என்றனை தீராய் மாதே
என்னை மருவி யிம் போதே (என்)

சித்திராங்கி—மன்ன உனக் கிது சரியா உன்
மைந்தனுக்கே நான் உரியா ளென
முன்ன னுரைத்தும் அறியா முழு
மூடனிற் சொல்லல் நெறியா

நரேந்திரன்—மனமோகன சுந் தரியே
மறுத்திடின் உயிர் நான் தரியே னென்
கனவிலும் உனைப் பிரியே னுன்
காதலுக்கே உரியே ன் (என்)

சித்திராங்கி—வேந்தே, வேண்டாம். இவ்விஷயம் சாரங்க தரனுக்குத் தெரிந்தால் தனக்கு நிந்தையைத் தேடும் தங்களைத் தந்தையென்றும் பாராமல் வெட்டி வீழ்த்து வான்.

நரேந்திரன்—என்ன! சாரங்கதரனுக்கு இது தெரிந்தால் என் தலையை வெட்டுவானா? அவன் என்னை லோகநிந் தனைக்கு ஆளாக்குமுன் நான் அவனை லோகநிந்தனைக்கு

ஆளாக்கி அவன் தலையை வெட்டுவேன் என்று தெரிந்து கொள். சித்திராங்கி, உன்னோடு வாதாட எனக்குப் போதில்லை. என் காதலுக்கு இசைகிருயா? இல்லையா? இல்லாவிட்டால் உன்னையும் உன் வேலைக்காரனையும் கொன்று நீங்கள் இருவரும் மருவிச்சுகிக்கக் கண்டதாக உன்மேல் வீண்பழி சுமத்தட்டுமா?

சித்திராங்கி—[கனகாங்கியிடம் ஒருபுறமாக] சேடி, நான் இவன் மோகத்துக்கு இசைந்தாலும் என் கற்புக்குப் பங்கம்; இசையாவிட்டாலும் இவன் சுமத்தும் பழியினுல் பங்கம். இதற் கென்ன செய்கிறதடி?

கனகாங்கி— [சித்திராங்கியிடம் இரகசியமாக] இப்பொழுது இசைவதாக ஒப்புக்கொள். மற்ற யோசனைகளை அப்புறம் செய்துகொள்வோம்.

சித்திராங்கி—அரசே, இதற்கு நான் சம்மதித்தாலும் இவ்வுலகம் சம்மதிக்குமா? நான் மணம் புரிந்தது சாரங்கதரனையே என்று எல்லோரும் எண்ணி யிருக்கமாட்டார்களா? அவ்வெண்ணத்தை எப்படி மாற்றுவது?

நரேந்திரன்—அதற்காகவா என்னை இவ்வளவு தூரம் பரிசோதித்தாய்? உனக்கு அந்தக் கவலையே வேண்டாம். அப்படிப்பட்ட அபவாதம் ஒன்றும் உனக்கு வராதபடி நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்.

சித்திராங்கி—பிறகு அப்படிப்பட்ட கஷ்டம் ஏதேனும் வரப்போகிறதே என்றுதான் யோசிக்கிறேன். ஆயினும், தாங்கள் என்மேல் இவ்வளவு திடமான ஆசை வைத்திருக்கும்போது எனக்கு என்ன குறை?

[உள்ளே குடிகளின் கூக்குரல்.]

நரேந்திரன்—யாரடா அது? என்ன கூச்சல் அங்கே?

சேவகன்—வன விலங்குகளாற் பயிரெல்லாம் அழிந்து போகிறதென்று குடிகள் முறையிடுகிறார்கள்.

சித்திராங்கி—ஆனால் வேட்டைக்குப் போகவேண்டுமா? பார்த்தீர்களா? நாம் இருவரும் சற்றுநாழிகை சல்லாபமாயிருப்பது தெய்வத்துக்குச் சம்மதமில்லைபோ லிருக்கிறது.

நரேந்திரன்—கண்மணி, உனக்குஇஷ்டம் இல்லாவிட்டால் நான் போகவில்லை.

சித்திராங்கி—நான் தங்களைத் தடுப்பேனென்று நினைத்தீர்களா? நன்றா யிருக்கிறது! எப்பொழுது நான் தங்களுக்கு இல்லாள் ஆனேனோ அப்பொழுதே பிறர் என்னைப் பழிக்காதபடி நடந்துகொள்ள வேண்டியவளானேன். தாங்கள் இப்பொழுது வேட்டைக்குப் போகாவிட்டால் சித்திராங்கியின் மோகத்தில் அரசன் செங்கோல் முறைமையையும் துறந்தான் என்று ஜனங்கள் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட பழிச் சொல்லுக்கு ஆளாக எனக்கு இஷ்டமில்லை. இப்பொழுது என்ன முழுகிப்போய்விட்டது? கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோய்விடும்?

நரேந்திரன்—நான் இன்னும் இரண்டொருநாளில் திரும்பி வந்துவிடுவேன். அதுவரையில் இங்கேயே ஜாக்கிரதையாய் இருக்கிறாயா?

சித்திராங்கி—நன்றாயிருக்கிறது! மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்பிக்கவேண்டுமா? நான் அப்படியெல்லாம் அஜாக்கிரதையாக இருப்பே னென்று எண்ணவேண்டாம்.

நரேந்திரன்—சரி. வேட்டையாடி உன் விளையாட்டுக்கு ஏதேனும் காட்டுமிருகங்களைக் கொண்டுவரட்டுமா?

சித்திராங்கி—எனக்கென்னத்திற்கு இந்த வனவிலங்குகள்? தங்கள் தேகம் க்ஷேமமாய்த் திரும்பிவந்து சேர்ந்தாலே போதும்; அதுவே எனக்கு ஆயிரம் விலங்குகளைக் கொண்டுவந்ததுபோ லாகும்.

நரேந்திரன்—ஆனால் நான் வரட்டுமா?

சித்திராங்கி—சீக்கிரம் போங்கள். இங்கேயே வீண் பொழுது போக்கவேண்டாம். பிறகு வேட்டையிற் காலமாய்விட்டதனால் வரமுடியவில்லை யென்று வேடர்கள் வந்து சொல்ல நேரிடும்.

நரேந்திரன்—சரி, நான் வருகிறேன். [போகின்றான்.]

சேவகன்—அப்பா! சனி ஒழிந்தது! கிழநச்சு என்று சொல்லுகிறது சரியாகத்தான் இருக்கிறது!

சித்திராங்கி—[மனம் மிக ஏங்கி] சேடி! இனி எனக்கு என்ன கதி?

சேவகன்—ஏன்? இப்பொழுது என்ன முழுகிப்போய் விட்டது?

சித்திராங்கி—போ அப்புறம். என் கண்முன் நில்லாதே. நீயும் அக்கிழவனுக்கு அநுகூலமாகத்தானே சாரங்கதரன் வந்திருக்கின்றானென்று என்னை வஞ்சித்தாய்?

சேவகன்—நான் என்ன சொன்னேன்? சாரங்கதரனைப் போல்தான் இருக்கிறதென்று சொன்னேனே ஒழிய சாரங்கதரன்தான் என்று சொன்னேனா?

சித்திராங்கி—கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து என்னை இக்கிழத்துக்குக் காட்டிக்கொடுத்தீர்களல்லவா? [கண்ணீர்வடிக்கின்றாள்.]

சேவகன்—அசட்டைப்போல் கண்ணீர்வடித்துக் கன்னத்தைக் கரிப்பானை யாக்கிக்கொள்ளாதீர்கள். நாளைக்கே

சாரங்கதர மகாராஜா இங்கு வரப்போகிறார். அவர் வரும்போது தாங்கள் மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டிருந்தால் தங்களை அவர் நன்றாய்த்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வார்.

சித்திராங்கி—இதோ பார்; நான் அழவில்லை; சாரங்கதரனை வரவழை; பார்ப்போம்.

கனகாங்கி—ஆமாம்; அவன் சாரங்கதரனையும் வரவழைப்பான், என்னையும் கல்யாணம் செய்துகொள்வான்! அவன் வார்த்தையை நம்புகிறாயே; இப்பொழுது அழைத்துக்கொண்டு வந்துவிட்டான் பார், ஒரு நரைத்த கிழத்தை; அந்தமாதிரியாகத்தான் இருக்கும், அவன் சாரங்கதரனை அழைத்துக்கொண்டு வருவதும்! சித்திராங்கி, நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்; கேள்.

சேவகன்—நீ என்ன சொன்னாலும் கடைசியில் என்னுடைய யோசனைதான் பலிக்கப்போகிறது.

சித்திராங்கி—உன்னுடைய யோசனை ஒன்றும் எனக்கு வேண்டாம்; ஒழிந்து போ, எங்கேனும்.

சேவகன்—பிறகு உங்கள் இஷ்டம்.

சித்திராங்கி—சேடி, உன்னுடைய யோசனை என்னடி?

கனகாங்கி—நரேந்திரன் வேட்டைக்குப் போனதுமுதல் உனக்கு உடம்பு அசௌக்யமா யிருப்பதாகவும் வந்தால் பார்க்கலா மென்றும் சாரங்கதரனுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடு. அதை நான் சாரங்கதரனிடம் கொண்டுபோய்க் கொடுத்து எப்படியாவது அவனை இங்கு வரச்செய்கிறேன்.

சேவகன்—இதுதான் பெண் புத்தி என்பது. கண்

ஜாடையில் வராதவர்கள் கையைப் பிடித்தழைத்தால் மட்டும் வரப்போகிறார்களா? ஆமாம், சொல்லிவிட்டாய்; நாளைக்கு அந்தக் கடிதம் நரேந்திரன் கையில் அகப்பட்டால்?

கனகாங்கி—அகப்பட்டால் என்ன? தலை போய்விடுமோ?

சித்திராங்கி—சேடி, அவனோடு என்ன வார்த்தை? இதோ நான் எழுதியது சரியாய் இருக்கிறதா? பார்.

கனகாங்கி—எதோ, என்ன எழுதினாய்; படி.

சித்திராங்கி— [கலித்துறை]

ஆவிக் குமாரனீ யென்றே எழுதினேன் ஆளனென்று
பாவிக்கு நின்னை யகன்றுசோ கத்தாற் பரிதவித்தேன்
சீவிக்கு நன்மருந் துண்டென்று வந்துநீ சேருவையேல்
சேவிக்கு மாறுண்டு நின்னை யளித்தவோர் தெய்வத்தையே.

கனகாங்கி—சரிதான்; உன்னைப் பிரிந்த சோக மென்றும், உன்னுடைய தந்தையைப் பிரிந்த சோக மென்றும் இரு பொருள்படுமாறு எழுதி இருக்கிறாய்.

சேவகன்—எல்லாம் சரிதான்; கவனசக்தி நன்றாகத்தான் இருக்கின்றது. எழுதினவர்கள் அதிர்ஷ்டந்தான் எப்படியோ?

கனகாங்கி—அறிவும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாமற் போகாது. சித்திராங்கி, நீ சென்று நிச்சிந்தையாய் இரு. நான் எப்படியாவது சாரங்கதரனை இங்கு வரவழைக்கின்றேன்.

சேவகன்—சரி. நானும் போய் நிச்சிந்தையாய் இருக்கின்றேன்.

சித்திராங்கி—எப்படியாவது ஒழிந்து போ.

[எல்லோரும் போகின்றார்கள்.]

அங்கம் 2.

களம் 1.

இடம் : ராஜமகேந்திரத்தின் அரண்மனைக் கருகில் சாரங்கதரன் விளையாடும் இடம்.

பிரவேசம் : சாரங்கதரனும் சேவகனும்.

சாரங்கதரன்—

(இராகம் : செஞ்சுருட்டி. தாளம் : திச்ரரூபகம்.)

['சரணகமலாலயத்தை' என்ற திருப்புகழ் மெட்டு.]

வித்வசனம் போலிசையின் மிகமகிழ்ந்து தேன்முரல
விரிகமல மீதிலகு விஜயாளைத்
தத்வமுற வோரகலத் தடவரையின் மேவிதயத்
தனிமலரி லேசெறித்த தகையோனே
அத்வயித த்வயிதமென அறையநின்ற பேதமுற
அலைகடலின் மீதுதுயில் அழகேசா
சத்வகுண மேசிறந்த சரசிஜவி லாசமுகந்
தனைமகிழ மாறெனக்குத் தருவாயே.

சேவகா, இஷ்டதேவதா ப்ரார்த்தனையில் என் மனத்தை எவ்வளவு திருப்பியும் என்னுடைய மனக்கவலை சற்றும் மாறுவதாகக் காணேம். என்னுடைய நிலைமை எனக்கே வெறுப்பா யிருக்கின்றது. இந்த மனக்கவலை என்ன காரணத்தினல் வந்ததென்று எனக்கே தெரிய வில்லை.

சேவகன்—காரணம் எனக்குத் தெரியும்.

சாரங்கதரன்—என்ன அது?

சேவகன்—இன்னும் விவாகமில்லாமல் இருப்பதுதான்.

சாரங்கதரன்—அது அன்று, காரணம்.

சேவகன்—ஆனால் தங்களுடைய தந்தை இரண்டாவது விவாகம் செய்துகொண்டது காரணமா யிருக்கும்.

சாரங்கதரன்—அதற்காக நான் வருத்தப்படுவானேன்?

சேவகன்—தங்களுடைய தாயாருக்கு இஷ்டமில்லாத விவாகத்தை இக் கிழவயதில் செய்துகொண்டாரே என்று—

சாரங்கதரன்—சேவகா, நானோ என் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று இருப்பவன். என் அன்னையோ தன்னுடைய பதியே தெய்வமென்று இருப்பவள். ஆகையால், அதனாலும் எனக்கு வருத்தம் இல்லை; என் அன்னைக்கும் வருத்த மில்லை. ஆனால் விருத்தர்கள் தங்களுடைய அந்திய காலத்தில் விவாகம் செய்துகொள்ளாமல் இருப்பதுதான் உசித மெனினும் நம்மைப் போன்ற சிறியோர், பெரியோர்களுடைய காரியாகாரியங்களை அதிகமாய் ஆராய்ந்து பார்த்தல் தவறு.

சேவகன்—ஆனால் தங்களுக்கு விவாக மாகாததும் காரண மன்று; தங்களுடைய பிதா இக் கிழ வயதில் விவாகம் செய்துகொண்டதும் காரணமன்று.

சாரங்கதரன்—அன்று.

சேவகன்—ஆனால், லோகத்தில் இரண்டு விதமான குணங்கள் உண்டு: சிலர் எவனேனும் ஒருவன் இடறி விழுந்து மண்டையை உடைத்துக்கொண்டாலும் அல்லது ஹாஸ்ய மென்று அஸம்பாவிதமாய் உளறிக் கொட்டினாலும் இடி இடி யென்று வயிறு வெடிக்கச் சிரிப்பார்கள்; சிலர், தங்களைப் படைத்த ஈசுவரனே

வந்து 'இது சாதுர்ய வார்த்தை; ஆகையால் சந்தோஷப்படவேண்டிய விஷயம்' என்று சாதித்தாலும் முகத்தில் ஈயும் எறும்பும் ஓடாதவர்களைப்போல் மௌனம் ஸர்வார்த்த ஸாதகம் என்று பேசாமடந்தையாய்க் காலம் கழிப்பார்கள். இவ்விரு திறத்தாரில் தாங்கள் கடைசியிற் சொன்னவர்களைச் சேர்ந்தவராயிருக்கக்கூடுமோ? இல்லாவிட்டால் இது இயற்கையான சோகமா யிருக்குமோ?

சாரங்கதரன்—இது என்னுடைய இயற்கையான சோகமென்றும் சொல்லுவதற் கில்லை.

சேவகன்—அப்படியானால் இது சந்தோஷ மில்லாததனால் உண்டான சோக மென்றுதான் சொல்லவேண்டும். அதோ: சுமந்திரர் வருகின்றார்.

பிரவேசம்: சுமந்திரன்.

சாரங்கதரன்—மித்திரா, நமஸ்காரம். எது என்மீது தயை பிறந்தது?

சுமந்திரன்—நீ என்னைக் காண விரும்பியதாகச் சேவகன் வந்து சொன்னதனால் வந்தேன். என்ன விசேஷம்? அழைத்த காரணம் என்ன?

சாரங்கதரன்—சுமந்திரா,

[விருத்தம்]

தேகத்தை யேமறந்து செய்தநித் திரையி லென்றன்
ஆகத்தை யிழந்த தேபோல் அருங்கன வொன்று கண்டுற்
சாகத்தை யிழந்தே னிந்தச் சகத்தினி லிதனு லென்ன
சோகத்தை விளைக்குந் தீங்கு சூழுமோ சொல்வாய் நண்பா.

சுமந்திரன்—மித்திரா, இதற்காகவா வருத்தப்படுகின்றாய்? கனவில் என்ன இருக்கின்றது? அப்படி ஒரு தீங்கும் நேரிடாது; பயப்படாதே.

சாரங்கதரன்—ஆனால் சரி. யாரங்கே வருகிறது?

பிரவேசம் : கனகாங்கி.

சுமந்திரன்—யாரோ தெரியவில்லை.

கனகாங்கி—ஐயா, உங்களில் சாரங்கதரர் இன்னாரென்று சொல்லுவீர்களா?

சேவகன்—சாரங்கதரரா? அவர் இங்கில்லை. கைலாசத்தில் இருக்கிறார்.

சாரங்கதரன்—சேவகா, நூதனமாக வந்தவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யாமல் துரத்தி யனுப்புவது தருமமா?—பெண்ணே, நான்தான் சாரங்கதரன். நீ யார்? எங்கிருந்து வந்தாய்? என்ன விசேஷம்?

கனகாங்கி—அரசே, நான் தங்களுடைய சிற்றன்னை சித்திராங்கிதேவியின் சேடி. தேவி இக்கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்தார்கள்.

[கடிதத்தைக் கொடுக்கின்றாள்.]

சுமந்திரன்—அதற்காக நீ இங்கு வருவானேன்? அரண்மனையிலுள்ளவர்கள் யாரிடத்திலேனும் கொடுத்தனுப்பியிருக்கக்கூடாதா?

கனகாங்கி—உடனே கொடுத்துவிட்டு வரவேண்டுமென்று உத்தரவு செய்ததனால் நானே நேரிற் கொண்டுவந்தேன்.

சேவகன்—அப்படிப்பட்ட அவசரமான காரியம் என்னவோ?

கனகாங்கி—உன்னிடத்தில் சொல்லும்படி எனக்கு உத்தரவில்லை.

சேவகன்—உனக்கே தெரியாதென்று சொல்லிவிட்டுப் போயேன். தெரிந்தாற்போல் இந்த வீண் கம்பீரம் எதற்கு?

சுமந்திரன்—சாரங்கதரா, என்ன எழுதியிருக்கிறது? படி.

சாரங்கதரன்—[படிக்கின்றான்.]

[கலித்துறை]

"ஆவிக்கு மாரனீ யென்றே எழுதினேன் ஆளனென்று
பாவிக்கு நின்னை யகன்றுசோ கத்தாற் பரிதவித்தேன்
சீவிக்கு நன்மருந் துண்டென்று வந்துநீ சேருவையேல்
சேவிக்கு மாறுண்டு நின்னை யளித்தவோர் தெய்வத்தையே."

சுமந்திரன்—[தனக்குள்] சரிதான்; சித்திராங்கி இச் செய்யுளில் தன்னுடைய பாண்டித்யத்தைக் காட்டியிருக்கிறாள். எல்லாம் நான் சந்தேகித்தது போலவே இருக்கிறது.—சாரங்கதரா, ஆனால் நீ போகவேண்டுமா?

சாரங்கதரன்—மித்திரா, தனக்கு உடம்பு ஏதோ அசௌக்கியமா யிருக்கிறதென்றும் தகுந்த மருந்துகளுடன் உடனே புறப்பட்டு வரவேண்டு மென்றும் எழுதியிருக்கும் போது போகாமல் இருந்தால் நன்றாய் இராது. ஆகையால் நான் முன்னே செல்லுகிறேன்; நீ வைத்தியனை அழைத்துக்கொண்டு சீக்கிரம் அவ்விடம் வந்து சேர்.

சுமந்திரன்—சாரங்கதரா, நான் சொல்வதைக் கேள்: கடிதத்தின் கருத்தை நோக்கின் உடனே சென்று சிகிச்சை செய்யக்கூடிய வியாதியாகத் தோன்றவில்லை. நமக்கு ஏன் இந்தக் கவலை? நாம் இன்னும் கொஞ்ச காலம் சம்சார சிந்தையின்றி விளையாட்டிலேயே பொழுது போக்குவோம். வேண்டுமானால் இக்கடிதத்தை என் தந்தையிடம் அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்வோம்.

சாரங்கதரன்—சரி; அப்படித்தான் செய்வோம்.

கனகாங்கி—[தனக்குள்] சரிதான்; சுமந்திரன் உட்கருத்

தைத் தெரிந்துகொண்டான்போல் இருக்கிறது. இருக்கட்டும்.—அரசே, என்ன இருந்தாலும் எங்கள் தேவிக்குத் தங்களிடம் உள்ள நம்பிக்கை மற்றவர்களிடம் இராது; ஆகையால் தாங்கள் வருவதுதான் உசிதமாகும்.

சுமந்திரன்—சேடி, நான் தடுப்பதாக நினைக்கவேண்டாம். இருவரும் முன்னறியாதவர்களாதலால் உன்னுடைய தேவி தன்னுடைய வியாதியை இளவரசரிடம் வாய்விட்டுச் சொல்ல வெட்கப்படுவாளென்று சொன்னேன்.

சாரங்கதரன்—சேடி, சுமந்திரன் சொல்வதும் உண்மையே.— சேவகா, நீ இக்கடிதத்தை மந்திரியிடம் கொண்டுபோய்க் கொடுத்துச் சீக்கிரம் நமது அரண்மனை வைத்தியனை அனுப்பச் சொல்.

சேவகன்—வைத்தியனை அனுப்ப இந்தக் கவனம் எதற்கு? பாடுகிறவன் ஒருவன் வீடு பற்றி எரிகிறதென்று சொந்தக்காரனிடம் இராகதாள பவ்வியமாய்ச் சொல்லுவதற்குள் வீடு முழுதும் வெந்து நீறுகிய கதையாய் முடியவா? சித்திராங்கிதேவி சிரமப்பட்டு இந்தச் செய்யுளை எழுதி அனுப்பினதற்குப் பதிலாக இரண்டொரு வார்த்தையில் சமாசாரத்தைச் சொல்லி அனுப்பி இருந்தால் இத்தனை நாழிகை சிகிச்சை செய்ததாயிருக்கும்.

சுமந்திரன்—சிலருக்கு அர்த்தம் தெரியாததனுலேயே செய்யுள் கடினமானதென்றும் எழுதினவர்கள் சிரமப்பட்டு எழுதியிருக்கவேண்டுமென்றும் சொல்லிவிடலாமா? செய்யுள் நயமோ கனயமகமாக இராமல் சொற்பொருட் சுவையுடன் அமைந்திருக்கிறது.

சேவகன்—ஆம்; மோக நயம் அகமாக இருக்கும் செய்யு ளின் கருத்தை எல்லோரும் அறிந்துகொள்ள முடியாது தான்!

சுமந்திரன்—சரி. நீ போய் உன் காரியத்தைப் பார்.

சேவகன்—[சேடியிடம்] ஏன்? எனக்குச் சொன்னது உனக்கும் சொன்னது போன்றதல்லவா? ஏன் மயங்கு கிறாய்? போகிறதுதானே?

கனகாங்கி—நான் போகவேண்டியதுதானா, அரசே?

சேவகன்—ஆமாம், ஆமாம்.

[சேவகனும் சேடியும் போகின்றார்கள்.]

சுமந்திரன்—சாரங்கதரா, நம்முடைய சேவகன் மிக்க புத்திசாலி என்று நினைக்கிறேன். இவன் இத்தொழி லுக்கு வருமுன் என்ன செய்துகொண்டிருந்தான்?

சாரங்கதரன்—என்னுடைய தந்தையின் அந்தரங்க வேலைக்காரனா யிருந்தானாம்.

சுமந்திரன்—ஆனால் அவரை விட்டு நம்மிடம் வரக் காரணம்?

சாரங்கதரன்—இக்கிழவயதில் அவர் ஒரு யுவதியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டது அவனுக்குப் பிடிக்க வில்லையாம். ஆகையால் அவரை விட்டு என்னிடம் வந்து சேர்ந்தானாம்.

சுமந்திரன்—இப்படிப்பட்ட புத்திசாலியை இழிவான சேவகத் தொழிலிலா வைத்துக்கொள்வது?

சாரங்கதரன்—அவனுடைய தொழிலை இழிவான சேவகத்தொழி லென்று அவன் இல்லாதபோது சொன்னது நல்லதாயிற்று. அவன் காதில் விழுந் திருந்தால் உன்னைச் சண்டைக்கு இழுத்திருப்பான்.

அவன் வாயைக் கிளறினால் ஏதேதோ சொல்லுகிறான். சேவகத் தொழிலில்தான் ஒருவன் தன் நன்றியைக் காட்டக்கூடுமாம். பாரம்பரியமாகப் பெருந்தன்மையில்லாதவர்களுக்கு உயர்ந்த பதவி வந்தால் பக்ஷபாதம் அகம்பாவம் முதலிய துர்க்குணங்கள் தோன்றுகின்றனவாம். அது கிடக்கட்டும். சுமந்திரா, அடிக்கடி என் அறிவு கலங்குகின்றது; சந்தோஷம் நீங்குகின்றது. ஆகையால்,

(இராகம்: அடாணா. தாளம்: ஜம்பை.)

பல்லவி

அகமகிழ ஒருவழி அறிந்தெனக் குரைத்திடா
யிகழ வின் றுநீ யென்னைக் கை விடா (தக)

அநுபல்லவி

மிகவுங்க வலையோங்கி மெலிவடைந் தே னேங்கி
நிகரிலிந் நிலையின் நீங்கி நேருறத் தாங்கி (அக)

சரணம்

தோழர்களி லுனைப்போலத் துணைவனுண்டோ ஞாலத்
தாழுவென் ணியனுகூல மாகவிக் காலத் (தக)

உடுக்கையிழந்தவன்கைபோல் உதவிபுரிதனட்பாமால்
ஒடுக்குமென் கவலை மேன்மேல் ஓங்காமல் இப்பால்(அக)

ஏதேனும் விளையாட்டிற் சற்றுப் பொழுது போக்குவோமா?

பிரவேசம்: சேவகன்.

சேவகன்—சரிதான்! அதற்காகத்தான் எனக்கு ஒரு வேலையைக் கொடுத்து அனுப்பிவிட்டீர்களோ? நான் இல்லாமல் எப்படி விளையாடுகிறீர்களோ பார்ப்போம்.

சுமந்திரன்—பைத்தியக்காரா, பருப்பு இல்லாமல் கல்யாணமா?

சாரங்கதரன் - அதிருக்கட்டும்; வைத்தியனை அனுப்பினையா?

சேவகன்—வைத்தியனை வழியிலேயே கண்டு அனுப்பி விட்டேன்.

சாரங்கதரன்—சரி. நாம் இப்பொழுது என்ன விளையாடலாம்? சொல்.

சேவகன்—என்னையா கேட்கிறீர்கள்?

சாரங்கதரன்—ஆமாம். தேகத்துக்குச் சிறிதும் சிரமமில்லாத விளையாட்டாக இருக்கவேண்டும்.

சேவகன்—எத்தனையோ விளையாட்டுகள் இருக்கின்றன. ஆனால் தேகத்துக்குச் சிரமமில்லாத விளையாட்டு ஒன்று தான்.

சாரங்கதரன்—என்ன அது?

சேவகன்—அரண்மனைப் பரிசாரகனை அழைத்து ஒரு பெரிய தங்கத்தாம்பாளத்தில் பத்து அதிரசம், இருபது போளி, முப்பது லாடு, நாற்பது பேணி, ஐம்பது பூரி, அறுபது அப்பம், எழுபதுவடை, ஒருகட்டுப் பாதாமல்வா, ஓர் அண்டா பாயசம் இவைகளையெல்லாம் கொண்டு வந்து வைக்கச்சொல்லி,

சாரங்கதரன்—தின்று ஜீரணமாகாமல் தயங்கவேண்டும்!

சேவகன்—இதற்குள் அவசரப்படுகிறீர்களே? அவைகளிற் புகுந்து ஆனந்தமாய் விளையாடவேண்டுமென்றல்லவோ சொல்லவந்தேன்.

சாரங்கதரன்—நல்ல விளையாட்டு! சுமந்திரா, நீ என்ன சொல்லுகின்றாய்? சொக்கட்டான் ஆடுவோமா?

சேவகன்—பந்தயம் வைத்தா? பந்தய மில்லாமலா?

சுமந்திரன்—எந்த விளையாட்டும் பந்தய மில்லாமல்தான் ஆடவேண்டும்.

சேவகன்—பந்தய மில்லாத விளையாட்டு ஒருவிளையாட்டா?

சாரங்கதரன்—சுமந்திரா, பந்தயம் வைத்து விளையாடுவ தால் என்ன கெடுதல்?

சுமந்திரன்—இப்படிப்பட்ட ஆட்டங்களைப் பந்தயம் வைத்து ஆடிப் பரதேசியானவர் அநேகர்.

(இராகம்: பேகட, தாளம்: ரூபகம்.)

பல்லவி

இந்தக் கொடுஞ் சூதினால் வந்த தீவினை யாவும்
எண்ணுமலாடலாமோ எவ்வகைப் பழியு மேவும் (இந்த)

அநுபல்லவி

சிந்தையி லறியாயோ நிந்தையில்லாத நின்
சந்திரகுலத்தில் வந்த தருமன் தன்
சொந்த மனைவியைப் பந்தயம் வைத்தி
முந்து மனமிக நொந்ததும் சகத்தி (லிந்த)

சரணம்

ஊரும் பரிசனமும் உற்றமதியும் கெட்டுச்
சாரும் வனத்திற்பல சங்கடங்களும் பட்டுக்
காரும் பயந்தகுழற் காதலியைக்கை விட்டுப்
பேரும் பெருமையும் பிறந்ததன் குலச்
சீரும் செல்வமும் சிறந்திவ்விரு நிலத்
தாரும் புகழ் நளன் அர சிழந்ததும்
தேரும் மடைத்தொழில் செய் துழந்ததும் (இந்த)

சேவகன்—எல்லாம் சரிதான்; செல்வம் ஓரிடத்திலேயே நிலையாக இருக்கிறதானால் செல்வம் சகடக்கால்போல வருமென்று பெரியோர்கள் சொல்லியிருப்பார்களா? பணக்காரர்க ளெல்லாம் இப்படிப்பட்ட ஆட்டங்களை ஆனந்தமாய் ஆடிச் செல்வத்தை இழந்தால்தான் ஏழை களின் தரித்திரம் நீங்கும்? யாருக்கும் பொல்லாதகாலம் வந்தால்தான் போகபாக்கியம் போய்விடுமேயன்றிச் சூதாட்டத்தால் போகுமென்று சொல்லுதல் தவறு. ஆடுகிறவர்கள் அதிர்ஷ்டசாலிகளா யிருந்தால் ஆட்

டமுடிவில் அவரவர் பந்தயம் அவரவரிடத்திலேயே இருக்கும். அதற்குத் திருஷ்டாந்தமாய் இவர் சொன்ன கதையையே எடுத்துக்கொள்ளுங்கள்: அதில் முதலில் நளன் தோற்றான்; புஷ்கரன் ஜயித்தான். பிறகு புஷ்கரன் தோற்றான்; நளன் ஜயித்தான்.

சாரங்கதரன்—சுமந்திரா, சேவகன் சொல்வதும் சரியாகத்தான் இருக்கின்றது.

சுமந்திரன்—மித்திரா, நீ என்ன சொன்னாலும் நான் சூதாடச் சம்மதியேன். முதலில் நியாயமாகவும் விளையாட்டாகவும் தோன்றும் சூதாட்டம் கடைசியில் அளவில்லாத துக்கத்தை விளைவிக்கும்.

[விருத்தம்]

கைக்கெட்டா தொருபொருளுங் கண்டவர்கள்
நகையாடக் கனமும் நீங்கும்
இக்கட்டாம் வருவதெல்லாம் லாபமுண்டோ
கவறுகையில் எடுக்க லாமோ
திக்கெட்டே றியகீர்த்திச் சாரங்க
தரனேநீ சீசீ இந்தச்
சொக்கட்டான் ஆடனன்றே என்சொலினும்
சூதுபெருஞ் சூது தானே.

வேண்டுமென்றால், இன்னும் அதனால் விளையும் கெடுதிகளை எடுத்துச் சொல்லுகின்றேன் கேள்.

(இராகம்: ஆனந்தபைரவி. தாளம்: ஆதி.)
('தொந்திசரிய' என்ற திருப்புகழ் மெட்டு.)

1. உண்மை உயர்வும் அழியும் உருவழியும்
வண்மை வளனும் அழியும் மதியழியும்
பெண்மை நலனி விழியும் பெரும்பழியும்—மிகுமன்றே.

2. தான தருமம் அழியும் தவமழியும்
மான தனமும் அழியும் மனமழியும்
ஞான உணர்வும் அழியும் நலனழியும்—இதனலே.

சாரங்கதரன்—மித்திரா, இவ்வளவேன்? உனக்கு இஷ்டமில்லாவிட்டால் அவ்விளையாட்டே வேண்டாம்.

சேவகன்—ஆனால் வேறு என்ன விளையாட்டு விளையாடலாம் என்கிறீர்கள்?

சுமந்திரன்—எனக்குத் தெரிந்தவரையில் அரசர்கள் ஆடத்தகுந்தது சதுரங்கம் ஒன்றுதான்.

சேவகன்—சரிதான்; மண்டைக் குடைச்சலுக்கு வேறே வேண்டியதில்லை. சிரமமில்லாத விளையாட்டைச் சொல்லும்படி கேட்டால் நல்ல விளையாட்டை யோசித்துச் சொன்னீர்கள்!

சாரங்கதரன்—நீயும் சாப்பாட்டைத் தவிர வேறு விளையாட்டை அறியாய்.

சேவகன்—என்ன? எனக்கா தெரியாது? எத்தனையோ ஆட்டங்களை ஆடித்தான் இந்த நிலையில் இருக்கின்றேன். தேகத்துக்குச் சிரமமில்லாத விளையாட்டாக அல்லவோ இருக்கவேண்டு மென்கிறீர்கள்? இல்லாவிட்டால் இந்தப் பம்பரம், கோலி, பலிசெடு முதலிய விளையாட்டுக்களை யெல்லாம் சொல்லமாட்டேனா? அதிருக்கட்டும்; நீங்கள் எப்பொழுதாவது புறா விட்டு விளையாடி இருக்கிறீர்களா?

சாரங்கதரன்—சேவகா, சமயத்தில் ஞாபகப் படுத்தினாய்; புறாவிளையாட்டென்றால் எனக்குப் போஜனங்கூட மறந்துபோய்விடும்.

சேவகன்—அப்படியா? ஆனால் இனம் இனத்தோடே சேரும் என்பது மிகவும் உண்மையாயிற்று. எனக்குக் கூட இந்தப் புறாவிளையாட்டென்றால் அவ்வளவு பைத்தியம்.

சாரங்கதரன்—ஆனால் அதை முதலிலேயே ஏன் சொல்லவில்லை?

சேவகன்—அரசர்கள் விளையாடத் தகுந்த விளையாட்டோ என்னவோ என்று மயங்கினேன்.

சாரங்கதரன்—சரி; புறாக்களுக்கு இப்பொழுது எங்கே போவது? எனக்கு அதிற் பெரும் பைத்தியம் இருப்பதறிந்து என்னுடைய தந்தை என்னிடம் இருந்த புறாக்களையெல்லாம் மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்துவிட்டார்.

சேவகன்—அதற்காகத் தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நான் தங்களிடம் வேலைக்கு வரும்போது தங்களுடைய ஞாபகார்த்தமாக இரண்டு புறாக்களை வாங்கி இருக்கிறேன். நல்ல ஜாதிப் புறாக்கள்; மிகவும் அழகானவைகள். போய்ப் பிடித்துக்கொண்டு வரட்டுமா?

சாரங்கதரன்—சீக்கிரம் போய்ப் பிடித்துக்கொண்டு வா.
[சேவகன் போகின்றான்.]

சுமந்திரா, புறா விட்டு விளையாடுவதில் உனக்கு ஆக்ஷேபம் ஒன்றும் இல்லையே?

சுமந்திரன்—இல்லை. ஆனால், உன் தந்தைக்குத் தெரிந்தால்—

சாரங்கதரன்—என் தந்தைக்குத் தெரியாதபடி நான் பார்த்துக்கொள்கின்றேன்.

சுமந்திரன்—ஆனால் சரி.

[சேவகன் புறாக்களைப் பிடித்துக்கொண்டு வருகின்றான்.]

சாரங்கதரன்—சேவகா, நான் புறா விட்டு விளையாடுகிறது என் பிதாவுக்குத் தெரியக்கூடாது.

சேவகன்—சரிதான்.

சாரங்கதரன்—ஆனால், என்னிடம் ஒரு புறாவையும் சுமந்திரனிடம் ஒரு புறாவையும் கொடு. [சேவகன் புறாக்களைக் கொடுக்க, சாரங்கதரன் தன்னிடம் கொடுத்த புறாவை உற்றுப்பார்த்து] ஆஹா! இப்புறா என்ன அழகா யிருக்கிறது! மித்திரா,

[விருத்தம்]

வெஞ்சிறைக் கருடன் தோற்று வெட்கிடப் பறக்கு மிந்த
அஞ்சிறை யமைப்பு மானின் அழகிய நோக்குங் கண்ணும்
வஞ்சியர் கொங்கை போன்று வட்டமுற் றகன்ற மார்பும்
நெஞ்சினைக் கவரு கின்ற நேர்மைஎன் சொல்லு வேனே.

சேவகா, இதை எனக்கே கொடுத்து விடுகிறாயா?

சேவகன்—அதற்கென்ன, அப்படியே எடுத்துக்கொள்ளுங்கள்.

சாரங்கதரன்—ஆமாம்; இதைப் பறக்கவிட்டால் மறுபடியும் இது நம்மிடமே வந்து சேருமா?

சேவகன்—அதென்ன அப்படிக் கேட்கின்றீர்களே? இருந்த இடத்துக்கே மீண்டு ஏகும் புறாவா யில்லாவிட்டால் நான் அதைத் தங்களிடம் கொண்டுவந்து கொடுப்பேனா? அப்படி தங்களுக்குச் சந்தேகமா யிருந்தால் அதன் கழுத்தில் தங்களுடைய பேரை எழுதிக் கட்டித் தொங்கவிடுங்கள். யார் கண்ணிற் பட்டாலும் அதைத் தங்களுடையதென்று பத்திரமாய்க் கொண்டுவந்து கொடுத்துவிடுவார்கள்.

சாரங்கதரன்—ஆம். அதுதான் நல்ல யோசனை! [புறாவின் கழுத்தில் தன் பேரை எழுதிக்கட்டி,] சுமந்திரா, விடுவோமா புறாக்களை?

(இராகம் : இந்துஸ்தானி, யமன்; த்ருதாளம்.)
('கோயல்ஸி புகாரூன் மை பன்மே' என்ற மெட்டு.)

வேகமாய்ப் புரு விடுவோம் வாராய்
விமலனே மன மகிழச் சீராய்
மேக லோகத்திற் சென்று நேராய்
விளையாடுதல் பாராய்
மிக்க களி கூராய் (வே)

சுமந்திரன்— விடுகிறேன் என் புருவைக் கூட
விண்ணுலகத்தில் விளை யாடக்
கடுவிசை யாகப் பறந் தோடக்
காணும் விழி தேடக்
கலங்கி மனம் வாட (விடு)

சாரங்கதரன்— படுதுயர் நீங்கி இந்த ஞாலப்
பாச மொழித்தவரைப் போல
விடுசிறை நீங்கி உயர் நீல
விண்ணடைந்து சால
மேன்மையுற்றுற் போல (வே)

சுமந்திரன்— ககன முழுது மது சென்று
களிப்பதைநோக்கின் நமக் கின்று
சுகமுறு லோக மிது வென்று
சொல்வது போல் நின்று
தோன்றிடும் சு மூன்று (விடு)

சாரங்கதரன்—சுமந்திரா, காரோங்கு மண்டலத்திற் சேரோங்க நின்ற ஒருமாயப்புறுவோ என்று நான் மகிழு மாறு பறந்துகொண்டிருந்த என் புரு திடீரென்று இறங்கி அதோ அந்தச் சிகரத்திற் போய் உட்கார்ந்து கொண்டது. ஆகையால் போய் அதைப் பிடித்துக் கொண்டு வருவோம் வா.

சுமந்திரன்—மித்திரா, அதற்காக நாம் போகவேண்டுமா? சேவகனை அனுப்பினால் போய்ப் பிடித்துக்கொண்டு

வருகின்றான்.

சாரங்கதரன்—சேவகா, உடனே போய் என் புறாவைப் பிடித்துக்கொண்டு வா. அதைப் பாராமல் நான் புசிக்கமாட்டேன்.

[சேவகன் போகின்றான்.]

சுமந்திரன்—சாரங்கதரா, ஒரு புறா போனதனாலேயே புசிக்கமாட்டேன் என்று சொல்வது அழகா ?

சாரங்கதரன்—சுமந்திரா, ஒரு புறுவுக்காக ஓர் அரசன் தன் உயிரையே கொடுத்திருக்க நான் புசிக்கமாட்டேன் என்று சொல்லுகிறது விந்தையா ?

சுமந்திரன்—அப்படி உன் புறாவுக்கு வந்த ஆபத்து என்ன ? அதை யார் கண்டாலும் உன் புறாவென்று எவ்வளவோ பட்சத்துடன் போஷித்து ஆதரிப்பார்களல்லவா ?

சாரங்கதரன்—யார் என்ன ஆதரித்தாலும் அதற்கு உரியவர் ஆதரிப்பதுபோ லாகுமா ?

சுமந்திரன்—ஒருவேளை உன் புறா திரும்பி வரவில்லையென்று வைத்துக்கொள்வோம். அதற்காக நீ பட்டினி கிடந்து பிராணனை விடலாமா ?

சாரங்கதரன்—நீ என்ன சொன்னாலும் என் கண்ணுக்கு இனியதாய் எனக்கு மோகந்தரு வன்புறவுக்காக நான் என்னுயிரையும் கொடுப்பேன்,

பிரவேசம் : சேவகன்.

சேவகா, என்ன சமாசாரம் ? ஏன் இப்படித் தேம்பி அழுகின்றாய் ? புறா அகப்படவில்லையா ?

சேவகன்—[அழுதுகொண்டு] இன்று இல்லாவிட்டாலும் நாளைக்கே புறா அகப்படுகின்றது. அதற்காக நான்

அழுவில்லை. நான் ராஜமகேந்திரத்தை ஆளும் நரேந்திர மகாராஜாவின் புத்திரனை சாரங்கதரமகாராஜாவின் சேவகன் என்றும் மதியாமல் கேவலம் ஒரு வேலைக்காரி என்னைக் கடிந்து பேசியதற்காகத்தான் கிலேசப்படுகின்றேன்.

சுமந்திரன்—ஒன்று, சொல்லியேனும் அழு; இல்லாவிட்டால் அழுதேனும் சொல். இரண்டையும் ஏககாலத்திற் செய்தால் என்ன தெரியும்.

சேவகன்—நீங்கள் ஏன் இப்படிச் சொல்ல மாட்டீர்கள்? உங்களை ஒருவரும் அப்படி அவமதித்துப் பேசமாட்டார்களென்கிற தைரியம் அப்படிச் சொல்லச் சொல்லுகிறது.

சாரங்கதரன்—அது கிடக்கட்டும். நடந்த சமாசாரம் என்ன?

சேவகன்—தங்களுடைய புறா சித்திராங்கியின் மாளிகையிற் போய் உட்கார்ந்துகொண்டதென்று கேள்விப்பட்டு நான் அவர்களைக் கண்டு கேட்க, அதற்கு அவர்கள் சாரங்கதரனே நேரில் வந்து கேட்டாலன்றி மற்றவர்களிடம் கொடுக்கமுடியாதென்று சொன்னார்கள். 'அப்படிச் சொல்லக்கூடாது; மகாராஜா அதைப் பாராமற் புசிக்கவுமாட்டார்' என்று நான் எவ்வளவோ சொல்ல, அவளுடைய சேடியாம் யாரோ ஒருத்தி 'ஐந்துரூபாய் சம்பளக்காரனுக்கு வாயைப்பார்' என்று என் கழுத்தில் கையைக்கொடுத்து என்னைப் பிடித்துத் தள்ளினாள். சம்பளம் கொஞ்சம் அதிகமாயிருந்தால் இப்படி அவமானப்பட்டு வந்திருப்பேனா?

சாரங்கதரன்—பைத்தியக்காரா! அதற்காகவா அழுகின்

றாய்? இன்றுமுதல் உனக்கு ஐம்பதுபொன் சம்பளம் தருகிறேன்; சரிதானா?—சுமந்திரா! நான் என் அன்னையிடம் சென்று புருவை மீட்டுக்கொண்டு ஒரு நிமிஷத்தில் திரும்பி வருகின்றேன். அதுவரையில் நீ இவ்விடத்திலேயே இரு.

சுமந்திரன்—சாரங்கதரா, நீ செல்லுவது எனக்கு இஷ்டமில்லை.

சாரங்கதரன்—ஏன்? என்னுடைய சிற்றன்னையிடம் சென்று கேட்பதில் என்ன தவறு?

சுமந்திரன்—என்ன தவறு என்று இப்பொழுது நான் உனக்குச் சொல்லுதல் சரியன்று. ஆகையால்,

(இராகம்: தன்யாசி. தாளம்: ஆதி.)

போகவேண்டாம் நீயும் மன்னா
பூவையாள் மனைக்கே சின்னா
ளேக நீ நினைத்தால் மின்னா
திடி வந்து வீழும் பின்னால் (போ)

சாரங்கதரன்— போக நீயும் தடை யின்று
புரிவதேன் என்முன் நின்று
சோக மென்ன நேரும் என்று
சொல்லுவாய் எனக்கு நன்று (போ)

சுமந்திரன்—மித்திரா! ஒருபுறா போனால் என்ன முழுகிப் போயிற்று?

அந்த வோர் புறாவுக் காக
அன்புள்ள உனது ஸ்நேக
பந்த மெண்ணி நான் அ னேக
பைம்புறா தருவேன் சாகப் (போ)

சாரங்கதரன்—ஒன்றின்மேல் ஆசை வைத்தவர்களுக்கு அவ்வொன்றினாலன்றி அதுபோன்ற மற்றவைகளால் இன்பமுண்டாகுமா? நீ ஆயிரம் புறாதான் கொடுத்தாய்,

அவைக ளெல்லாம் அவ்வொன்றுக்கு ஈடாகுமா? ஆகையால்,

அந்தரத்தில் விளை யாடி
அன்னையின் மனையை நாடி
வந்த புறவைக் கொண் டோடி
வருவதற் கேன்வா தாடிப் (போ)

சுமந்திரன்—சாரங்கதரா, நீ நடந்த சங்கதிகளை அறியாய். ஆதலின் சித்திராங்கியை உன் சிற்றன்னை யென்று எண்ணியிருக்கின்றாய். அவள்,

சிற்றன்னை யல்ல உன் ஆவி
சிதைக்க வந்த மா யாவி
குற்றமற்ற என்சொல் நீவிக்
கொலைக் காளாகாதே பாவி (போ)

சாரங்கதரன்—சுமந்திரா, நிஷ்காரணமாய்ப் பிள்ளையைக் கொன்று பெரும்பழிக்காளாகும் ஸ்திரீகளும் இத்தரணியில் இருப்பார்களா என்று யோசிக்காமல் ஏன் அநியாயமாய் மற்றவர்மீது குற்றம் கூறுகின்றாய்?

உற்றவள் எனக்கே அன்னை
உணராம லேயின் றுன்னை
முற்று மறந்திப் பொய் தன்னை
மூடனே மொழிவ தென்னை (போ)

சுமந்திரன்—[தனக்குள்] ஹே! க்ருபாநிதே! நான் காரணத்தைச் சொன்னாலோ மதியீனம்; சொல்லாவிட்டாலோ விதியீனம். இப்படி என்னை இருதலைக் கொள்ளி எறும்பாக்கி ஹிம்சிக்க நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்? விஷயத்தை நான் வெளிப்படையாகச் சொல்லுவதுதான் உன் திருவுளச் சம்மதமெனின் நான் என்ன செய்வேன்? சாரங்கதரா,

சுந்தரப் புருவைத் தேடித்
தோழனே செல்வாயேல் நாடித்
தந்திரமாய் உன்னைக் கூடித்
தழுவ வருவாள் ஓடிப் (போ)

சாரங்கதரன்—சண்டாளா! என்ன சொன்னாய்?

சிந்தை கெட்டுச் சேயைக் கட்டிச்
சேரும் தாயும் உண்டோ கிட்டி
விந்தை சொன்ன உன்னை வெட்டி
வீழ்த்தாமல் விட்டேன் நான் மட்டி (போ)

ஏர் உழுபவன் இளப்பமானால் எருதும் மைத்துனன் முறை கொண்டாடும் என்பதுபோல் நான் உனக்கு நண்பனென்னும் ஒரு சுதந்தரத்தைக் கொடுத்ததனாலல்லவோ உருக்கிய செம்பை என் காதில் ஊற்றுகின்றாய்? என் அன்னையை வேசியென்று நினைத்தாயா? அல்லது என்னைத் தாயைத் தழுவும் நீசனென்று நினைத்தாயா?

சுமந்திரன்—சாரங்கதரா, என்மீது உனக்கு ஏன் இவ்வளவு கோபம்? விளக்கைப் பிடித்துக்கொண்டு யாரேனும் கிணற்றில் விழுவார்களா? உன்னுடைய நலத்தைக் கோரியே உனக்கு இவ்வளவு தூரம் சொல்லத் துணிந்தேன். இதோ உன் பாதம் பணிந்தேன். நான் சொன்னதைக் குற்றமாக எண்ணி என்மேல் கோபம் கொள்ளாதே; என் சொல்லைத் தள்ளாதே. வா, அரண்மனைக்குப் போவோம்.

சாரங்கதரன்—காதகா, என் கண்முன் நில்லாதே. போ, அப்புறம். உன் வார்த்தையைக் கேட்டுக் கோபம் மட்டுமா வரும்? கொடிய பாபமும் வரும்.

சுமந்திரன்—மித்திரா, வேண்டாம்; கெடுமதி கண்ணுக்குத் தோன்றுது. வீண்பழியை ஏன் விலைக்கு வாங்கிக் கொள்கின்றாய்? வழிதவறி வந்த புறாவை யாரிடத்திற் கொடுத்தனுப்பினால் என்ன வென்று சேவகனிடம் கொடாமல் நீயே நேரில் வரவேண்டுமென்று சொன்னதிலேயே அவளுடைய வஞ்சகம் உனக்குத் தெரியவில்லையா? இவைகளை எல்லாம் நன்றாய் யோசித்துப் பாராமல் வீணாக என்மேற் கோபங்கொண்டு என்ன பயன்? நான் சொல்வதைக் கேள்.

(இராகம்: சாமா. தாளம்: ஆதி.)

பல்லவி

சாந்தமில்லையேல் சௌக்கியமில்லை
சாரங்கதர ராஜனே (சாந்)

அநுபல்லவி

வேந்தனானாலும் வே தாந்தனானாலும் (சாந்)

சரணம்

1. ஆகம சாஸ்திரம் அனைத்தும் படித் தென்ன
வேகமாய்ப் பலமன வேறுபாடறிந் தென்ன (சாந்)

2. பூமியில் யாவரும் போற்றுகின்ற துரை
சாமி துதிபெறு ஸ்ரீ தரன்தனக்கும் உரை (சாந்)

தன்னுடைய தங்கையாயிருந்தாலும் ஒருஸ்திரீ தனித்திருக்கும்போது புருஷன் அவளிருக்கும் இடத்திற்குப் போகக்கூடா தென்று பெரியோர் கூறுவர். ஆகையால், வீம்புக்குக் கச்சை கட்டாதே. உன்னை வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன். போகவில்லை என்று சொல். இல்லாவிட்டால் போகுமுன் என்னைக் கொல்.

[சாரங்கதரன் காலைப் பிடித்துக்கொள்கின்றான்.]

சாரங்கதரன்—காதகா! வேண்டாம், கபடக் கண்ணீர் வடித்துக் காலைக் கட்டாதே.

சுமந்திரன்—

(இராகம்: சுரட்டி. தாளம்: சாபு.)

பல்லவி

வேண்டாம் உனக் கிந்த விபரீத புத்தி
ஆண்டகையே சென்றால் அல்லலே சித்தி (வே)

சரணம்

தூண்டில் மீனைப் போலத் துடித்து நீ சாலத்
துள்ளுத லென்கால தோஷத்தின் கோலம் உனைத்
தூற்றும் இஞ் ஞாலம் (வே)
சாண்பிள்ளை யாகிலும் ஆண்பிள்ளை யல்லவோ
வீண்பழி யாமென்றே வாய் விட்டுச் சொல்லவோ எனை
வெறுத்துக் கொல்லவோ (வே)

சாரங்கதரன்—நீ சொல்லுவதைப் பொய்யென்று ரூபிக்க வேணும் நான் என் அன்னையிடம் போய் வருவேன். தடுத்துரைத்தால் உன் தலையைத் துணிப்பேன். போ, அப்புறம். [சுமந்திரனை உதைத்துத் தள்ளிவிட்டுப் போகின்றான்; சுமந்திரன் சோகித்து விழுகின்றான்.]

சேவகன்—அப்பா! இப்பொழுதுதான் என் யோசனை பலித்தது.—அரசே, இருங்கள்; நானும் வருகிறேன்.

[சேவகன் போகின்றான்.]

அங்கம் 2.

களம் 2.

இடம் : சித்திராங்கியின் அந்தப்புரம்.

பிரவேசம் : சித்திராங்கி.

சித்திராங்கி—

(இராகம் : ஆனந்தபைரவி, தாளம் : ஆதி.)

பல்லவி

வருவானோ வாரானோ வந்தொரு முத்தம்
தருவானோ தாரானோ (வரு)

அநுபல்லவி

மருவார் மலர்க்கணை வில் மதனைகமந் தனக்குக்
குருவானோன் போலக் கூடிக் கொஞ்சிக் குலாவ ஓடி (வரு)

சரணம்

சப்ரமஞ்சத்தை மேவிச் சகல மலரும் தூவி
இப்ரபஞ்சத்திலுள்ளா ரெவருமெந்நாளும் கொள்ளாத்
திக்ப்ரமை கொள்ளு மாறு செய்தேன் மயிலி லேறு
சுப்ரமண்யன்போற் கூடிச் சுகித்திருக்க ஓடி (வரு)

ஐயோ! கண்காள்! உங்களை நம்பி நான் என்ன மதி மோசம் போனேன். உங்களுடைய உதவியால் சாரங்கதர சித்ரரூப தரிசனமிருதத்தைப் பருகியும் அவனுடைய நித்தியகல்யாண நிஜசௌந்தரிய ரூபலாவண்ய தரிசனப்பிராப்தி இல்லாமல் உயிரை இழக்க நேரிட்டதே! ஐயோ! ம்ருத்யுவைப் போக்குவதல்லவோ அமிருதம்? அப்படிப்பட்ட அமிருதத்தை முன்னமே நான் என் மோகனுங்கனுடைய சித்திரப் படத்தைக் கண்டு பருகியவளல்லவா? அப்படியிருக்க, அவனுடைய

நிஜரூபத்தை நேரிற் பாராமற்போனால்தான் என்ன? அதற்காக அமிருதமும் தன் குணம் மாறி என்னைக் கொல்லவேண்டுமா? ஒருவேளை என் மனோகரனுடைய சித்திரப்படத்தை மிதமாகப் பார்த்துத் திருப்தி அடையாமல் மேன்மேலும் பார்த்து அளவுக்கு மிஞ்சிய அமிருதத்தைப் பருகியதனால் அமிருதமும் என்னளவில் விஷமாயிற்றோ? துரையே, அப்படி ஆனாலும் ஆகட்டும், உன்னைப் பாராமல் என்பிராணன் போனாலும் போகட்டும் என்று இருக்கலாமென்றாலோ? இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் என்னுடைய உண்மையான மோகத்தை அறிந்து என் இஷ்டம்போல் இராமல் என் உயிரைப் போக்கியதற்காக நீ உன்னை நொந்துகொள்வாய். அப்படிப்பட்ட மனவேதனைக்கு உன்னை ஆளாக்கக் கூடாதென்னும் எண்ணம் என்னைத் தடுப்பதனால்தான் உயிரை விட மனமில்லாமல் யமனோடு போராடுகின்றேன். இல்லாவிட்டால், எப்பொழுதோ என் பிராணனை விட்டிருப்பேனடா! ஐயோ! இப்படித் தனித்துயருற்றுத் தவிக்கத்தானோ ஜன்மமெடுத்தேன்! வெட்கத்தை விட்டுச் சேடியிடம் கடிதம் எழுதிக் கொடுத்தும், அவளையே உன்னிடம் தூதாக விடுத்தும், நீ என் உள்ளக்கருத்தை அறிந்து ஓடிவராமல் என்னை வஞ்சித்தாயெனின் வேறு எந்தக் காரணத்தைக் கொண்டு நான் உன்னை இங்கு வரவழைத்து உன் வதன ஸரோருகத்தைக் கண்டு இம் மதன சரமழையினின்றும் தப்பிப் பிழைத்துச் சந்தோஷிக்கப்போகிறேன்! மோகனாங்கா, உன்னைப் பாராத ஒவ்வொரு நிமிஷமும் நான் அனுபவிக்கும் அவஸ்தை ஒன்றல்லவே! உன்னுடைய மோகத்தால் நான் இந்த லோகத்தையே பகைத்துக்

கொண்டேனே! உன்னுடைய சிநேகமொன்றே எனக்குச் சகலபோகமும் என்றிருக்கும் என்னை நீ ஒருவன் அருகில் இல்லாததனால் இந்த அசேதனப் பொருள்களெல்லாம் வாட்டி வருத்துகின்றனவே! இவ்வளவு பகைவரும் உன்னைக் கண்டால் பருதியைக் கண்ட பனிபோல் பயந்தோடிப் பதுங்குவார்கள். ஆதலால், வாடா! வந்து ஒரு முத்தம் தாடா! உன்னுடைய சோதனைக்கு நான் ஈடா! இப்படிப் பராமுகமா யிருப்பது என்னைப் பரிக்ஷிக்க எண்ணிச் செய்யும் சோதனையோ? அல்லது, வேறு எவரேனும் உனக்குச் செய்த போதனையோ?

பிரவேசம்: கனகாங்கி.

கனகாங்கி—சித்திராங்கி, என்னடி? இது? ஏதோ சட்டி சுட்டது கை விட்டது என்று தேறுதல் பண்ணிக் கொண்டு நம்முடைய ஊருக்குப் போய்ச் சேர வழி தேடாமல் இப்படிக் கவலைப்பட்டுக் காலம் கழிப்பது நன்றாயிருக்கிறதா? நான் சொல்லுவதைக் கேள். எழுதாத விதி அழுதால் வரப்போகிறதில்லை. இந்தச் சாரங்கதர சிந்தையை இனி அடியோடு மறந்துவிடு.

சித்திராங்கி—சேடி, நான் என்னடி செய்வேன்? நீ எவ்வளவு சொன்னாலும் இந்த மோகத்தை என்னால் மறக்க முடியவில்லையே.

[கலித்துறை]

மின்னே அவர்தந்த வேட்கையை மீட்கும் விரகறிய
முன்னே தவங்கள் முயன்றில னேமுன்செய் வல்வினையால்
என்னே எனதழ கெல்லாம் அவர்க்கும் எனக்குமின்றிக்
கொன்னே பசலை பசந்தின்ன வாறு குறைக்கின்றதே.

கனகாங்கி, எங்கிருந்தாலும் என் மனோகர சிந்தாமிருத மயக்க மென்னவோ என்னை விட்டு நீங்கப்போகிற தில்லை. வெட்கத்தை விட்டுக் கெட்டது கெட்டேன். இங்கேயே இன்னும் சில நாள் இருந்து பார்க்கிறேன். இதற்குள் சாரங்கதரன் இங்கு வந்தால் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் இங் கேயே பிராணனை விட்டுவிடுகிறேன். நீ என்னுடைய கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுத்ததும் என் மனோகரன் என்ன சொன்னானென்று சற்றுத் தயை செய்து விவரமாய்ச் சொல்லமாட்டாயா?

கனகாங்கி—ஆமாம். சொன்னார்: சுரைக்காய்க்கு உப் பில்லை யென்று! ஸங்க்ரஹமான சமாசாரம்: சாரங்க தரன் இங்கு வரப்போகிறதில்லை. அவ்வளவுதானே, உனக்குத் தெரியவேண்டியது?

சித்திராங்கி—அது தெரிகிறதடி. ஆயினும், நீ போய்க் கடிதத்தைக் கொடுத்ததும் உன்னை என்ன கேட்டான்? எவ்வாறு உபசரித்தான்? கடிதத்தை வாங்கும்போது அவனுடைய முகபாவம் எப்படி இருந்தது? கடிதத் தின் உட்கருத்தைத் தெரிந்துகொண்டானா? அருகில் வேறு யார் இருந்தார்கள்? இன்னும் என்ன நடந்தது? எல்லாவற்றிற்கும் விவரமாய் ஒரு நிமிஷத்திற் பதில் சொல்.

கனகாங்கி—இத்தனை கேள்விகளுக்கும் என்றால் ஒரு நிமிஷத்திற் பதில் சொல்லவும் முடியாது; இவைகளை யெல்லாம் விவரமாய்ச் சொல்ல நான் அபிநய பாவ ரூப சப்த க்ராஹ்யையும் அல்ல.

சித்திராங்கி—

(இராகம் : காம்போதி. தாளம் : ரூபகம்.)

பல்லவி

பதறுகிறது பதைக்கிற துள்ளம்
பார்த்தறிந்த தெல்லாம் சொல்லடி
பண்பாய் நில்லடி மனம் கல்லடி அடி
பகட்டுத் தளுக்குக் குலுக்கென்ன போடி (பத)

அநுபல்லவி

கதறுமென் உள்ளக் கருத்தினை நித்தம்
கண்டறிந்தும் இந்தக் கபடம் ஏன் வித்தம்
சிதறுமோ சிந்திப் போகுமோ வாய் முத்தம்
சித்தஜன் உரைத்ததைக் கேட்க என் சித்தம் (பத)

சரணம்

சேடியரில் உன்னைப்போ லெனக் குண் டோடி
தெரிந்திருந்தும் நீ செய்வதேன் இம் மோடி
நாடி நானும் காம்போதி ராகம்
பாடி யேழிசை யோதி மோகம்
கூடி மருவிக் குலாவி விளை யாடிக்
கொஞ்சியே பொன்னிறப் பஞ்சணையில் உற
வாடியே மகிழுமா றெனக்கு நாடி
அன்புடன் நீயும் சொல்லாத தென்ன போடி (பத)

கனகாங்கி—சித்திராங்கி, உனக்குச் சொல்லக்கூடா தென்கிற எண்ணமொன்றும் எனக்கு இல்லை. உன்னுடைய நலத்தைக் கோரியே இதுவரையிற் சொல்லா திருந்தேன். சொல்லித்தான் தீரவேண்டு மென்றால் இதோ சொல்லிவிடுகிறேன் : சாரங்கதரன் இன்னும் உன் உள்ளக்கருத்தை அறியான்; கடிதத்தைக் கண்டதும் உண்மையில் நீ ஏதோ வியாதியால் வருந்துகிறதாகவே நினைத்து இங்கு வருவதாகத்தான் புறப்பட்டான். அதற்குள் அவனுடன் இருந்த சுமந்திரன் அவனைத் தடுத்துவிட்டான்.

சித்திராங்கி—சாரங்கதரனுக்கு இன்னும் என் எண்ணம் தெரியாதா? ஆனால், என்றேனும் ஒருநாள் என்னைப் பார்க்க வருவான். அதுவரையில் நான் இங்கேயே காத்திருந்து காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கின்றேன்.

கனகாங்கி—சித்திராங்கி, நான் சொல்வதைக் கேள். இவ்வூரில் எல்லோரும் உன்னை நரேந்திரன் மனைவியென்றே எண்ணியிருக்கிறார்கள். ஆகையால், சாரங்கதரனைக் கண்டு நீ அவனைச் சேர நினைத்தால், பிள்ளையின் கையைப் பிடித்திழுத்த பெரும்பாவியென்றுன்னைத் தூற்றுவார்கள். நரேந்திரனுடைய வஞ்சகத்தை எல்லோரும் அறியும்படி ரூபிக்கத்தக்க ஆதாரங்களும் நமக்கு இங்கே இல்லை. ஆகையால் இங்கிருந்து இப்படிப்பட்ட பழிக்கு ஆளாவதினும் நம்முடைய ஊர்போய்ச் சேருவது உசிதமாகும்.

சித்திராங்கி—கனகாங்கி, என்னுடைய மோகத்தைக் கண்டு இந்த லோகத்தாரெல்லாம் என்னை நிந்தித்தாலும் நிந்திக்கட்டும். அதனால் நான் சந்திக்குச் சிரிப்பானாலும் சரி. இன்பமில்லாதவரோடு என்னைப் பந்திக்கும் இந்தப் பாழும் நியாயங்களுக்குப் பயந்து சிந்திக்குந்தோறும் என் மனம் மிக ஆனந்திக்கும் ஒரு திவ்விய மங்கள ரூபத்தை விட்டுப் பிரிந்திருக்கச் சம்மதியேன்.

கனகாங்கி—'அரைக்காசுக்குப் போன மானம் பின் ஆயிரம் பொன் கொடுத்தாலும் பொருந்திடாது' என்று சொல்லுவார்கள். பிறகு உன் இஷ்டம்.

சித்திராங்கி—மானமாவது, அவமானமாவது! மாறாத அபிமானம் ஒன்றுதான் லோகத்திற் சிறந்ததாம். அது

மட்டும் திடமாயிருந்தால் மற்றவர்களுக்கு நாம் பயப் படவேண்டியதே யில்லை. இரு; என்ன இது? என்னு டைய இடது தோள் துடிக்கின்றது; அதற்கு அனு குணமாக அருகில் ஏதோ படபடவென்று அடிக் கின்றது.

பிரவேசம்: சாரங்கதரன் புரு.

(இராகம்: ஆரபி. தாளம்: ஆதி.)

பல்லவி

அடிசேடி யிங்கோடி வாடி சிற
கடித்துவந்த புருவைப் பிடித்துத் தருவாய் (அடி)

சரணம்

படிமிசை யிதுபோற் பறவையை யென்றும்
பார்த்ததே இல்லை மட மானே மனம்
பதறுகின்றதென் செய்கு வேனே அடி
பணிந்தேன் இதை இனித் துணிந்தே பிடி (அடி)

எனக்கு உண்டான சகுனத்தையும் இப்புரு இங்குற்ற ஆச்சரியத்தையும் நினைத்தால் ஒருவேளை இது சாரங்க தரனிடமிருந்து வந்த தூதாக இருக்குமோ என்று தோன்றுகிறது. மெல்லப் போய்ப் பிடித்துக்கொள்.

கனகாங்கி—உன் கண்ணுக்கு இப்பொழுது எல்லாம் சாரங்கதரமயமாகத்தான் இருக்கும்! ஏதோ ஒருபுரு வழிதவறி வந்து விட்டால் அதைப் பார்த்து என்னவோ சொல்லுகின்றாயே! சாரங்கதரனுடைய வன்புறவில் மோகம் கொண்டவளுக்கு இந்த வன்புற வெதற்கு?

சித்திராங்கி—உன்னைப் பிடித்துக் கொடுக்கும்படி கேட்ட தனால் அல்லவா என்னைப் பரிகசிக்கின்றாய்? நீ பிடித் துத் தராவிட்டாற் போகின்றது. நானே போய்ப் பிடித்துக்கொள்ளுகின்றேன். புருவே, ஏன் இப்படி

மருள் மருளப் பார்க்கின்றாய்? நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை. பயப்படாதே. [புறுவின் அருகில் போய் அதைப் பிடித்துக்கொள்ளுகிறாள்] சேடி, இதோ பார்: இதன் கழுத்தில் 'சாரங்கதரன்' என்று எழுதித் தொங்கவிட்டிருக்கின்றது.

[கலித்துறை]

பன்னகம் போல வருகின்ற மாரன் பகழியினால்
என்னகம் மிக்க இடருறு வண்ணம் எனதிறைவன்
தன்னகம் மேவுந் தளர்வுறு தேயெனத் தன்புறவை
முன்னகத் தூது விடுத்தனனேவடி மொய்குழலே.

உறுதியான ஆசைகொண்டவர்களுக்கு அவரவருடைய கருத்துக்கு ஏற்ற அநுகூல ஸம்பவங்கள் நேரிடும் என்பதற்கு இது ஒன்றே நிதரிசனமாகும். இப்புறவை மீட்டுக்கொண்டு போகச் சாரங்கதரன் இங்கே எப்படியும் வருவான். நீ இதைக் கொண்டுபோய் ஒரு கூண்டில் அடைத்து வை.

[கனகாங்கி புறுவைப் பிடித்துக்கொண்டு போகிறாள்.]

பிரவேசம்: சேவகன்.

சேவகன்—அம்மா! சாரங்கதரமகாராஜா இங்கு வந்தாரா?

சித்திராங்கி—ஏனடா? உனக்கு என்னுடைய நிலைமை அவ்வளவு ஏளனமாய்ப் போயிற்றோ?

சேவகன்—பார்த்தீர்களா? நீங்கள் என்னை வெருட்டியடித்துத் துரத்திவிட்டாலும் நான் அப்படியெல்லாம் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பேனா?

பிரவேசம்: கனகாங்கி.

கனகாங்கி—நினைக்காமல்தான் சாரங்கதரனை அருகில் வைத்துக்கொண்டு சாரங்கதரன் கைலாசத்தில் இருக்கின்றானென்று சொன்னாயோ?

சேவகன்—நான் சித்திராங்கியின் சேவகன் என்று சாரங்கதரனுக்குத் தெரிந்தால் என்னுடைய யோசனை வீணுகத்தானே போயிருக்கும்?

சித்திராங்கி—ஆனால் உன்னுடைய யோசனை பலித்துவிட்டதென்றுதான் சாரங்கதரன் இங்கு வந்தானு என்று கேட்க வந்தாயோ? உன்னுடைய யோசனையும் பலிக்கவில்லை. சாரங்கதரனும் இங்கு வரவில்லை. போய்ச் சேர்.

சேவகன்—என்னுடைய யோசனை பலித்ததென்று ரூபித்தால் மறுபடியும் என்னைச் சேவகத்தில் வைத்துக் கொள்ளுகின்றீர்களா?

சித்திராங்கி—அப்படித்தான் ஆகட்டும். முதலில் நீ செய்த யோசனை என்னவென்று சொல்.

சேவகன்—சாரங்கதரனுக்குப் புறுவிடுவதில் அதிகப் பிரீதியென்று கேள்விப்பட்டு இங்கே வந்ததுமுதல் உங்களுக்குத் தெரியாமலே இரண்டு புறுக்களை வாங்கி நம்முடைய மாடியில் வைத்து வளர்த்துக்கொண்டு வந்தேன். நீங்கள் என்னை வெருட்டி ஓட்டியதும் சாரங்கதரனிடம் போய் அவனைப் புறு விட்டு விளையாடும்படித் தூண்டி என்னுடைய புறுக்களைக் கொண்டுபோய்க் கொடுத்தேன். சாரங்கதரன் அதில் ஒன்றைத் தனக்கே கொடுக்கும்படிக் கேட்டு வாங்கிக்கொண்டு ஆகாயத்திற் பறக்கவிட்டான். புறு நம்முடைய மாடியில் வளர்ந்ததாகையால் விட்ட கொஞ்ச நாழிகைக் கெல்லாம் இங்கே வந்து உட்கார்ந்துகொண்டது. உடனே அவன் அதை மீட்டுக்கொண்டு வரும்படி என்னை இங்கே அனுப்ப, நான் உங்களுக்குத் தெரியாமல் மாடிக்

குப் போய்ப் புறுவைப் பிடித்துப் பத்திரப்படுத்திவிட்டுச் 'சாரங்கதரனே நேரில் வந்து கேட்டால்தான் புறுவைக் கொடுப்பேன்' என்று தாங்கள் சொன்னதாகச் சொன்னேன். உடனே சாரங்கதரன் தடுத்துரைத்த சுமந்திரன் சொல்லைக் கேளாமல் புறுவை நேரில் வந்து மீட்டுக்கொண்டுபோக இவ்விடத்துக்குப் புறப்பட்டான். மற்றவர்களுக்குத் தெரியாமல் அவன் இங்கு வந்து போவது உசிதமென்று எண்ணிப் புறுவை ராத்திரி போய் வாங்கிக்கொள்ளலா மென்று நரன் சொல்ல, அவனும் அதற்குச் சம்மதித்தான். ஆகையினால்தான் அவன் வருகிற சமயம் பார்த்துப் புறுவைப் பிடித்துக் கொண்டுவந்து நான் இவ்வறையிற் பறக்க விட்டேன். அதோ: சாரங்கதரன் வருகிறான்போ லிருக்கின்றது!

சித்திராங்கி—சேவகா, இவ்வளவு பிரீதியை என்னிடம் வைத்து நீ செய்த உபகாரத்துக்கு நான் என்ன கைம் மாறு செய்யப்போகின்றேன். நன்றி யறியாமல் நான் உன்னைக் கடிந்து பேசியதற்கு என்னை மன்னிக்க வேண்டும்!

பிரவேசம்: சாரங்கதரன்.

சாரங்கதரன்—சேவகா! உன்னை எங்கென்று தேடுவது? எத்தனை நாழிகை உனக்காக அரண்மனையிற் காத்துக் கொண்டிருப்பது?

சேவகன்—மன்னிக்கவேண்டும்! அரண்மனைக் காவற் காரன் உள்ளே விடமுடியா தென்று சொன்னதனால் தங்களுக்காக இங்கு வந்து காத்துக்கொண்டிருக் கிறேன். நானும் இப்பொழுதுதான் வந்தேன்.

சாரங்கதரன்—சரி. தாயே, நமஸ்காரம்!

சித்திராங்கி—[தனக்குள்] என்ன? 'தாயே, நமஸ்காரம்'! இருக்கட்டும்.

(இராகம் : சுரட்டி. தாளம் : ஆதி.)

பல்லவி

சாரங்கமா ராஜேந்திரா சப்ரமஞ்சத்தி லமர்ந்திடாய் (சா)

அநுபல்லவி

வீரங்குன்றி மிகவாடு மென் வீடேறி நீ வந்த தேது (சா)

சரணம்

1. நீயே என்னைக் காண நினைத்து வந்தாயோ
நின்னை நீங்கி வாடும் நிகரில்லா
நோயே தீர என் நோன் பிங் குன்னை
நுந்தியதோ சொல் புகரில்லா (சா)

2. தாயன் றக மகிழ்ந் துதார நிலையைத்
தான் கொண் டாற்று முப சாரமெல்லாம்
நீயன் றுணரா நிலையிற் பெற
நேரிழை செய்வேன் அந் நேரமெல்லாம் (சா)

துரையே, வா; இவ்வாசனத்தில் உட்கார்!—சேடி, போய்க் கந்த புஷ்பங்களைக் கொண்டுவா.

சாரங்கதரன்—அம்மா, தங்களுக்கு இப்பொழுது உடம்பு ஒன்றுமில்லையே?

சித்திராங்கி—நன்றாயிருக்கிறது! சாரங்கதராமிருத சஞ்சீவியைப் பெற்ற எனக்கு என்ன குறை? அது கிடக்கட்டும்; சாரங்கதரா, நான் ஒருபாபி இருக்கின்றேன் என்று உனக்குக் கண் தெரிந்ததா? ஏது இவ்வளவு தூரம் வந்தது? வழி தவறி வந்துவிட்டாயா, என்ன?

சாரங்கதரன்—தாயே, அப்படி ஒன்றும் இல்லை. என்னுடைய புறுவை மீட்டுக்கொண்டுபோக வந்தேன். ஆகையால் தயைசெய்து அதைத் தருவீர்களாயின் பெற்றுச் செல்கின்றேன்.

சித்திராங்கி—சாரங்கதரா, நன்று யிருக்கின்றது! உன்னுடைய மனந்தான் என்னளவிற் கல்லா யிருந்தாலும் என்னுடைய மனமும் அப்படியே இருக்கு மென்று நினைத்தாயா? நான் வந்தவனை உபசரித்து ஆசையோடு ஆதரிக்கத் தெரியாத பாபியா? அல்லது இங்கித ஞானம் இல்லாதவளா? புறு எங்கே ஓடிப்போகின்றது? அப்படித்தான் போகும்போது வாங்கிக்கொண்டு போகலாம். உட்கார். எங்கேயடி, கந்த புஷ்ப களப கஸ்தூரிகள்?

கனகாங்கி—அதோ கொண்டுவந்து வைத்திருக்கின்றேன்.

சாரங்கதரன்—தாயே, இவைகளெல்லாம் எனக்கு என்னத்திற்கு? இதோ தங்களை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றேன்,—

சித்திராங்கி—மகா ராஜனு யிரு!

சாரங்கதரன்—காலதாமத மின்றி என்னுடைய வன்புறவைக் கொடுத் தனுப்புவீராயின் தங்களுக்கு எவ்வளவோ புண்ணியம். ஏனெனில், உணவு இல்லாமல் அது வருத்தப்பட்டுக்கொண் டிருக்கும்.

சித்திராங்கி—துரையே, இப்படியெல்லாம் அவசரப்பட்டால் உன்னுடைய மோக வன்புறவைப் பெற முடியாது. ஏதோ வராதவன் வந்தாய் என்று அகமகிழ உபசரித்து உன்னோடு கொஞ்சநாழிகையேனும் கொஞ்சிக் குலாவி யிருக்கலா மென்று நினைத்தால், ‘புறு, புறு’ என்று புலம்புகின்றாயே? என்னதான் ஒன்றும் தெரியாதவளா யிருந்தாலும் உன்னுடைய வன்புறவுக்கேற்ற உணவைக் கொடுத்து அதைப் போஷிக்கக்கூடவா ஒருத்திக்குத் தெரியாமற்போய்விடும்? நானும் இந்தப் புறு, கிளி, மயில், குயில் முதலியவைகளை

வளர்த்து வருகிறேன்; ஆதலால், அதற்குக் காலாகாலம் அறிந்து ஏற்ற உணவளிக்க எனக்கும் தெரியும். என் இரு புருக்களின் மத்தியிலுள்ள ஒரு கூண்டில்தான் உன்னுடைய மோக வன்புறவைப் பத்திரப்படுத்தி இருக்கிறேன். அதற்கு ஒரு துன்பமும் நேரிடாது.

சாரங்கதரன்—தாயே, உண்மையாகவா?

சித்திராங்கி—உண்மையாகத்தான். ஆத்திரப்படாமல் இருந்தால் உன்னுடைய புறவோடு என்னுடைய மோக வன்புறவையும் உனக்குக் கொடுக்கின்றேன். ஆனால், ஒன்று: என்னை அயலெனக் கருதி நீ செய்யும் இந்த வந்தனங்களையும் சொல்லும் மரியாதை வார்த்தைகளையும் மறந்தால்தான் அவைகளைக் கொடுக்கமுடியும். நீ என்னைத் தாயே என்று தண்டனிடும் போதெல்லாம் எனக்குத் தேகாத்யந்தம் ஊசியை ஏற்றுவதுபோல் இருக்கின்றது.

சாரங்கதரன்—ஆனால் தாங்கள் என்னுடைய தாயல்லவா?

சித்திராங்கி—இல்லை; — சிலருக்குத் திடீரென்று எதிர்பாராத பதவி வந்தால் எல்லோரும் தங்களை அதற்கு உரிய சிறப்புப் பெயரால் அழைக்கவேண்டு மென்று கோருவார்கள். நான் எப்பொழுதும் நிலையாயுள்ள பதவியையே கோரினவள். ஆகையால் எனக்கு அப்படிப் பட்ட வீண்பெருமையிற் பிரியமில்லை. மேலும், தன்னினும் வயதானவர்கள் மூத்தோருக்கு உரிய முறைப் பெயரால் தன்னை அழைப்பது வெட்கத்தைத் தருவதோடு க்ஷேமாபிவிருத்திக்கும் விரோதமாகு மென்று சொல்லுவார்கள்.

சாரங்கதரன்—இஷ்டத்துக்கு விரோதமாக நடந்து கஷ்டப்படுத்தவேண்டுமென்கிற எண்ணம் எனக்கு ஒருநாளுமில்லை. எப்படி அழைக்கவேண்டுமோ சொன்னால் அப்படியே அழைக்கிறேன்.

சித்திராங்கி—ஆனால், கண்ணே — சரி, பெண்ணே என்று அழை.

சாரங்கதரன்—அவ்வாறு நான் ஒருநாளும் அழைக்க மாட்டேன். மகனென்று என்னை மன மகிழ்ந்து ஆதரிக்கும் அன்னையையோ கேவலம் பணிவிடைப் பெண்களை அழைப்பதுபோல் 'பெண்ணே' என்று அழைப்பது?

சித்திராங்கி—ஆனால் சித்திராங்கி என்று அழை. அது தான் எனக்குத் தற்காலம் திருப்தியாயிருக்கும்.

சாரங்கதரன்—சரி; அப்படியே.—சித்திராங்கி, நாழிகையாகின்றது. சீக்கிரம் என் புறாவைக் கொடுத்தனுப்பு.

சித்திராங்கி—சாரங்கதரா! ஏனடா, உனக்கு இந்தப் பிடிவாதம்? கேவலம் ஒரு புறாவினிடத்தில் உள்ள அன்பும் என்னிடத்தில் இல்லாமற் போக என்ன காரணமடா? இப்படிப் போகவேண்டும், போகவேண்டும் என்று என் மனம் நோவச் செய்வது உனக்கு நன்றாயிருக்கின்றதா? போகலாம். இப்படி வந்து உட்கார். நான் உனக்குச் செய்யும் சிங்கார சிசுருஷைகளை அங்கீகரித்தால்தான் உன்னுடைய புறாவைக் கொடுப்பேன்.

சாரங்கதரன்—தாயே,—

சித்திராங்கி—மறுபடியும் பார்!

சாரங்கதரன்—இல்லை. சித்திராங்கி, உன்னுடைய உபசாரங்களை அங்கீகரிக்கக்கூடாதென்ற எண்ணமொன்று

யில்லை. மற்றவர்களுடைய பிள்ளையைத் தன்பிள்ளையைப்போற் பாராட்டிச் சீராட்டி மனமகிழ்வோர் அநேகர். அப்படி நீயும் என்னை உன்னுடைய பிள்ளையென்று பாவித்து உபசரிக்கக்கூடும். ஆயினும், எனக்குச் செய்யும் இந்த உபசாரத்தில் என்னுடைய வன்புறவு உணவின்றி உயிரிழக்கப்போகிறதே என்றுதான் கவலைப்படுகின்றேன்.

சித்திராங்கி—அந்தக் கவலை உனக்கு வேண்டாம். அப்படி ஒன்றும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியுமென்று நான்தான் முன்னமே சொன்னேனே. வேண்டியிருந்தால் என்னுடைய சேடியை அனுப்பி அதைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளச் சொல்லுகின்றேன்.— கனகாங்கி, நான் சொன்னால் சாரங்கதரருக்கு நம்பிக்கைப்படவில்லை. நீ போய் அவருடைய வன்புறவுக்கு ஓர் இடையூறும் நேரிடாதபடி பார்த்துக்கொள்.

கனகாங்கி—அப்படியே. [போகின்றாள்.]

சித்திராங்கி—சாரங்கதரா, இனியேனும் கொஞ்ச நாழிகை புறாவின் கவலையற்று இருக்கலாமோ இல்லையோ? இதோ, கந்த களப கஸ்தூரிகள். இவைகளை அணிந்துகொண்டு இந்தத் தட்டில் வைத்திருக்கும் பலகாரங்களை உண்டு என் கோரிக்கையை நிறைவேற்று.

சாரங்கதரன்—சித்திராங்கி, இப்பலகாரங்களை உண்டு உன் மனத்தை மகிழ்விக்கத் தடையில்லை. ஆனால், இந்தக் கந்த களப கஸ்தூரிகளை நான் ஒருநாளும் அணிந்ததில்லை; ஆகையால் அவைகளில் ஒன்றும் எனக்கு வேண்டாம்.

சித்திராங்கி—நன்று யிருக்கின்றது! நல்ல வஸ்துக்களை வழக்கமில்லை யென்று தள்ளிவிடலாமோ? வழக்க மில்லாவிட்டால் நான் உன்னைப் பழக்குகின்றேன். இப் பொழுதே எல்லாம் பழகியிருந்தாலல்லவோ நாளைக்கு உன் மனைவியை நீ மகிழ்விக்கக்கூடும்? நீ சும்மா இரு. இவைகளையெல்லாம் எப்படி உபயோகிக்கவேண்டு மென்று நான் காட்டுகின்றேன்.

(இராகம்: கமாஸ். தாளம்: ரூபகம்.)
['மாதாட பாராதேனோ' என்ற மெட்டு]

பல்லவி

மந்தஹாஸ வதனனே மதனனே வாராய் (மந்)

அநுபல்லவி

சிந்தை மகிழ்ந்து சீராய் வந்தருகில் உட் காராய் (மந்)

சரணம்

1. கந்த மிகு தைலத்தைக் கரிய கூந்தலிற் பூச
அந்தமாய் வாரிவகிர் அன்பின் எடுக்க நேச (மந்)
2. பொன்னுன நின்மேனி பொலிவுற்றிடக் குளிர்
பன்னீரைத்தெளித்துப்பூம் பட்டால் துடைக்க ஒளிர் (மந்)
3. பூசுங் களப நறும் புனுகு ஜவ்வாது மணம்
வீசும் சந்தன மார்பில் மேவுற இக் கணம் (மந்)
4. நெற்றியிலே திலகம் நேயமுடன் தீட்டச்
சிற்றுணை வனைத்தும் நின் செவ்வாயில் நான் ஊட்ட (மந்)
5. வெற்றிலையை மடித்து விதம்வித மா யளிக்க
சிற்றிடையாள் அருஞ் செவ்வி கண்டு களிக்க (மந்)

சாரங்கதரா, நான் இங்கே அலங்காரம் செய்துகொண் டிருக்கும்போது அங்கே என்ன பார்வை?

சாரங்கதரன்—இல்லை; என்னுடைய புறு இங்கே எங்கே னும் இருக்கின்றதோ என்று பார்த்தேன். அதில் என்ன தவறு?

சித்திராங்கி—எப்பொழுது பார்த்தாலும் பாழும் புருவின் சிந்தைதானு? இதோ பார்: நான் செய்த அலங்காரம் எப்படி இருக்கிறதென்று அந்த நிலைக்கண்ணுடியில் பார்.

சாரங்கதரன்—[நிலைக்கண்ணுடியில் பார்த்து] சித்திராங்கி, ஆசையோடு செய்த அலங்காரம் என்றேனும் நன்ருயில்லாதிருக்குமா?

சித்திராங்கி—துரையே, என்னை ஏளனம் செய்கின்ருயா என்ன? என்ன இருந்தாலும் நான் உனக்குச் செய்யும் அலங்காரம் உன்னுடைய தாயார் செய்வதுபோல் இருக்குமா? இருந்தாலும், தூர நின்று பார்த்த அழகை உன்னுடன் சேர நின்று நானும் நிலைக்கண்ணுடியில் பார்க்கின்றேன்; இரு; உன்னைப் பெற்றவள் உன்னை இந்த நிலையில் கண்டால் என்ன செய்வாள் தெரியுமா? அப்படியே உன்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஒரு முத்தம் கொடுப்பாள். [காமபரவசையாய்ச் சாரங்கதரனைக் கட்டியணைத்து முத்தமிடுகின்ருள்.]

சாரங்கதரன்— [கோபம் மூண்டு] சித்திராங்கி, என்ன காரியத்தைச் செய்தாய்? இப்படிப்பட்டவள் ஒருத்தியும் உலகத்தில் இருக்கமாட்டாள் என்று நினைத்து நீ செய்ய விரும்பிய உபசாரங்களை நிஷ்கல்மஷமான புத்திர வாஞ்சையாகக் கருதி நான் இணங்கியதற்குக் கடைசியில் நீ உன் வஞ்சகத்தைக் காட்டினு யல்லவா? எவ்வளவு கபடம்! என்ன காமவிகாரமான முத்தம்!

சித்திராங்கி—திடீரென்று ஏனடா உனக்கு இந்தக் கோபம்? நான் செய்ததில் என்ன தவறடா? நான் என்னவோ கள்ளம் கபடம் இல்லாமல்தான் உன்னைக் கட்டியணைத்து முத்தமிட்டேன்.

சாரங்கதரன்—என்னை எடுத்து வளர்த்த தாதியர் எத்தனையோபேர் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டிருக்கின்றார்கள். ஆனால் இப்படிப்பட்ட உணர்ச்சி எனக்கு இதுவரையில் உண்டானதில்லை.

சித்திராங்கி—உண்மைதான். இப்படிப்பட்ட உணர்ச்சி உனக்கு ஏன் உண்டாயிருக்கும்? இந்த நிலைமையில் உன்னை முத்தமிட்டிருந்தா லல்லவோ தெரியும்? ஸ்ரீ கோபாலகிருஷ்ணனைக் குழந்தைப் பருவத்தில் எடுத்தணைத்துக் கொஞ்சிக் குலாவிய கோபிகளைப்போல் உன்னை முத்தமிட்ட ஒவ்வொருத்தியும் உன்னை ஒருநாளேனும் மருவி அணைக்கவேண்டுமென்று எண்ணித்தான் இருப்பாள். அப்படி நான் உன்னை ஏதேனும் முத்தமிட்டு அகமகிழ்ந்தேனா? போகட்டும்; துரையே,—

சாரங்கதரன்—காதகி! என்னை இனித் துரையே என்று அழையாதே. நான் உன்னுடைய துரையும் அல்ல. உன்னுடைய அக்கிரமமான மோகத்துக்கு இரையும் அல்ல. உன்னுடைய துரை வேட்டைக்குப் போயிருக்கின்றார். அவர் வந்ததும் இந்தச் சாகச வார்த்தைகளைச் சொன்னால் உன்னை மிகவும் கொண்டாடுவார்.

சித்திராங்கி—சாரங்கதரா, என்ன சொன்னாய்? வேட்டைக்குப் போயிருக்கும் கிழமா என்னுடைய துரை? நீ என்னுடைய மனத்தைப் பரீக்ஷிக்கின்றா யென்று எண்ணி நான் அதற்கு ஏற்றவாறு நடந்து உன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக வழிக்குக் கொண்டுவரப் பார்த்தால், அக்கிழவனை என்னுடைய துரையென்று சொல்லி ஏன் என்னை அழவைக்கின்றாய்? வேண்டாம். இது வரையில் நான் பட்ட சங்கடம் போதும். இனி என்

மனம் நோவச் செய்யாதே. நடந்த விஷயங்களைக் கொண்டு நீ என்னை நரேந்திரனுடைய அன்புள்ள மனைவியாக நினைத்து அப்படிச் சொன்னாலும் அதைக் கேட்க என் மனம் ஒப்புமா? உனக்குத் தெரியாதது என்ன இருக்கின்றது?

[விருத்தம்]

கனத்தவெங் காத லர்க்குக் காதல ராலல் லாதவ்
வினத்தவ ரொருவ ராலே இன்பமுண் டாவ துண்டோ
மனத்தையின் புறச்செய் கின்ற மாரனீ யாத லால்நின்
சினத்தைவிட் டென்னோ டின்று திளைத்திட வாராய் மன்னா.

சாரங்கதரன்—சிவ! சிவ! என் புறா போனாலும் போகட்டும். இவள் கண்முன் இனி நிற்பதுந் தவறு. [விரைந்தோடிச் சித்திராங்கியின் சூழ்ச்சியால் கதவுகளெல்லாம் கிடீரென்று மூடிக்கொண்டதைக் கண்டு பிரமித்து நிற்கின்றான்.]

சித்திராங்கி—துரையே, எங்கே, போ பார்ப்போம். உன்னை இங்கு வரவழைக்கமட்டும் வழி தெரியாதே ஒழிய, வந்தவனை அவ்வளவு சுலபமாய் அனுப்பிவிட நான் பைத்தியக்காரி அல்ல.

சாரங்கதரன்—ஐயோ! என்ன அறிவில்லாமல் இங்கு வந்து அகப்பட்டுக்கொண்டேன்! சுமந்திரன் சொன்னது அவ்வளவும் உண்மையென்று இப்பொழுதல்லவோ தெரிகின்றது? காதகி! இதற்குத்தானா நானே நேரில் வந்தாலன்றிப் புறாவைக் கொடுக்க முடியாதென்று சொல்லி அனுப்பினாய்?

சித்திராங்கி—நான் வரச் சொன்னதில் என்ன தவறு? என்னுடைய மனோகரனை வரச் சொன்னேனே தவிர அல்லார் அயலாரை வரச்சொன்னேனா?

சாரங்கதரன்—பாவீ! என்னை வஞ்சகமாய் வரவழைத்து என்மேல் விழுந்து என்னை அணைத்து முத்தமிட்டது மன்றி வரச் சொன்னதில் என்ன தவறு என்று வாய் கூசாமற் கேட்கின்றாயா? காதகி!

[விருத்தம்]

மன்மதன் போலப் பெற்ற மகனிருந் தாலும் அன்னை
தன்மதக் காதல் தீரத் தழுவுதல் நீதி யாமோ
வன்மத மிருகம் போல வரன்முறை மறந்து யர்ந்த
சன்மம தெடுத்த நீயென் சரசமே விரும்ப லாமோ.

பேயானாலும் என்னுடைய தாயாயிற்றே என்று சும்மா இருக்கின்றேன். இல்லாவிட்டால் இப்படித் துராகிருதமாய் என்னைக் கட்டியணைத்த கைகளை வெட்டிவிட்டுத் தான் வேறு காரியம் பார்ப்பேன்.

சித்திராங்கி—உண்மையில் நீ அப்படிப்பட்ட தருமபரிபாலகனா? ஆனால் அக்கிரமம் செய்தவர்களைச் சொல்லுகின்றேன். போய் அவர்களைக் கொன்றுவிட்டு வா.

சாரங்கதரன்—உன்னைத் தவிர வேறொருவரும் அப்படிப் பட்ட அக்கிரமத்தைச் செய்திரார்.

சித்திராங்கி—முதலில், உன்னுடைய தந்தையே அப்படிப் பட்ட அக்கிரமத்தைச் செய்திருக்கின்றார்.

சாரங்கதரன்—உன்னுடைய குற்றத்தை மறைக்க மாசு மறு இல்லாத மதிகுலத்து மன்னன்மேல் ஏன் வீண்பழி சுமத்துகின்றாய்?

சித்திராங்கி—ஆஹா! என்ன மாசு மறு இல்லாத குலம்! உன்னுடைய குலத்தின் பெருமையை நீதான் சொல்லிக் கொள்ளவேண்டும். தானும் தன்னைச் சார்ந்தவரும் செய்த அவமான காரியங்களை மற்றவர்களுடைய வாயி

னின்று கேட்க ஒருவனும் விரும்பமாட்டானென்று சும்மா இருந்தேன். உன்னுடைய தந்தை செய்த அநீதியை நான் எடுத்துச் சொல்வேனாயின் உன்னை நீயே வெறுத்துக்கொள்வாய்.

[விருத்தம்]

உனக்கென்று மணம்பேசி உன்னுருவப்
படங்காட்டி உனது தந்தை
தனக்கென்று சொன்னவொரு சாகசத்தை
யேநினைந்து தவித்து நாளும்
மனக்கவலை மூண்டுன்னை வழிபார்த்து
விழிபூத்து மையலானேன்
சினக்கதிர்வேல் மன்னநின் சிந்தைமகிழ்ந்
தெனக்கருள்நீ செய்குவாயே.

உன்னுடைய தந்தை எழுதி அனுப்பிய உன்னுடைய சித்திரப் படத்தைக் கண்டு மோகங்கொண்டு, அவருடைய மோசம் அறியாமல் கத்திக்கு மாலையிட்டு, என்னுடைய உற்றார் உறவினரை விட்டு, உன்னைக் கண்டு களிக்கவேண்டுமென்று வந்தேன். பிறகு மகாபாவியாகிய உன் தந்தையின் வஞ்சனையால் நொந்தேன். நரேந்திரன் என்னைத் தன் மனைவி யென்று சொன்னதனாலேயே நான் அவன் மனைவியாவேனோ? ஒருவன்மேல் உறுதியான மோகம் கொண்டவளை மற்றொருவன் சாஸ்திர சம்மதமாக மணம்புரிந்தாலும், அவன் அவளுடைய தேகத்திற்கு உரியவன் ஆவானே அன்றி அவளுடைய மோகத்துக்கு உரியவன் ஆவானோ?

சாரங்கதரன்—என்னுடைய பிதா என்னுடைய சித்திரப் படத்தை அனுப்புவதாவது! கத்தியைவைத்துக் கல்யாணம் செய்வதாவது! சித்திராங்கி, உன்னுடைய நடத்தை சரியென்று ரூபிக்க இப்படிப்பட்ட கபடத்தை

என்னுடைய பிதாவின்மீது சுமத்துகின்றாய் போலும்?

சித்திராங்கி—[தன் அருகில் இருந்த படத்தைக் காட்டி] ஆனால் இது உன்னுடைய படமல்லவா?

சாரங்கதரன்—[படத்தை உற்றுப் பார்த்து] என்னுடைய படந்தான். ராஜவம்சத்திற் பிறந்தவர்களுடைய படத்தை ராஜ்யத்தில் அநேகர் வைத்துக்கொண்டிருப்பது ஸஹஜம். அதனால் படத்திலுள்ளவன் அதை வைத்துக்கொண்டிருப்பவர்களுக் கெல்லாம் கணவனாய் விடுவானா?

சித்திராங்கி—துரையே, நாம் இருவரும் தாயும் பிள்ளையுமாயிருந்தால் உன்னை இவ்வளவு தூரம் நான் அக்கிரமமாக வற்புறுத்தமாட்டேன். என் மனமொழி மெய் அறிய அன்றுமுதல் நான் உன்னையே என்னுடைய மனோகரனாக வரித்ததனால்தான் என்னை அங்கீகரிக்கும்படி உன்னை இவ்வளவு கெஞ்சிக் கேட்கின்றேன். ஆகையால்,

(இராகம்: சுரட்டி. தாளம்: ஆதி.)

பல்லவி

சரச மோகன ரூப சாமியே
விரச மொழி வேண்டாம் நான் காமியே (சர)

சாரங்கதரன்—

தாயே இது உனக்குத் தர்மமா
சேயேன் முன் ளிற் செய்த கர்மமா (தா)

சரணம்

சித்திராங்கி—

வரசசி விலாச வதன சிருங் கார
அரசகுமாரி யெனக் கருள்செய் ஒய் யார (சர)

சாரங்கதரன்—

நீயே சொன்னையோ அன்றி நீதியில்லா நின் காமப்
பேயே தூண்ட இவ்விதம் பிதற்றினையோ என் நேமத் (தா)

சித்திராங்கி—

பத்து மாதம் சுமந்து பரிந்து நின்னைப் பெற்ற
ரத்தினங்கியோ அனு ராக மின்றி அ கற்ற (சா)

சாரங்கதரன்—

தன்னைத் தன் தேவியைத் தந்தவர் அண்ணன் குரு
மன்னன்தேவி இவ்வைவர் மண்ணில்தாயாமாலொரு (தா)

சித்திராங்கி—

சுந்தராங் கனே நானுன் சொந்த மனைவி யாக
இந்த வாது செய்வதேன் ஏந்திழை மனம் நோகச் (சா)

சாரங்கதரன்—

இந்த வெங்காமத்தினுல் இந்திராதி தேவர் முன்
நொந்து தவித்திருந்தும் நிந்தை நீ தேடுவ தென் (தா)

சாரங்கதரன்—சித்திராங்கி, உன்னை மணந்த நாதனை விட்டுத் துர்ப்போதனையாக நீ என்னை என்ன வேதனை செய்தாலும் நான் முறைகெட்டு உன் மோகத்துக்கு இணங்கி என் குலத்துக்கு ஒரு நிந்தையைத் தேடிக் கொள்ளமாட்டேன்.

சித்திராங்கி—உன்னுடைய தந்தை என்னை அக்கினி சாக்ஷியாக மணம் புரிந்ததை நீ அருகில் இருந்து பார்த்தாயா? அல்லது உன் உற்றார் உறவினர் யாரேனும் பார்த்தார்களா? ஒருவருக்கும் தெரியாமல் எப்படி ஒரு ராஜவிவாகம் நடத்திருக்குமென்று ஏன் உன் புத்திக்குத் தோற்றவில்லை? நீ ஒருவன்தான் பாவபுண்ணியங்களைக் கண்டாயோ? நான் உன் குலமுறை கெட மோகங் கொண்டதாகவே இருக்கட்டும். இப்படி முறைகெட்டு மோகங்கொண்டவர்களே இல்லையா? சகலஜீவராசி களையும் சிருஷ்டித்து எல்லோரிடத்தும் தந்தைமுறை பாராட்டவேண்டிய பிரமன் தான் சிருஷ்டித்த சரஸ்

வதியை மனைவியாகக் கொள்ளவில்லையா? அவன்தான் ஆதிமுதல் நீதியறியாதவன், அவரவர் யோக்யதைக்குத் தக்க பாக்கியத்தைப் படைக்கத் தெரியாத அந்தகன்; அவனுடைய சமாசாரம் வேண்டாம். உன்னுடைய குலத்தைப்பற்றிப் பேசுவோ மென்றாலோ, உன்னுடைய குலம் ஏதேனும் மாசு மறு இல்லாத குலமாயிருக்கிறதா? உன்னுடைய குலத்துக்கு ஆதிகாரணமாயிருக்கும் சந்திரன் தன் தாய்க்குச் சமானமாகக் கருதவேண்டிய தாரையைக் கூடிச் சுகிக்கவில்லையா? நீ என்னுடைய மோகத்துக்கு இணங்குவதனால் முன்னமே களங்கமுற்ற உன் குலம் புதிதான களங்கமொன்றும் அடையப் போகிறதில்லை.

சாரங்கதரன்—

(இராகம் : செஞ்சுருட்டி. தாளம் : ஏகம்.)

['பூமிமெச்சிடுமண்ணுமலை' என்ற காவடிச்சிந்து மெட்டு.]

பிள்ளைமீது மோகம் கொள்ளுவது லோக ந்யாயமோ குல
ச்ரேயமோ சம்ப்ர தாயமோ புவி
உள்ள அளவும் பழி விள்ள மேவுமிவ் வழி மாயமோ

சித்திராங்கி—

பிள்ளையன்று மனம்கொள்ளைகொள்ளும் கனமாயனே எழில்
நேயனே வெகு தூயனே எனைத்
தள்ள நினைந்தினி எள்ளுவ தென் கனி வாயனே

சாரங்கதரன்—

இந்தவெம்மோகத்தில் வெந்தவர்லோகத்தில் கோடியே என
நாடியே உன்னைக் கூடியே மகிழ்
சிந்தையிலா என்பால் வந்ததென் நீ அன்பால் வாடியே

சித்திராங்கி—

ஈசனிடம் வைக்கும் நேச நிலைமைக்கும் மோகமே திகழ்
யோகமே வழி யாகமே வுற
யோசனை யின்றிப் புவி ஏச மொழிதலவி வேகமே

சாரங்கதரன்—கழுதைக்கு உபதேசம் காதில் உரைத்தாலும் அழுகைக்குரலின்றி அங்கொன்று மிராதென்றபடி ஏன் இப்படி ஒரேபிடிவாதமாய் என்னை நிர்ப்பந்திக்கின்றாய்?

சித்திராங்கி—ஐயோ! கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமென்று சொல்லுவார்களே. உன் மனம் என் அளவில் கல்லினும் கடினமாய் இருக்க என்ன காரணம்? 'பிடாரி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுப்பது கஷ்டம்' என்பதுபோல் கடவுள் எனக்கு உன்னைக் காட்டியும் உன் மனம் கரைவது துர்லபமா யிருக்கின்றதே! நான் உன் தாயென்று யார் சொன்னார்கள்? என்ன ஆதாரங்களைக் கொண்டு நீ இப்படிப் பிடிவாதம் செய்கின்றாய்?

[விருத்தம்]

வடித்தெடுத்த தமிழ்மதுரம் வாயாரப்
புகட்டுகின்ற மன்னா கேள்நீ
பிடித்தவொரு முயல்தனக்கு மூன்றேகால்
என்பதுபோற் பேச லாமோ
மடத்தனமாய்க் கிழவனுக்கு மாலையிட்டேன்
என்றாலும் மனமு வந்து
கொடுத்தறியேன் ஒருசுகமும் கோதிலருள்
கூர்ந்தெனையாட் கொள்ளு வாயே.

சாரங்கதரன்—நீ என் தாயென்று எல்லோரும் சொல்ல நேரிட்டபிறகு அவ்வெல்லாவற்றை விட்டு உன்னை நான் என் மனைவியென்று அங்கீகரிக்க முடியாது. என்னுடைய பிதாவை நீ உன் மனமார மணம் புரியவில்லையென்று பிரத்தியக்ஷமாக ரூபித்தாலும் நான் உன் மோகத்துக்கு இணங்கமாட்டேன்.

சித்திராங்கி—ஏன் இணங்கமாட்டாய்? நான் குரூபியா? அல்லது ஈரதனில்லாமல் வாழ்வதற்கே ஜன்மமெடுத்த பாபியா? அப்படி நான் உன் கண்ணுக்கு அழகில்லாதவளாய்த் தோன்றினால் அதை வாய்விட்டுச் சொல்லிவிடு. பிறகு நான் உன்னை வற்புறுத்தவில்லை.

சாரங்கதரன்—நான் உன்னை அங்கீகரிக்கும் நிலையில் நீ இல்லை என்றுமட்டும் சொல்லக்கூடுமே அன்றி அழகில்லாதவளென்று ஏன் பொய்யுரைக்கச் சொல்லுகின்றாய்?

சித்திராங்கி—நீ ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஏன் இல்லை? நான் உன்னுடைய கத்திக்கு மாலையிட்டு உன்னை மனமார மணம் புரிந்தவ ளல்லவா?

சாரங்கதரன்—எனக்கு அது தெரியாது. நான் உன்னை என் மனமறிய மணம் புரிந்தவனல்லன்.

சித்திராங்கி—உனக்குத் தெரியாமல் நான் உனக்கு மாலையிட்டதனாலேயே நீ என்னை உன் மனைவி யல்லவென்று சொல்லலாமா? உத்தம ஸ்திரீ ஒருபுருஷனை மனமார ஸ்மரிக்கும்போதே அவனுடைய பத்தினி ஆவாள் எனின், என் மன மொழி மெய்கள் அறிய உன்னை மணம் புரிந்த நான் உன்னுடைய மனைவி ஆகாமற் போவேனா? துரையே, நான் சொல்வதைக் கேள்:

(இராகம்: காம்போதி. தாளம்: ஆதி.)

மோகம் பொல்லாது மோகனுங்கா என்றன் (மோ)
மோகம் தினமும் அதி வேகம் ஆதலா லிந்தத்
தெகம் நிலைத்திரா துன் ஸ்நேகம் ஒன்றே விரும்பும் (மோ)

சாரங்கதரன்—

வாது தகாது மாதே உனக் கிந்த (வா)
வாது மிகவும் பொல் லாது விநயம் செல்
லாது கண்முன் நில் லாது போபோ இந்த (வா)

சித்திராங்கி—

மாரவேள் கணையின் கோர மான காமம்
தீர நானும் உன்னைச் சேரக் கொண்ட இந்த (மோ)

சாரங்கதரன்—

ஜார சோர விப சார வார்த்தை க்ரஹ
சாரமோதான் எனைச் சேரச் செய்யும் இந்த (வா)

சித்திராங்கி—என்ன? நான் சொல்வது விபசார வார்த்தை? தாம் அயோக்கியராலுல் லோகத்தில் எல்லோரும் அயோக்கிய ரென்று எண்ணுவதே அற்பர்களின் சுபாவம். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவளை ஐந்துபேராகச் சேர்ந்து மணம் புரிந்த தர்மகுலத்திற் பிறந்த உனக்கு என்னுடைய வார்த்தை விபரீதமாகத் தோன்றாமல் நியாயமாகத் தோன்றுமா?

சாரங்கதரன்—வண்டு மலர்ச்சேக்கை விரும்பும் செழும் பொழிலில் வேம்பன்றோ காக்கை யுகக்கும் கனி? அது போல் நீ அற்ப புத்தியுள்ளவளாய்ப் பெரியோருடைய குணத்தைக் கொள்ளாமல் குற்றத்தைக் கொள்கின்றாய்? தாய்சொல் தவிர்த்தொரு வாசக மில்லை யென்று மாத்ரு வாக்ய பரிபாலனம் செய்த சத்தியசந்தர்களை வீணாக ஏன் பழிக்கின்றாய்?

சித்திராங்கி—ஆனால் அப்படிப்பட்ட தாயுரை தட்டாத தர்மகுலத்தில் வந்த நீ உன்னுடைய தாயாக நினைத்திருக்கும் என்னுடைய சொல்லை ஏன் இப்பொழுது உல்லங்கனம் செய்கின்றாய்?

சாரங்கதரன்—நியாயமான வார்த்தையைச் சொன்னால் தள்ளக்கூடாதுதான்; அக்கிரமமான வழியைச் சொன்னால் எப்படி அங்கீகரிக்கக்கூடும்?

சித்திராங்கி—அடியம்மா! என்ன நியாயம்! 'அசலாத்துப் பிராமணு, பாம்பைப் பிடி; அல்லித்தண்டுபோல் குளிர்ந்திருக்கும்' என்ருளாம்! தனக்கு ஒரு நியாயம், பிறர்க்கு ஒரு நியாயமா?

சாரங்கதரன்—தாயே,

சித்திராங்கி—இதோ பார்: நான் உன்னுடைய தாயல்லவென்று உனக்கு எத்தனைதரம் சொல்லுவது? தாயும் பாட்டியும்! இன்னும் ஒருமுறை என்னைத் தாயென்று சொல்; உன்னைத் தாதா வென்று சொல்லுகிறேன் பார்.

சாரங்கதரன்—நீ என்னைத் தாதா வென்றேனும் சொல்; நாதா வென்றேனும் சொல். நான் உன்னுடைய பிள்ளை யென்பதை ஒருநாளும் மறக்கமாட்டேன்.

சித்திராங்கி—எனக்குப் பிறந்த பிள்ளை என்னைவிடப் பெரியவனு யிருக்கமாட்டானே பின்னே?

[விருத்தம்]

எத்தனை தரந்தான் தாயே என்றழைத் தாலும் உன்னைப்
பத்துமா தஞ்சு மந்து பரிந்துபெற் றவளா வேனே
பித்தமே கொண்ட வன்போற் பேசுவ தேனே மன்னு
சத்திய மாக நானுன் தாரமே ஆவேன் கண்டாய்.

ஏன் உனக்கு இப்படிப்பட்ட ரோஷம் கெட்ட பிடிவாதம்? தனக்கு உரியவளல்லாத ஒருத்தியை மற்றொருவன் சற்று ஏற இறங்கப் பார்த்தாலே பக்கத்திலுள்ளவனுக்குப் பொறுக்காதே. இப்படித் தனக்கு உரியவளை எவனேனும் பிறர்க்கு உரியவளாக்குவானு? உன்னைச் சொல்லிப் பயனில்லை. இருவரும் சதிபதி யென்று எல்லோரும் அறிய ஊர்வலம்வந்து கல்யாணம் பண்ணிக்கொள்ளாதது என்னுடைய தவறு.

சாரங்கதரன்—உண்மையான விஷயம்.

சித்திராங்கி—ஆனால் என்னை விவாகமாகாத பெண் என்று சொல்லவேண்டுமே யன்றி மற்றொருவன் மனைவி என்று எப்படிச் சொல்லக்கூடும்?

சாரங்கதரன்—நீ என்ன சொன்னாலும் நான் உன்னைச் சத்தியமாய் மணம்புரிய—

சித்திராங்கி—துரையே, நீ எனக்கு இணங்காவிட்டாற் போகின்றது. சத்தியமட்டும் செய்யாதே. இந்த ஜன்மத்தில் நீ எனக்குக் கணவனாகாவிட்டாலும் அடுத்த ஜன்மத்திலேனும் ஆகக்கூடும். நீ சத்தியம் பண்ணி விட்டால் அந்தப் பாக்கியமும் எனக்கு இல்லாமற் போய்விடும்.

சாரங்கதரன்—பாபீ! போ, அப்புறம். கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் எவ்வளவு சொல்லியும் கேளாமல் நீ போகிறதே வழியாய் என்னை நிர்ப்பந்திக்கின்றாயா?

சித்திராங்கி—ஏன் இப்படி என்னைப் போபோ என்று பிடித்துத் தள்ளுகிறாய்?

சாரங்கதரன்—கதவைத் திறந்து என்னை அப்புறம் போக விடப்போகிறாயா? இல்லையா?

சித்திராங்கி—என்னை இப்படித் தனியே விட்டுப்போக உனக்கு எப்படி மனம் துணிகிறதோ? பெண்ணொன்றாற் பேயு மிரங்குமென்று சொல்லுவார்களே; உனக்கு மட்டும் ஏன் என்னைக் கண்டாற் கோபம் வருகின்றது? ஏன் இப்படி இங்குமங்கும் பார்த்துக்கொண் டிருக்கின்றாய்? நான் பேயா? அல்லது பூதமா? என்னை ஏறெடுத்துப் பார்த்தால் உன்னை விழுங்கிவிடுவேனா?

சாரங்கதரன்—காதகி! நீ கதவைத் திறக்காவிட்டால் அதை உடைத்துக்கொண்டு அப்புறம் போக எனக்குச் சக்தியில்லை என்று நினைத்தாயா?

சித்திராங்கி—சாரங்கதரா, வேண்டாம்; வலிய வந்தவளை நலிய வெறுக்காதே. ஒருவன் தன்னைக் கைப்பிடித்திழுத்தாலும் அதை ஒருத்தி பொறுத்துக்கொள்வாள். ஆனால், தான் ஒருவனைக் கைப்பிடித்திழுத்தால் அவன் அதற்கு இசையவில்லை யென்றால் அதனிலும் கொடிய பகை வேறு இல்லை. ஆகையால் யாரை எந்த விஷயத்திற் பகைத்துக்கொண்டாலும் பெண்களோட்டும் இவ்விஷயத்திற் பகைத்துக்கொள்ளாதே. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலுக்கும் கர்த்தர்கள் இக்காலத்து ஸ்திரீகளே என்பதை ஞாபகத்தில் வைத்து,

(இராகம்: கானடா. தாளம்: ஆதி.)

ஓடாதே ஓடாதே மதி மன்னா
கூடாமலெனைக் குணசம் பன்னா (ஓ)

சாரங்கதரன்—

தேடாதே தேடாதே பழி பாவி
கூடாத நட்புகொண்டனை மேவித் (தே)

சித்திராங்கி—நான் சொல்லச் சொல்ல எங்கே போகிறாய்? இதோ உன் கச்சையைப் பிடித்துக்கொண்டேன். எப்படிப் போகின்றாயோ, போ; பார்ப்போம்.

சாரங்கதரன்—சீ! விடு, கச்சையை. [கச்சையை அறுத்துக்கொண்டு ஜன்னலை உடைத்து அதன் வழியாக ஏறிக் குதித்து வெளியே போகின்றான்.]

சித்திராங்கி—துரையே, வேண்டாம். இலவுகாத்த கிளியைப்போல் என்னைத் திகைக்கவிட்டுச் செல்லாதே.

[விருத்தம்]

(இராகம் : எதுகுலகாம்போதி. தாளம் : திரிபுட.)

ஐயையோ வாழ்வ னைத்தும் அழியவோ பாவி யேனிவ்
வையமீ திற்பெண் ணாக வந்துதித் தேன்மன் னன்றன்
கையதை யானே பற்றிக் கருணைசெய் தருளக் கேட்டும்
நையவிட் டேகி னால் நானினி யென்செய் வேனே.

பிரவேசம் : கனகாங்கி.

கனகாங்கி—சித்திராங்கி, என்ன சமாசாரம்? சாரங்கதரன் ஜன்னல்வழியாய்க் குதித்தோட என்ன காரணம்?

சித்திராங்கி—கனகாங்கி, நான் என்ன வென்று சொல்லுவேனடி? நான் சாரங்கதரனுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்றே! என் எண்ணமெல்லாம் பாழாயிற்றே! பாவி என்னைத் தாயென்று சொல்லித் தழுவாமல் ஓடிவிட்டானே! இனி எவ்வாறு நான் என் மனோகரனைக் கண்டு அவன் எண்ணத்தை மாற்றுவேன்!

கனகாங்கி—சித்திராங்கி, நான் சொல்வதைக் கேள்: சாரங்கதரனை நீ வலுவிற் பிடித்திழுத்தது நரேந்திரனுக்கு என்றேனும் ஒருநாள் தெரிந்து போகும். ஆகையால் உனக்கு ஒரு பழி வருமுன் நீ அவன் மேல் இல்லாத பழியைச் சொல்லி எப்படியாவது இவ்விஷயம் ராஜசபையில் விசாரணைக்கு வரத்தக்க வழியைத் தேடினால் நரேந்திரனுடைய வஞ்சகத்தை நாலுபேர் அறிய எடுத்துச் சொல்லி அவர்களுடைய சகாயத்தால் சாரங்கதரனைக் கணவனாக அடையக்கூடும். என்ன சொல்லுகிறாய்?

சித்திராங்கி—கனகாங்கி, கொஞ்சம்கூட யோசனை யில்லாமல் என்ன கோரமான பாபத்துக்கு என்னை ஆளாக்கத் துணிந்தாயடி? சூழலில் அகப்பட்ட துரும்பும் அதன் சுழற்சியைக் கொள்வதுபோல் இவ்வஞ்சகருடைய ஸஹவாஸதோஷம் உனக்கு இப்படிப்பட்ட துராலோசனையைக் கற்பித்ததுபோலும்? என்ன இருந்தாலும் சாரங்கதரன் என் மனோகரன் அல்லவா? என்னுடைய அவமானத்தை மறைக்க நான் அவன்மேல் இல்லாத பழியைச் சொன்னால் தெய்வம் பொறுக்குமா?

பிரவேசம் : சேவகன்.

சேவகன்—அம்மணி! நடந்த விஷயங்களைச் சாரங்கதரர் சொன்னார். என்ன செய்வது? விதி யாரை விட்டது?

சித்திராங்கி—சேவகா, நீ உன்னால் இயன்றதைச் செய்தாய். நான் அரும்பாவி யாகையால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போயிற்று. போனால் போகின்றது. நரேந்திரனுடைய வஞ்சக வலையிற் சிக்கிப் பஞ்சமகா பாதகங்களுக்கும் அஞ்சாத அரும்பாவியாய் நான் என் உயிரை விடத் தீர்மானித்துவிட்டேனென்றும், பெற்ற மனம் பித்தாயிருக்கு மாகையால் என் உயிர் நீங்குமுன் இங்கு வந்து போகச்சொன்னேனென்றும் நீ என் தந்தையிடம் போய்ச் சொல்.

சேவகன்—அம்மா, தங்களுடைய வாழ்வின் பெருமையைச் சந்தோஷமாய்ப் போய்ச் சொல்லவேண்டிய நான் தங்களுடைய தாழ்வின் கொடுமையைத்தானோ போய்ச் சொல்லவேண்டும்? மேலும் தங்களை இக்கோலத்தில் விட்டு நான் எவ்வாறு பிரிந்து செல்வேன்?

சித்திராங்கி—என் உயிர்க்குயிராயிருக்கும் உங்களையெல்லாம் பிரிந்து சாகத் துணிந்த இப்பாபியிடம் ஏன் இவ்

வளவு பாசத்தை வைத்துப் பரிதபிக்கின்றீர்கள்? வீணாக என்னை நினைத்து வருந்தாமல் என் தந்தையை இங்கு வரச்சொல். போ.

சேவகன்—அம்மணி! அதுவரையில் இவ்வுடலில் உயிர் இருந்தால் அப்படியே போய்ச் சொல்லுகிறேன். [சித்திராங்கியின் பாதங்களைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, கண்ணீர் வடித்துப், பின்னோக்கிய வண்ணம் போகின்றான்.]

சித்திராங்கி—ஐயோ! கன்றோடு தாய் வாழச் சகியார் போல் நான் என்ன நன்றியில்லாதவளாய் என் உயிர்ச் சேவகனைப் பிரித்தனுப்பிவிட்டேன்! ஹா! தெய்வமே! [படுக்கையின்மேல் விழுந்து தலை யெடுக்காமல் தேம்பித் தேம்பி அழுகின்றாள்.]

பிரவேசம்: நரேந்திரன்.

கனகாங்கி—சித்திராங்கி, அழாதே. என்ன செய்யலாம்? இவ்வளவு துக்கத்துக்கும் காரணமா யிருந்த அச்சண்டாளனைத் தெய்வம் சிக்ஷிக்காமற் போகாது.

நரேந்திரன்—என்ன இது? இருவரும் இப்படி அலங்கோலமாய்க் கதற என்ன காரணம்? கண்ணே! ஏன் இப்படித் தலைவிரிகோலமாய்க் கண்ணீர் சொரிந்து தேம்பித் தேம்பி அழுகின்றாய்? நான் வேட்டையிற் காலம் கழித்து வந்தேன் என்கிற கோபமா? அல்லது வேறு யாராலேனும் விளைந்த மனஸ்தாபமா?

கனகாங்கி—[திடுக்கிட்டெழுந்தவள்போல் நடித்து] யார்? மகாராஜாவா? தாங்கள் வரவில்லையென்றுதான் அழுகிறார்கள். அந்தமட்டும் வந்தீர்களே,—சித்திராங்கி, எழுந்திரு! உன் பிராணநாதர் வந்திருக்கின்றார்.

சித்திராங்கி—ஐயோ! இனி ஏதடி என் பிராண நாதர் வருவது? வீணாக ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்பு

கின்றாய்?—ஹா! பிராணநாதா! ஐயோ! இப்பாபிக்குப் பிராணநாதா என்றழைக்கும் பாக்கியமும் இனி உண்டோ? அட, பாபி!—சாரங்கதரா! உன்னை நீங்கி அந்தரமுற்று மிகவாடி யலைந்து உன்னிடம் மீளாத வன்புறவைப் பெற இங்கு வந்து, தாயே என்று அடிபணிந்த உன்னை நான் அகமகிழ்ந்துதார நிலை கொண்டு உபசரித்து அவ்வன்புறவை அளித்தும் நீ அதை ஏற்றுக்கொள்ளாமல் என்னை எவ்வளவு நிந்தித்து ஏசினாய்! உண்மை தெரியாத மூடர்கள் ஒருவனுக்கு மாலையிட்டு மற்றொருவனைக் கைப் பிடித்தாள் என்று என்னைத் தூற்றுவது ஸஹஜம். உன்னை நேரிற் காணு முன்னரே உன்னையன்பாற் கூடியிருக்க நான் கொண்ட ஒரு மனோதிடத்தையும் என்னுடைய கற்பு நிலையையும் நன்றாக அறிந்த நீ என்னை வேசியென்றும் விபசாரி யென்றும் சொல்ல என்னிடத்தில் என்ன தோஷம் கண்டாயோ? நான் என் மனோகரனைத் தவிர மற்றொருவனை என் மனத்தாலும் தொட்டவளல்ல என்பது உனக்குத் தெரியாதா? தன் கையே தன் கண்ணைக் குத்தினால் என்ன செய்கிறதென்றும், ஏதோ அப்படிச் சொல்லும்படியான ஒரு சுதந்திரம் உனக்கு இருந்ததனால்தானே சொன்னாயென்றும் நினைத்து சும்மா இருக்கலாமென்றால் கடைசியில் நீ வாதாடி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு போனது என் மனத்தைவிட்டு நீங்கவில்லையே. உன்னுடைய வன்புறவை நாடி வந்ததும் வாடா துரையே என்று உன்னை வாயார அழைத்து உபசரித்த கொடுமையா, நீ என்னை இக்கோலம் கண்டது?

நரேந்திரன்—கனகாங்கி, புறு என்ன ? சாரங்கதரன் இங்கு வருகிறதென்ன ? எனக்கொன்றும் விளங்கவில்லையே ?

கனகாங்கி—ஏதோ சாரங்கதரனும் சுமந்திரனும் புறு விட்டு விளையாடினார்களாம். அப்போது சாரங்கதரன் விட்ட புறு இங்கே வந்தது. அதை மீட்டுக்கொண்டு போகச் சாரங்கதரன் இங்கே வந்தான்.

நரேந்திரன்—என்ன ? என்னுடைய ஆணையை மீறிச் சாரங்கதரன் இங்கு வந்தானு ? சரி, என்னுடைய உத்தரவை மீறி அவன் இங்கு வந்ததே அவனைச் சித்ரவதை செய்வதற்குப் போதுமான காரணமாகும். கனகாங்கி, எங்கே அந்தச் சேவகன் ?

கனகாங்கி—அவன் ஏன் இங்கு இருப்பான் ? பாலுக்கும் காவலாய்ப் பூனைக்கும் தோழனுய் நல்ல சேவகனைப் பார்த்து வைத்தீர்கள் !

நரேந்திரன்—ஆனுல், நீயே இந்த உத்தரவை எடுத்துக் கொண்டு போய்ச் சுமந்திரனிடம் கொடு. செல், சீக்கிரம். [உத்தர வெழுதிக்கொடுக்கிறுன். கனகாங்கி அதைக்கொண்டு போகிருள்.] சித்திராங்கி, அழாதே. என் உத்தரவைமீறி இங்குவந்து உன்னை அலங்கோலங் கண்டவனை இப்பொழுதே மாறுகால் மாறுகை வாங்கிக் கொல்லும்படி ஆஞ்ஞாபித்துவிட்டேன்.

சித்திராங்கி—என்ன? கொல்லும்படி ஆஞ்ஞாபித்தீர்களா ? வேண்டாம். ஏன் தங்களுக்கு இப்படிப்பட்ட மதியீனம் ? தண்டனையை மீட்டுக்கொள்ளுங்கள். என் விதியை நான் வெறுத்துக்கொண்டேனே ஒழிய அவன்மீது நான் என்ன குற்றம் சொன்னேன் ? நான் சொன்னது

இப்படி விபரீதமாய் முடியுமென்று தெரிந்திருந்தால் நான் ஒன்றையும் சொல்லியிருக்கமாட்டேனே. என்னுடைய துக்கத்திற் பெரும்பாவியாய்த் தாங்கள் இங்கு வந்ததையும் கவனிக்காமல் உள்ளதைச் சொல்ல, அதற்காகப் பிள்ளையைக் கொன்று என்னைப் பெரும் பழிக்கு ஆளாக்கலாமோ—பாபி? சாரங்கதரா! நீ என் வாழ்வைக் கெடுத்தாலும் நான் உன்னைக் கொல்ல வேண்டுமென்று உன் தந்தையிடம் ஒன்றும் சொல்லவில்லை.

நரேந்திரன்—சித்திராங்கி, நீ சொல்லாவிட்டால் என்ன? ஒருவன் தன்னைக் கைப்பிடித்திழுத்தாலும் அதைப் பிறரிடம் சொல்லாமல் இருப்பதே உத்தமஸ்திரீயின் ஸ்வபாவம். ஆதலால் நீ அதை வெளியிற் சொல்லாமல் மனத்திலேயே எண்ணி மறுகுகின்றாய். அதனால் சாரங்கதரன் நிரபராதி ஆய்விடுவானா? நீ என்ன சொன்னாலும் நான் தண்டனையை மீட்டுக்கொள்ளமாட்டேன். நான் உன்னைப் பிறகு வந்து காண்கின்றேன்.

[போகின்றான்.]

சித்திராங்கி—ஹா! தெய்வமே! வந்த பழியெல்லாம் போதாதென்று சாரங்கதரனைக் கொன்ற பழியும் என் தலையில் வந்து இழியும்படி நான் உனக்கு என்ன அபராதத்தைச் செய்தேன்! ஹா! சாரங்கதரா! உன்னை நான் எவ்வாறு காப்பாற்றுவேன்?

[மூர்ச்சிக்கின்றாள்.]

அங்கம் 2.

களம் 3.

இடம் : ரத்ஞங்கியின் அந்தப்புரம்.
பிரவேசம் : சாரங்கதரனும் ரத்ஞங்கியும்.
சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள்.

ரத்ஞங்கி—சாரங்கதரா, நான்தான் ஏதோ கவலையால் அப்படி ஆடினேன் என்றால் நீ கூட என்ன அப்படி ஆடுகின்றாயே ? மந்திரியைப் பிரிந்து அரசன் அவ்விடம் சென்றால் மிகவும் அற்பமான ஒரு பேதையாற் கட்டுண்டு கஷ்டப்படுவானல்லவா ? அரசர்களுக்குப் பலம் மந்திரி என்பது இவ்வாட்டத்துக்கும் பொருந்துமல்லவா ?

சாரங்கதரன்—உண்மைதான். இந்த ஆட்டத்துக்குப் பொருந்தியதாக எண்ணுவதோடு என்னுடைய மனவாட்டத்துக்கும் பொருந்தியதாகவே கொள்ளவேண்டும். அவ்விதம் எண்ணாமல் மந்திரியை மீறி நேற்று நான் ஓர் இடத்திற்குச் சென்று பட்ட கஷ்டம் எழுபிறப்புக்கும் என்னுடைய மனத்தைவிட்டு நீங்காததாயிருந்தும் அதை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து இவ்வாறு ஆடியது தவறுதான்.

பிரவேசம் : சுமந்திரன்.

சுமந்திரா ! என்ன விசேஷம் ?

சுமந்திரன்—ஒன்றுமில்லை. நேற்று நீ என் சொல்லை மீறிச் சென்றாயே ; க்ஷேமமாய் வந்து சேர்ந்தாயா இல்லையா என்று பார்க்க வந்தேன்.

சாரங்கதரன்—சுமந்திரா, நீ கூறியது மிகவும் உண்மை.

சுமந்திரன்—என்ன? நான் கூறியது உண்மையா? ஐயோ, என் வார்த்தை பொய்யா யிருக்கக்கூடாதா?

ரத்னாங்கி—சாரங்கதரா, மந்திரி சொல்லை மீறி நீ செல்கிற தென்ன? நீ க்ஷேமமாய் வந்தாயா என்று அவன் வந்து பார்க்கிறதென்ன? எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே.

சாரங்கதரன்—அம்மா, தாய் அறியாத சூலும் காய் அறி யாத பூவும் லோகத்தில் உண்டோ? ஆயினும் ஓர் அவமானமான சமாசாரத்தைத் தங்களுடைய பரிசுத்த மான காதிற் போடுவானேன் என்றுதான் யோசிக் கின்றேன்.

ரத்னாங்கி—ஆனால் அது நான் கேட்கக்கூடாத அவ மானமா? உன்னால் நேர்ந்ததா?

சாரங்கதரன்—அம்மா, தாங்களா அவ்வாறு நினைக்கிறீர் கள்? மகா உத்தம குணங்களிற் சிறந்த ரத்னாங்கிதேவி யின் வயிற்றிற் பிறந்த நான் அப்படிப்பட்ட அவ மானத்தைத் தேடுவேனா? ஆயினும் நடந்த விஷயங் களைச் சொல்லுமுன் இரண்டொரு சந்தேகங்களைத் தீர்க்கவேண்டும்.

ரத்னாங்கி—என்ன அது?

சாரங்கதரன்—பாண்டியநாட்டுப் பெண் ஒருத்தி வந்தி ருப்பதாயும், அவளை என் தந்தை மணம்புரிந்ததாயும் தாங்கள் இரண்டொரு நாளுக்குமுன் என்னிடம் சொன்னீர்க ளல்லவா?

ரத்னாங்கி—ஏதோ கேள்விப்பட்டதைச் சொல்லியிருக்க லாம். அதற்கென்ன?

சாரங்கதரன்—என் தந்தைக்கு வாழ்க்கைப்பட்டவள் எனக்குத் தாய் அல்லவா?

ரத்னாங்கி—சாஸ்திர சம்மதமாக மணம் புரிந்திருந்தால் உனக்குத் தாய்தான்.

சாரங்கதரன்—[தனக்குள்] என்ன? சாஸ்திர சம்மதமாக மணம்புரிந்திருந்தாலா?—ஆனால் அவள் என் தந்தையைச் சாஸ்திர சம்மதமாக மணம்புரியவில்லையா?

ரத்னாங்கி—சாரங்கதரா, இந்தக் கேள்விகளெல்லாம் இப்பொழுது எதற்கு?

பிரவேசம்: கனகாங்கி.

கனகாங்கி—அம்மா! மகாராஜா இந்தக் கடிதத்தைச் சுமந்திரரிடம் கொடுக்கச் சொன்னார். [கடிதத்தைச் சுமந்திரனிடம் கொடுத்துவிட்டுப் போகின்றாள்.]

சாரங்கதரன்—சுமந்திரா, என்ன எழுதியிருக்கின்றது?

சுமந்திரன்—[கடிதத்தைப் பார்த்து] ஹா! சாரங்கதரா! [மூர்ச்சிக்கின்றான்.]

சாரங்கதரன்—[ஆச்சரியத்துடன் கடிதத்தை எடுத்துப் படித்து] ஈசா! இதுவோ நின் திருவருள்? அம்மா, நம்முடைய பாந்தவ்யம் இன்றோடு முடிந்தது. சாயங்காலத்துக்குள் என்னுடைய மாறுகால் மாறுகை வாங்கவேண்டும் என்று நரேந்திர மகாராஜா ஆஞ்ஞாபித்திருக்கின்றார்.

ரத்னாங்கி—[மூர்ச்சித்தெழுந்து] ஐயோ! இப்படி மின்னாமல் இடிவந்து விழவேண்டுமென்று யார் இட்ட சாபமோ? எப்பிறப்பிற் செய்த பாபமோ? திடீரென்று தந்தையின் கோபத்துக் காளாக நீ என்ன செய்தாய்? நான் முதலில் சந்தேகித்ததையும், இப்படிப்பட்ட கொடிய ஆஞ்ஞை வந்திருப்பதையும் நினைத்தால் என் மனம் அனலிற் பட்ட புழுப்போல் துடிக்கின்றதே. நடந்த

விஷயம் இன்னதென்று இப்பொழுதேனும் சொல்ல மாட்டாயா?

சாரங்கதரன்—அம்மா, இப்படிப்பட்ட அபராதத்துக்கு ஆளாகிச் சாகுமுன்னேனும் உண்மையைத் தங்களிடம் சொல்லாமற்போனால் பிறகு என்னை நிரபராதி என்று நினைப்பவர்கள்தாம் யார்? என்னுடைய கதையை ஆதியோடந்தமாய்ச் சொல்லுகின்றேன்; கேளுங்கள் :

[அகவல்]

ஸ்ரீதே வியும்பூ மாதே வியுமகிழ்ந்
திருபுறத் தினிலும் மருவியே வாழ
விந்தையே புரியும் சிந்தைவெந் நாகம்
ஒடுங்கா நின்ற கொடுங்காற் கருடன்
மீதினி திருந்து மேதினித் துயரெலாம்
நீக்குவா னுவந்த நோக்கினன் மற்றெனக்
காதர வாகிய ஸ்ரீதர னருளால்
என்னையீன் றெடுத்த அன்னையே கேளாய்
ஐந்தாறு நாளாய்ச் சிந்தா குலத்தினால்
வாடிக் கலங்கினேன் வருத்த மொழிந்திட
வேடிக்கை யாகவென் மித்திர னோடு
சேவகன் கொண்டுவந் தாவலாய்க் கொடுத்த
இருபுறு வினையுயர் தருவிசும் பில்விட
நெடும்பொழு தென்புறு கடுவிசை யாகப்
பறந்துசா கசத்திற் சிறந்தசித் திராங்கியின்
மாடியிற் சென்று மறைந்தது நானதை
நாடியென் னிடத்து நல்கெனச் சேவகன்
போயதைக் கேட்டனன் மாயமா யவளும்
உரியவன் வந்து பிரியமாய்க் கேட்டால்
தருவே னலால்மற் றொருவர்கை யினிலும்
கொடுக்கமு டியாதெனத் துடுக்கா யுரைத்தனள்
நேரினிற் சென்று நேயமாய்க் கேட்கக்
கோரினேன் சுமந்திரன் கொடும்பழி வருமெனத்

தடுத்தனன் நான்செவி கொடுத்துக் கேளா
தன்னைபாற் சென்றவ ளடிபணிந் தென்புரு
தன்னையே வேண்டினேன் சாகச மாயவள்
மகனே வாவென் றகமகிழ்ந் தென்னை
மணியா சனத்தில் அணியுற இருத்தியென்
நலங்கா முற்று நானறி யாப்பல
அலங்கா ரங்கள் அழகுறச் செய்து
நிலைக்கண் ணாடியில் நின்றுநோக் கிடுகென்
றுலைக்களத் திருந்த உடலின் வெதும்பி
உற்றவந் நிலையிற் பெற்றவள் செய்யும்
தொழிலென்று காம விகாரம் தோன்றப்
பழிகாரி யென்னைப் பலவந்த மாக
முத்தமிட் டணைத்து மோகம் தீரெனப்
புத்திர னைத்தாய் புல்லுதல் கொடிய
பாபமென் றேன்பரி தாபமென் சொல்வேன்
பிள்ளையன் றுள்ளம் கொள்ளைகொள் ளவந்த
மாயனே என்றும் நேயனே என்றும்
என்னுரு வப்படம் காட்டியென் தந்தை
தன்னுரு வத்தைத் தான்கொள நினைத்த
கபடறி யாமலென் கத்திக்கு மாலை
சுபமுறத் தானும் சூட்டிய தாகவும்
கதைபல கூறியென் கலவியை வேண்டினள்
பதைபதைத் தோடிநான் பலகணிக் கதவுடைத்
தப்புறப் பட்டேன் குப்புற வீழ்ந்தனள்
மன்னவன் வந்ததும் என்னசொல் வினளோ
கூறுதற் கிசைந்த கொடும்பழி யாலென்
மாறுகால் மாறுகை வாங்கிட இன்று
நேர்ந்தது போலும் நீயதற் கன்னாய்
சோர்ந்ததாற் பயனென் சூழ்புவி யதனிற்
சுகமும் துக்கமும் சகடக் கால்போல்
வருமா தலினால் ஒருநிலை யான
திருமால் திருவடி சேரத்
தடைபுரி யாமல் விடையருள் வாயே.

பிரவேசம் : கொலையாளிகள்.

ரத்னாங்கி—ஹா! சாரங்கதரா! எப்படி உன்னைப் பிரிந்து உயிர் தரிப்பேன்! ஐயோ, கொலைஞரும் வந்துவிட்டனரே! இந்த அநியாயக் கொள்ளைக்குத்தானா உன்னை அருந்தவம் செய்து பெற்றேன்! புருஷன் என்னைப் புறக்கணித்தாலும் உன்னால் உயர்ந்த குடி ஆவேனென்று எண்ணியிருந்தேனே! நீ அரசாளும் பாக்கியத்தைக் கண்டு களிக்க நினைத்த இப் பாவி உன்னைக் கொலைஞர் கட்டிக்கொண்டுபோகும் கோலத்தைத்தானோ பார்க்க வேண்டும்! பெண்ணொன்று வந்த ஒரு மாயப் பிசாசத்தின் வார்த்தையைக் கேட்டு நிரபராதியான உன்னை இப்படிப்பட்ட கொடிய தண்டனைக்கு உட்படுத்த உன் தந்தை எப்படித்தான் துணிந்தாரோ? அரசர் வந்ததும் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி எப்படியாவது இத்தண்டனையை மீட்டுக்கொள்ளும்படி செய்கின்றேன். அதுவரையில் போகாதே; போய் அநியாயமாய்ச் சாகாதே.

[சுமந்திரன் மூர்ச்சை தெளிந் தெழுந்திருக்கிறான்,]

சாரங்கதரன்—அம்மா, இளையாள் மோகத்தால் அறிவிழந்த அரசர் மனத்தை என்ன ஆதாரங்களைக் கொண்டு திருப்புவது? நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான் என்று தேறுதல் பண்ணிக்கொள். வீணில் ஆகாததை நினைந்து அழுது என்னபயன்? நீ அரசனைக் கண்டு இத்தண்டனையை மாற்றி எனக்கு என்னுயிரை வாங்கிக் கொடுத்தாலும் அது இவ்வுடலில் என்றும் நிலையாய் இருக்கப்போகின்றதா? ஆறிலோ அல்லது நூறிலோ என்றேனும் ஒருநாள் இறக்கவேண்டியதுதானே?

[விருத்தம்]

மின்னேயே போலத் தோன்றி விரைவினில் மறையும் வாழ்வு
தன்னேயே நிலேயென் றெண்ணித் தளர்வதே னெவர்க ளேனும்
முன்னேயே யிருநி லத்தின் முடிவுறு திருந்தா ராயின்
என்னேயே குறித்து நீயும் இப்படிப் புலம்ப லாகும்.

நாம் எதனிடத்தில் அதிக ஆசை வைக்கின்றேமோ அதை ஈச்வரன் நம் கண்ணினின்றும் பிரித்து நம்மைப் பரிசோதிக்கின்றுன் என்ப தறியாமல் நீ என்னிடத்தில் இவ்வளவு பாசத்தை வைத்ததே பெருந் தவறு. ஆராய்ந்து பார்த்தால், நீ யார்? நான் யார்? இப்பிறப்பில் தாயும் பிள்ளேயும் என்று சொல்லத்தக்க இத் தேக பாந்தவ்யத்தைத் தவிர முற்பிறப்பில் நாம் அடைந்திருந்த ஆத்மபாந்தவ்யம் ஏதேனும் அறிவோமோ? அப்படிப்பட்ட ஆத்மஞானத்தை அடையும் வரையில் இத்தகைய துன்பங்கள் இத் தேகத்துக்கு இயற்கையே அல்லவா? ஈச்வரனுடைய பாதாரவிந்தத்தில் வைக்கும் ஆசைதான் என்றும் அழியாதது என்றறிந்து ஜன்மம் எடுத்தவர்க ளெல்லாம் கன்மவினேயிற் சிக்கி உழலாமல் தன்னே வந்து அடையவேண்டு மென்று எண்ணியே 'யானே வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதுபோல் ஈச்வரன் நமக்குப் பலவிதமான கஷ்டங்களேக் காட்டிப் பரிசோதிக்கின்றுன். அப்பொழுதும் நமது புத்தியைக் கர்மாநுசாரிணியாய்ப் போக விடுவோமாயின் நாம் என்றுதான் ஆத்ம விமோசனம் அடைவது? நான் இப்படிப்பட்ட தண்டனேயை அடைய வேண்டு மென்பது ஈச்வரன் திருவுள்ளமானுல் நீ ஏன் அதற்கு வீணுக வருந்தவேண்டும்?

சுமந்திரன்—சாரங்கதரா! எல்லாம் ஈச்வர சங்கற்பம், என்பதை நான் மறுக்கவில்லை. நம்முடைய கடமையை நாம் செய்யவேண்டியதும் ஈச்வர சங்கற்பமே. ஆதலால் உன்னுடைய அன்னை சொல்வதுபோல் உன்னுடைய தந்தையைக் கண்டு நடந்த சமாசாரத்தைச் சொல்லு வோம். சித்திராங்கி உனக்கு இருபொருள்பட எழுதி யுள்ள கடிதத்தைக் கண்டபிறகேனும் உன்னை வலுவிற் பிடித்திழுத்தது சித்திராங்கிதான் என்று தீர்மானித்து உன்னுடைய தந்தை உனக்கு இட்ட தண்டனையை மீட்டுக்கொள்ளாவிட்டால் தெய்வம் விட்ட வழியா கின்றது.

சாரங்கதரன்—நீங்கள் என்ன சொன்னாலும் எனக்குத் தந்தையென்று வந்த அந்த நிந்தையாளன் முகத்தில் நான் விழிக்கமாட்டேன்.—சுமந்திரா, நீ என்னுடைய ஸ்தானத்தில் இருந்து என் தாயைப் பாதுகாத்துக் கொண்டிரு.— அம்மா! இனிமேல் சுமந்திரன்தான் உன் மைந்தன். நான் உன்னை விடை கேட்பதற்கும் நீ தடை புரியாமல் இருப்பதற்கும் இது தருணமன்று. ஆகையால் உன்னுடைய உத்தரவின்றியே செல்லுகின் றேன்.—கொலையாளிகளே, உங்களை இவ்வளவு நாழிகை இங்கே காக்கவைத்ததற்காக என்னை மன்னிக்க வேண் டும். அதற்காக இந்நிலையில் என்னை அழைக்கும் கஷ்ட மும் உங்களுக்கின்றி நான் உங்களோடு வருவதைத் தவிர வேறு கைம்மாறு அறியேன்.

முதல் கொலையாளி—மகாராஜா, தாங்களா எங்கள் மன் னிப்பைக் கேட்பது? நாங்களல்லவோ தங்கள் மன் னிப்பைக் கேட்கவேண்டும்!

இரண்டாவது கொலையாளி—ஐயோ! ஈசன் அருள் இப்படியும் இருக்குமோ!

முதல் கொலையாளி—அரசே, இந்த அநியாயக் கொடுமையினின்றும் தப்பிப் பிழைக்க வழி ஏதேனும் இருந்தால் சொல்லுங்கள். தங்கள் உத்தரவின்படி நடக்கக் காத்திருக்கிறோம்.

சாரங்கதரன்—வேண்டாம். உலகத்தில் ஒவ்வொருவனும் தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும் என்பதே என்னுடைய கொள்கை. ஆதலால், புறப்படுங்கள் போவோம்.

[சாரங்கதரனும் கொலையாளிகளும் போகின்றார்கள்.]

ரத்னாங்கி—சாரங்கதரா! வேண்டாம்; போகாதே. நான் சொல்வதைக் கேள்.—ஹா! என்னருமை மைந்தன் போய்விட்டனனே! இனி எனக்கு என்ன கதி?

சுமந்திரன்—அம்மா, வீணாய் அழுது என்ன பயன்? எதற்கும் தாங்கள் சித்திராங்கியிடம் சென்று இத்தண்டனையை மீட்டுக்கொள்ளும்படிக் கேட்டுப் பாருங்கள். நான் மகாராஜாவைக் கண்டு கேட்கின்றேன்.

[ரத்னாங்கியும் சுமந்திரனும் போகின்றார்கள்.]

அங்கம் 3.

களம் 1.

இடம் : சித்திராங்கியின் அந்தப்புரம்.

பிரவேசம் : சித்திராங்கி.

சித்திராங்கி—ஐயோ! நான் பிறந்த பிறப்பென்ன? இருந்த இருப்பென்ன? இப்பொழுது அடைந்த கதியென்ன? லோகத்தாரெல்லாம், 'அப்பா! சித்திராங்கியா!' என்று சாகசத்துக்கு என்னை உதாரணமாக்கி நிஷ்காரணமாய் நிந்திக்கத்தானோ நான் ஜன்மமெடுத்தேன்? தொன்றுதொட்டு வந்த மதசம்பிரதாயத்தை விட்டு என் இஷ்டம்போல் ஒருவனை மணம்புரிய எண்ணியதனால் அல்லவோ இக் கதியடைந்தேன். மற்றப் பெண்களைப் போல் மாதா பிதாக்கள் தேடி எடுத்தவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் இல்லாமற் போயிருக்குமல்லவா? ஐயோ! இளையவர் மோகம் விளைவது விழியில் என்பதற் கேற்ப நான்தான் கண்ணைக்கொண்டு வரித்தாலும் என் தந்தையேனும் யுக்தா யுக்தங்களை யோசித்து எனக்கு விவாகம் செய்து வைத்திருக்கக்கூடாதா? நான் கெட்டால் கெடுகின்றேன். நான் அடைந்த கதியை எண்ணியேனும் மக்களைப் பெற்றவர்கள் ஆய்ந்தோய்ந்து பாராத விவாகங்களை இனிச்செய்யமாட்டார்களல்லவா? என்னாலேனும் இத் தேசம் சீர்திருத்தம் அடையட்டும். பொது நன்மைக்காக உழைப்பவர்கள் மான பிராணதனங்களை இழக்கத் துணிந்தாலன்றி அநுபவத்தில் வந்த தேச குல தூர

சாரங்கள் சீர்திருத்த மடையார். ஆகையால் நான் என் உயிரை விடுவதற்குச் சிந்திக்கவில்லை. நரேந்திரன் செய்ததெல்லாம் அக்கிரம மென்றும் நடந்த விவாகத்தின்படி நானும் சாரங்கதரனுமே சதிபதி யென்றும் நடுக்கண்ட நியாயம் சொல்லுகிறவர்களே இல்லாமற் போனார்களே என்றுதான் சிந்திக்கின்றேன். — ஹா்ம்! செங்கோலுக்கு முன் சங்கீதமா என்று அதிகார பலத்துக்கு அஞ்சிக் கிடைத்தமட்டில் திருப்தியடைந்து செய்தொழில் மறந்து இச்சைக்கு ஹிதம் பேசித் திரிபவரே நிறைந்த இத்தேசத்தில் நான்மட்டும் நியாயத்துக்குப் பாடுபட்டு என்ன பலன்? பலன் பெறுவதுண்டானால் இப்படி நானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்திருக்குமா?

பிரவேசம் : கனகாங்கி.

கனகாங்கி—சித்திராங்கி, ரத்னாங்கிதேவி உன்னைக் காண வந்திருக்கிறார்கள்.

சித்திராங்கி—இன்னும் இந்தப் பாபியை ஏறெடுத்துப் பார்க்க விரும்புகிறவர்களும் இருக்கின்றார்களா?—சரி; வரச்சொல்.

[கனகாங்கி ரத்னாங்கியை அழைத்துக்கொண்டு வருகிறாள்.]

ரத்னாங்கி—ஹா! சித்திராங்கி! பெற்ற பிள்ளையை நான் பறிகொடுத்துத் துடிக்கும்படி என்ன அநியாயப் பழியை அவன்மேற் சுமத்தினாய்?

சித்திராங்கி—அம்மா! சத்தியமாய்ச் சொல்லுகின்றேன்: என் மனமறியச் சாரங்கதரன்மீது நான் ஒரு குற்றமும் சொல்லவில்லை.

ரத்னாங்கி—ஆனால் திடீரென்று மகாராஜா அவனுக்கு

இப்படிப்பட்ட மரண தண்டனை விதிக்க வேறு என்ன காரணம்? தயை செய்து உண்மையைச் சொல்ல மாட்டாயா?

சித்திராங்கி—உண்மைக்கு மதிப்பில்லாதபோது உண்மையைச் சொல்லி என்ன பயன்?

ரத்னாங்கி—உண்மைக்கு ஒருநாளும் பழுதில்லை. அநியாயமாய் உயிரை விடும் ஒரு ஜீவனைக் காப்பாற்றினால் உனக்கு எவ்வளவோ புண்ணியமடி.

சித்திராங்கி—புண்ணியம்! சாகத் துணிந்தவளுக்குப் புண்ணியம் வேறு வேண்டாமோ? பாப புண்ணிய விசாரமுள்ளவர்களானால் என்னை இப்படிப்பட்ட கதிக்குக் கொண்டுவந்து விட்டிருப்பீர்களா? நீங்கள் எல்லாம் வேண்டாத புண்ணியம் எனக்குமட்டும் என்னத்திற்கு? இல்லை; அப்படிப்பட்ட புண்ணியத்தைத் தான் தேடிக்கொண்டேன்; என் வாழ்வு ஏதேனும் பெருமை அடையப்போகின்றதோ?

ரத்னாங்கி—அப்படி நான் உன் அளவில் என்ன பாபியாயிருந்தேனடி?

சித்திராங்கி—என்னை மணம்புரிந்தது யார் என்று தங்களுக்கேனும் தெரியுமா?

ரத்னாங்கி—நான் என்னத்தைக் கண்டேன்? நடந்த விஷயங்களைக் கொண்டு சொல்லுகிறதானால் நீ மணந்தது சாரங்கதரனையே அன்றி நரேந்திரரை அல்லவென்று தான் சொல்லவேண்டும். ஆனால் நீ மணம்புரிந்தது தம்மைத்தான் என்று அரசர் சொல்லும்போது நான் அதை எப்படி மறுத்துச் சொல்லக்கூடும்?

சித்திராங்கி—மறுத்துச் சொல்லாவிட்டாற் போகின்றது.

உள்ளக் கருத்தை ஒளியாமற் சொன்னதே போதும். நானும் நடந்த விஷயத்தை ஒளியாமற் சொல்லுகிறேன்: நரேந்திரன் நயவஞ்சகமாய் என்னைத் தன் மனைவி என்று சொல்லி என் கற்பைக் கெடுக்க எவ்வளவோ முயன்றும் நான் அதற்கு இசையாமல் சாரங்கதரனை வலுவில் வரவழைத்து நடந்த சங்கதிகளைச் சொல்லி என்னைத் தன் மனைவியாக அங்கீகரிக்கும்படி வேண்டினேன். அவன் என் வேண்டுகோளுக்கு இசையாமல் என்னைத் தூண்டிலில் அகப்பட்ட மீன்போல் துடிக்க விட்டுச் சென்றான்.

ரத்னாங்கி—ஐயோ! முன்னமே எனக்குச் சொல்லியிருந்தால் நீயும் என் மகனும் சதிபதிகளாய் வாழத்தக்க வழியை நான் தேடியிருக்க மாட்டேனா? மகாராஜாவின் சொல்லைக் கேட்டு, நீ மனமார மணம்புரிந்தது அவரையே என்றல்லவோ நான் சும்மா இருந்தேன். இத்தனை நாழிகை என் மகன் என்ன கதி யடைந்தானோ! கைகால் இழந்து உயிரை விட்டானோ! உயிரை விடும்போது என்ன பாடு பட்டானோ! சித்திராங்கி, சாரங்கதரன் கால்நடையாகச் சென்றதனால் மலைச்சாரலுக்கு இன்னும் போய்ச் சேராமல் இருந்தாலும் இருக்கக்கூடும். ஆகையால் நான் போய் மகாராஜாவை இங்கே அனுப்புகின்றேன். நீ அவரிடம் உண்மையைச் சொல்லி எப்படியாவது இந்த உத்தரவை மீட்டுக்கொள். பிறகு சாரங்கதரன் உன்னைத் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளும் வழியை நான் தேடுகின்றேன்.

சித்திராங்கி—உண்மையாகவா?

ரத்னங்கி—சத்தியமாய்ச் சொல்லுகின்றேன்.

சித்திராங்கி—ஆனால் உடனே மகாராஜாவை இங்கே அனுப்புங்கள்.

ரத்னங்கி—ஹே! க்ருபாநிதே! நான் மகாராஜாவைக் கண்டு இட்ட கட்டளையை மீட்டுக்கொள்ளும்படி செய்யும் வரையில் என் மகனுக்கு ஒரு தீங்கும் நேரி டாதபடி நீதான் பார்த்துக்கொள்ளவேண்டும்.

[போகின்றாள்.]

சித்திராங்கி—கனகாங்கி, ரத்னங்கிதேவி தானாக எனக்கு இவ்வுபகாரத்தைச் செய்வதாக வாக்களித்ததும் என் னுடைய பாக்கியந்தான்.

கனகாங்கி—சித்திராங்கி, உனக்கு என்ன பைத்தியமா? சாரங்கதரனாவது அதுவரையில் உயிருடன் இருப்ப தாவது? கொலையாளிகள் போய் நாலைந்து ஜாம காலமாகிறது. இன்னுமா மலைச்சாரலுக்குப் போய்ச் சேராம லிருப்பார்கள்? சாரங்கதரனைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருந்தால் உடனே புறப்பட்டுப் போய் அரசனுடைய ஆஞ்ஞை நிறை வேறாதபடி பார்த்துக்கொள்.

சித்திராங்கி—ஆனால் என் குதிரையை விரைவிற் கொண்டு வா. நான் ஒருநிமிஷத்திற் போய் வருகிறேன்.

[இருவரும் போகின்றார்கள்.]

அங்கம் 3.

களம் 2.

இடம்: நரேந்திரனுடைய அரண்மனை.

பிரவேசம்: நரேந்திரன்.

நரேந்திரன்—ஆஹா! சுமந்திரனுடைய சாகசமே சாகசம்! தன்னுடைய மித்திரன் சாரங்கதரன் நிரபராதியென்று ரூபிக்கச் சித்திராங்கியின்மீது என்ன கோரமான பழியைக் கூறத் துணிந்தான்! ஆயினும் இக்கடிதத்தைக் கண்டதுமுதல் என் மனம் ஏன் இப்படி இருபாற் கவர்வுற்று இடையூசலாடி ஏங்கித் தவிக்கின்றது! ஒருவேளை சித்திராங்கி சாரங்கதரனுக்கு இக்கடிதத்தை உண்மையில் எழுதியிருக்கக் கூடுமா? சீ! தம் நலம் கருதித் தாறுமாறாகப் பிறர்மீது குற்றம் கூறுகிறவர் வார்த்தையைக் கேட்டு மானுஷ ஸ்வபாவம் எவ்வளவு சீக்கிரத்தில் தன் உயிர்த் துணையாயுள்ளவரையும் வெறுக்கும்படித் தூண்டுகின்றது! நான் வேட்டைக்குச் செல்ல நேரிட்டதைக் கேட்டு இமைப்பொழுதும் என்னைப் பிரிந்திருக்கச் சகியாத சித்திராங்கியோ இப்படிப்பட்ட கடிதத்தை எழுதியிருப்பாள்? எழுதியிருந்தால் என்னுடைய கதி என்ன?—சீ! மறுபடியும் நான் புத்தியில்லாமல் என்ன சித்தப்பிரமைக்கு இடங்கொடுக்கின்றேன்!

ரத்னாங்கி—[உள்ளே இருந்து] நாதா! நாதா! [கதவைத் தட்டுகின்றாள்.]

நரேந்திரன்—அதோ! என் ஆருயிர்க் காதலி சித்திராங்கி

என்னை அழைக்கின்றனள் !—சித்திராங்கி ! இதோ வந்தேன். [கதவைத்திறந்து, ரத்னாங்கி பிரவேசிப்பதைக் கண்டு பிரமிக்கின்றான்,]

பிரவேசம் : ரத்னாங்கி.

ரத்னாங்கி—நாதா ! நான் சித்திராங்கி யல்ல. ஆயினும் சித்திராங்கியைப்போல் நானும் தங்களுடைய இதய கமலத்திற் சிலநாள் இருந்தவளே. ஆகையால் என்னுடைய சொல்லையும் அவளுடைய சொல்லாகப் பாவித்துத் தங்களுடைய புத்திரன் சாரங்கதரனுக்கு ஜீவதானம் செய்யவேண்டும்.

நரேந்திரன்—யாருக்கு ஜீவதானம் செய்யவேண்டும் ? என்னுடைய புத்திரனுக்கா ? என்னுடைய புத்திரனால் அவன் அப்படிப்பட்ட அவமானத்தைச் செய்திருப்பானா ? எனக்குத் தாரமும் தனக்குத் தாயும் ஆகிய என் ஆருயிர்ச் சித்திராங்கியைப் பெண்டாள நினைத்த அச் சண்டாளனை இன்னும் ஒருமுறை என்னுடைய புத்திரன் என்று சொல்லுவாயாகில் உன்னுடைய நாக்கை இருதுண்டாகத் துணிப்பேன்.

ரத்னாங்கி—எப்படியிருந்தாலும் அவன் பெற்றவளுக்குப் பிள்ளையல்லவா ? நியாயமாக ஓர் உயிர் நீங்கும்போதே நெஞ்சம் துடிதுடிக்கும் என்றால் அநியாயமாய்த் தன் மகன் ஆவியை இழக்கும்போது எப்படி ஒருத்தி தன் நாவை அடக்கிக்கொண்டு இருக்கமுடியும் ?

நரேந்திரன்—ஆஹா ! என்ன நியாய அநியாயம் கண்டவள்போல் பேசுகின்றாள் ! போகட்டும். தடுத்துரைத்த சுமந்திரன் சொல்லையும் விடுத்துச் சித்திராங்கியின் மாளிகைக்குச் சென்று தந்தைக்கு வாழ்க்கைப்பட்டவளென்றும் பாராமல் அவளைப் பலாத்காரம் செய்த

பாபியைத் தண்டிக்காமல் இருந்தால் மற்றவர்கள் என்னை என்னவென்று மதிப்பார்கள் ?

ரத்னாங்கி—என்ன ! சாரங்கதரன் தன் தந்தைக்கு வாழ்க்கைப்பட்டவளைத் தன் தாரமாகக்கொள்ள நினைத்தானா ? அரசே, தீர விசாரியாமல் ஏன் இப்படிப்பட்ட வீண்பழியை அவன்மேற் சுமத்துகின்றீர்கள் ? ஏதோ இதுவரையில் 'புல் என்றாலும் புருஷன், கல் என்றாலும் கணவன்' என்று நினைத்து உங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் ஒன்றும் செய்ய வேண்டாமென்றிருந்தேன். நீங்கள் செய்த அக்கிரமங்கள் எனக்குத் தெரியாவென்று என்னையும் என் மகனையும் பழிக்கத் துணிந்தீர் போலும் ? பிள்ளைக்கு மணம் பேசிய பெண்ணை உம்முடைய மனைவியாகக் கொள்ள நினைத்த கொடுமையையும், அவள் அதற்கு இசையாமல் தான்வரித்த சாரங்கதரனை வரவழைத்து வலுவிற் பிடித்திழுத்ததையும் நான் அறியேன் என்று எண்ணினீர்களா ? என்னதான் தேகந் தெரியாத மோகம் தலைக்கேறித் தாம் செய்யும் காரியம் தவறில்லாததென்று தோன்றினாலும் மந்திரி முதலியோருடைய அபிப்பிராயத்தைக் கேட்டபிறகே அல்லவோ மன்னர்கள் இப்படிப்பட்ட கொடிய மரணதண்டனையை விதிக்கவேண்டும் ? சித்திராங்கியின் கையெழுத்திற் சுமந்திரன் காட்டிய கடிதத்தைக் கண்டபிறகேனும் பாவம் ஒருபக்கம் பழி ஒருபக்கம் என்று தங்களுக்குப் புலப்படவில்லையா ?

நரேந்திரன்—காதகி ! உன்னை இங்கே வரவிட்டதனால் அல்லவா உன் வாய்க்கு வந்தபடியெல்லாம் பிதற்றுகின்றாய் ! சுமந்திரன் அன்று, சித்திராங்கியே என்முன் வந்து 'நான்தான் சாரங்கதரனை வலுவிற் பிடித்திழுத்

தேன்' என்று சொன்னாலும் நான் அதை நம்பமாட்டேன். என் ஆருயிர்க் காதலியின்மீது அடாத பழியைச் சுமத்தும் உன்னை இதோ என்ன பாடு படுத்துகின்றேன், பார். [ரத்னாங்கியின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு ஹிம்சிக்க முயல்கின்றான்.]

பிரவேசம்: கனகாங்கி.

கனகாங்கி—[விரைந்தோடி வந்து உருவிய கத்தியுடன் நரேந்திரனை நோக்கி] அரசே! என்ன காரியத்தைச் செய்யத் துணிந்தீர்? ரத்னாங்கியின் கழுத்தை விடுகின்றீரா? என்ன? [நரேந்திரன் கனகாங்கியைக் கண்டு பயந்து ரத்னாங்கியின் கழுத்தை விட்டுவிடுகிறான். ரத்னாங்கி பயந்து மூர்ச்சிக்கின்றாள்.]

சற்றுமுன் என்ன கூறினீர்? சித்திராங்கியே வந்து 'நான்தான் சாரங்கதரனை வலுவிற் பிடித்திழுத்தேன்' என்று சொன்னாலும் நம்பமாட்டீரா? உண்மைதான். எப்படி நம்புவீர்? உம்மைப் போன்ற கிழங்கள் சாகுங் காலத்தில் தாம் மோகங் கொண்டவர்களிடத்தில் இப்படிப்பட்ட நம்பிக்கையை வைக்காவிட்டால் எப்படி? ஏதோ இதுவரையில் நாங்கள் வேறோர் ஆதாரமும் இல்லாமல் இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டதாக எண்ணியிருந்ததனால் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டிருந்தோம். இனி நானும் சித்திராங்கியும் எங்கள் உயிரைத் துரும்பாக மதித்திருப்பதனால் எது நேர்ந்தாலும் நேரட்டுமென்று உண்மையை உம்மிடம் சொல்லத் துணிந்தேன்: சித்திராங்கிதான் சாரங்கதரனை வலுவிற் பிடித்திழுத்தாள். இப்பொழுதும் சித்திராங்கிதான் அவனுயிரைக் காப்பாற்றப் போயிருக்கின்றாள். ஆகையால் இதுவரையிற் செய்த கபடங்களோடு அடங்

கிச் சாரங்கதரனுக்கு இட்ட தண்டனையை மீட்டுக் கொள்கின்றீரா? இல்லாவிட்டால் இவ்வாளுக்கு இரை யாகின்றீரா? பிறருடைய வஞ்சனைக்கு ஆளாகிச் சீர் குலைந்து நின்ற ஸ்திரீகளின் பகை சிதைக்கமுடியாத தென்று தெரிந்துகொள்ளும்.

நரேந்திரன்—[பிரமித்து] என்ன? கனகாங்கியா இவ்வாறு கூறுகின்றாள்! நான் காண்பது கனவா அல்லது நனவா?—ஐயோ, ஸ்திரீகளின் மனநிலைமை தெரியாமல் நான் என்ன மதிமோசம்போனேன்!

கனகாங்கி—புருஷருடைய வஞ்சமனம் தெரியாமல் நாங்கள் மோசம் போக வீணாய் ஏன் ஸ்திரீகளைப் பழிக்கின்றீர்?

நரேந்திரன்—கனகாங்கி! நான் செய்த குற்றங்களை மன்னிப்பாய்! இதோ, உன் இஷ்டம்போல் தண்டனையை மீட்டுக்கொள்ளுகின்றேன்.

கனகாங்கி—ஆனால் உத்தரவை உடனே மீட்டுக்கொண்டதாக ஒருகடிதம் எழுதிக்கொடும். [நரேந்திரன் கனகாங்கியின் கத்தியைக்கண்டு பயந்தவன்போல் நடித்து ஒரு கடிதத்தை எழுதிக் கொடுக்கின்றான். கனகாங்கி அதைப் பெற்றுக்கொண்டு கத்தியை நரேந்திரனுடைய முகத்தில் எறிந்து விட்டு விரைவாகப் போகின்றாள்]

நரேந்திரன்—[கபடப் புன்னகை புரிந்து] பேதைமை என்பது மாதருக்கு அணிகலம் என்னும் உண்மையை இன்றுதான் உணர்ந்தேன். கடிதத்தில் என்ன எழுதினேன் என்றுகூடப் பாராமல் என்ன அவசரமாய் ஓடுகின்றாள்! கனகாங்கி! உன் இஷ்டம்போற் கடிதம் எழுதிக்கொடுக்க என்னைப் பைத்தியக்காரனென்று எண்ணினையா? கடிதத்தைக் கொண்டுபோய்க் கொலையாளிகளிடம் கொடுத்

தமும் உன்னுடைய கதியும் சாரங்கதானுடைய கதி தான் என்று தெரிந்துகொள்வாய். [தன்னுடைய ஆஸனத்தை நோக்கிச் செல்ல அதில் சாரங்கதரன் உருவம் கத்தியும் கையுமாய் நிற்கிறதென்று நினைத்து நடுநடுங்கி விழுந்தெழுந்து] என்ன இது? சாரங்கதரன் இங்கே வர என்ன காரணம்?—காதகா! என் மீதா கத்தியை ஓங்குகின்றாய்? இதோ, உன்னை ஒரு க்ஷணத்தில் வெட்டி வீழ்த்துகின்றேன், பார்! [கனகாங்கி எறிந்துவிட்டுப்போன கத்தியை எடுக்கப்போய் அதிற் சித்திராங்கியின் உருவம் தோன்றக் கண்டு பயந்து] ஹா! சித்திராங்கி! இல்லை; சாரங்கதரனை நான் கொல்லவில்லை! என்னை அப்படிக் குரூரமாகப் பார்க்காதே; என் உயிரைப் போக்காதே. நான் உன்னுடைய நாயகன் அல்லவா? அன்று; அன்று.—உன்னுடைய நாயகனைப் பெற்ற தந்தைதான். நான் செய்ததெல்லாம் தவறுதான். உன் விழிக்கணையால் என்னை வெருட்டாதே. இதோ உன் காலில் விழுந்து உன்னை வேண்டிக்கொள்கின்றேன்! நான் செய்த தீங்குகளை யெல்லாம் மன்னிப்பாய்! [கீழே விழுந்து சித்தப்பிரமை தெளிந்து] சீ! நான் என்ன துஸ்வப்பனம் கண்டவன்போல் என்னுடைய சித்தப்பிரமை சிருஷ்டித்த ஓர் உருவெளித் தோற்றத்தைக் கண்டு அச்சம்கொண்டு அவதிப்பட்டேன்! ஐயோ! முடிமன்னரெல்லாம் அடிதொழ வாழ்ந்த நான் கடைசியில் என்ன கதியை அடைந்தேன்! பெற்ற பிள்ளையின் பெண்டாட்டியை உற்ற மனைவியென்று கைப்பற்றிச் சரசத்துக்கு அழைத்த சண்டாளன் இவன் தான் என்று கண்டோரெல்லாம் கையெடுத்துக் காட்டி இகழ நான் இன்னும் உயிரோடு இருக்கவேண்டுமா?

வேண்டாம். நான் ஜன்மமெடுத்து அடைந்த பலன் போதும். பிறருடைய பழிச்சொல்லைக் கேட்டுப் பரிதவித்துப் பிராணனை விடுவதினும் இப்பொழுதே என் பிராணனை மாய்த்துக்கொள்வது உசிதமாகும். ஆகையால் எவ்விதம் கத்தியைக்கொண்டு சித்திராங்கியை வஞ்சித்தேனோ அவ்விதம் கத்தியினாலேயே என் உயிரைப் போக்கிக்கொள்கின்றேன்.

[கத்தியாற் குத்திக்கொண்டு மடிகின்றான்.]

அங்கம் 3.

களம் 3.

இடம் : ராஜமகேந்திரத்தை அடுத்த ஒரு மலைச்சாரல்.

பிரவேசம் : கொலையாளிகளும் சாரங்கதரனும்.

சாரங்கதரன்—என்ன வைராக்கியம் பேசி என்ன பலன்? இன்னும் ஒரு நிமிஷத்திற் பிராணன் போய்விடப் போகிறதென்ற எண்ணம் எனக்கு உண்டானது முதல் என்னுடைய மனம் அநுபவிக்கும் அவஸ்தையை நான் என்ன சொல்வேன்! கிடைத்தற்கு அரிய மனுஷஜன்ம மெடுத்து, பிறத்தற்கு அரிய க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்து, சகல ஐச்வரியானுபோகங்களிலும் சிறந்து, தவஞ்செய்து பெற்ற தாயைத் துறந்து, இப்படிப்பட்ட இழிவான நிலைமையை அடைந்து என்னைப்போற் பரிதவித்தவர்கள் யாரேனும் இப்பூமியில் இருக்கின்றார்களா? ஐயோ! நான் எதற்கென்று அழுவேன்!

[ஆசிரிய விருத்தம்]

சீர்கொண்ட சந்திர குலத்தே உதித்தவோர்
சீலம்நி னைத்தழுவனோ
செப்பரிய மந்திரிசொல் மீறிச்சித் ராங்கியிடம்
சென்றதைநி னைத்தழுவனோ
ஏர்கொண்ட பாவியென் னைவலுவி லேபிடித்
திழுத்ததைநி னைத்தழுவனோ
ஏனமதாகவிவ் வூரார்சி ரிக்கஉடல்
எடுத்ததைநி னைத்தழுவனோ

பார்கொண்ட தந்தையென் மேல்வைத் திருந்தவோர்
　　பட்சம்நி னைத்தழுவனே
பலர்காண வீதியிற் பழிகார னய்வந்த
　　பாபம்நி னைத்தழுவனே
தார்கொண்ட கூந்தலென் தாய்கண்டு மனமிகத்
　　தவித்ததைநி னைத்தழுவனே
தரணியிற் பிரமனல் எனக்குவந் துற்றவோர்
　　தலைவிதிநி னைத்தழுவனே.

ஐயோ! இவ்வளவுக்கும் என்னுடைய மதியீனமே காரணமல்லவா? இல்லாவிட்டால், தன்னுடன் பிறந்தவர்களா யிருந்தாலும் ஸ்திரீகள் தனித்திருக்கும் இடத்திற்குப் போகக்கூடாதென்று சொன்ன சுமந்திரனுடைய லோகாநுபவத்தை அவமதித்து என்னுடைய ஏகாநுபவத்தையே பெரிதாக மதித்துச் சித்திராங்கியின் அந்தப்புரத்துக்குச் சென்றிருப்பேனு? அப்படிப் போகத்தான் போனேனே: தந்தைக்கு ஒரு நிந்தையைத் தேடக்கூடா தென்னும் தருமத்தைமட்டும் பரிபாலிக்க எண்ணினேனே தவிர, நெருப்பு இல்லாமற் புகையுமா என்று அவளுடைய சொல்லைத் தீரவிசாரித்தேனு? என்னதான் தந்தையானாலும் தவறு செய்தபோது அவர்களைத் தடுத்தாளவேண்டியதும் தனயர்களுடைய கடமையே அல்லவா? ஒரு தருமத்தையே உயர்வாக மதித்து அதை எவ்விதத்தாலும் நிலைநிறுத்த முயல்வோர் இப்படித்தான் மற்றத் தருமங்களை மறந்து மனவேதனைக்கு ஆளாவர்போலும்! இவைகளை யெல்லாம் இப்பொழுது யோசித்து என்ன பலன்? வீணுய் என் விதியை நினைந்து காலங்கழித்துக் கொலையாளிகளை அரசனுடைய கோபத்துக்கு ஆளாக்காமல் இறக்குமுன்னரேனும் ஈச்வரத்யானம் செய்து போகிறவழிக்

குப் புண்ணியத்தைத் தேடிக்கொண்டு பிராணனை விடு வோம்.—ஹே! க்ருபாநிதே! ஸமயஸம்பவங்களையே ஆதாரமாகக்கொண்டு காககாலிக ந்யாயத்தை அநு சரித்துப் பிறர் கூறும் பழிச்சொல்லுக்கு ஆளானோரில் ஒருவரேனும் இவ்வுலகத்தில் திரிகரணசுத்தியாய் உண் மையைச் சொல்லி லோகநிந்தனையை மாற்றிக்கொண்ட தில்லை. ஆதலால், நீ என் முறையீடுகளைக் கேட்டு என்னை நிரபராதியென்று நினைப்பாயோ நினைக்கமாட்டாயோ அறியேன். நீ என்னை நிரபராதி என்று நினைக்கா விட்டால்,

(இராகம்: ஆரபி. தாளம்: ஆதி.)

பல்லவி

ஆர்போய்ச் சொல்லுவார் இந்தவேளை அர்ஜுனுக்கோடி (ஆர்)

சரணம்

பார்புகழ் புருவைநாடிப் பரிவுடன் அதைத் தேடிச்
சீர்படச் சித்ராங்கிமனை சென்றான் ஏங்கி
நின்றான் என்று (ஆர்)
வார்படுகொங்கைச் சித்ராங்கி வல்லடிவழக்கா லேங்கி
நேர்படு நெஞ்சம் மிகத் துடித்தான் நியாயம்
படித்தான் என்று (ஆர்)
கார்முகி லனைய கூந்தற் காரிகைக் கிசையா தேந்தல்
போர்மிகக் கதவுடைத்துக் குதித்தான் உன்னைத்
துதித்தான் என்று (ஆர்)

—கொலையாளிகளே! என் வேலை முடிந்தது. உங்கள் வேலையைச் செய்துவிட்டுச் செல்லுங்கள். [சாரங்கதரன் ஒரு பாறையின்மேற் படுக்கின்றான். அவனுடைய மாறுகால் மாறுகையை வாங்கிவிட்டுக் கொலையாளிகள் போகின்றார்கள்.]

பிரவேசம்: சித்திராங்கி.

சித்திராங்கி—[ஆத்திரமாக ஓடி அலைந்து பிரமித்து நின்று] என்ன ஆச்சரியம்! ஒருவரையுங் காணோம்! நான்தான்

வழிதவறி வந்துவிட்டேனே? அல்லது கொலையாளிகள் தங்கள் வேலையை முடித்துவிட்டுப் போய்விட்டார்களா? இம் மலைச்சாரல் இப்படி நிச்சப்தமாய் இருக்க என்ன காரணம்?

சாரங்கதரன்—ஹே! ஜகத்ரக்ஷகா! இன்னும் ஏன் என்னை உயிரோடு வைத்திருக்கின்றாய்? இந்தச் சங்கடத்தை இனி என்னால் சகிக்கமுடியாது. சீக்கிரம் என்னை ஆட்கொள்.

சித்திராங்கி—ஐயோ! என் செவிவழியே புகுந்து என் ஜீவனைக் கவரும் இந்தத் தீன ஸ்வரந்தான் என்னுடைய மனோகரனுடைய குரலோ? அப்படி இருந்தால் என் கதி என்ன? [அருகிற்போய்ப் பார்த்து] ஐயோ! இப்படிப் பட்ட பரிதாபகரமான காட்சியைப் பார்க்கத்தானோ நான் பறந்தோடி வந்தேன்! நான் கும்பிட்ட தெய்வங்களில் ஒன்றேனும் குறுக்கே வந்து இக்கோரமான கொலையைத் தடுக்காமற் போயிற்றே! என் அளவில் தெய்வந்தான் இல்லையோ? அல்லது நான் தொழுதது தான் கல்லையோ? இன்ப துன்பம் இரண்டுக்கும் ஏதுவாகிய மோகம் எனக்கு ஆதிமுதல் துன்பத்தையே கொடுக்க, நான் முற்பிறப்பில் என்ன அறியாப் பாவத்தைச் செய்தேன்? இந்த நீரஜதள நேத்திரனுடைய சித்திரப்படத்தைக் கண்டு, நிஷ்களங்கமான மோகத்தைக் கொண்டு, நெட்டுயிர்த்து நெட்டுயிர்த்து என் உடல் உயிர் துவண்டு, நித்திய ஜீவியாக்கும் இவன் அதராமிருதத்தை உண்டு இன்புற்று வாழ நினைத்து நான் செய்த காரியத்தை நரேந்திரன்முன் விண்டு, கொண்ட கணவனுக்குக் கூற்றாகிய என்னைத் தசதிசாதிபதிகாள்! இன்னும் ஏன் உயிரோடு வைத்திருக்கின்றீர்கள்? பயங்கர

மான புலி கரடிகாள்! இப் பாபாத்மாவைத் தீண்டுவதும் கொடிய பாபமென்று நினைத்துக் குகைகளிற் சென்று ஒளித்துக்கொண்டீர்களா? ஐயோ! சகல ஜீவகோடி களையும் கண்டித்துத் தண்டிக்கும் யமதண்டமும் தன் தொழிலை மறந்ததோ? லோகத்தில் அதருமமே சிறந் ததோ? என் மனோகரனுடைய மரணாவஸ்தையைக் காண உயிரோடிருந்தால்தான் நான் செய்த கோராபகா பாதகங்கள் மகோன்னத பதவியை அடையுமென்று என்னைச் சிக்ஷிக்கவேண்டியவைக ளெல்லாம் என்னை ரக்ஷிக்க நினைத்தனவோ? வெய்ய பாதகக் காதலென் னும் காற்றில் அகப்பட்டு, லஜ்ஜா பய தர்மங்களை விட்டு, விவேகம் கெட்டு, பாப பரிதாப கூபத்தில் விழுந்து நான் அநுபவித்த துன்பங்கள் போதா வென்று இன்னும் என் உயிர் என்னைவிட்டு நீங்காதிருக் கின்றதோ? ஐயோ! எனக்கு மரணம் வாராதோ? பூதேவி! என் மனோகரன் ஆவி துடித்திடச் செய்த என்னை நீ வெடித்துப் பாதாளத்திற் கொண்டுபோய்க் கொள்ளியில் தள்ளிக் கொல்லாமல் ஏன் சும்மா இருக் கின்றாய்? பாபாத்மா பூபாரம் என்பதை மறந்தனையோ? வேண்டாம். இனி நான் உயிர்வாழேன். ஹா! [மூர்ச்சித்து விழுந்து, மெய்ம்மறந் தெழுந்து, பைத்தியம்பிடித் தவள்போல் மருள விழித்து, வீரிட்டு] ஹா! நரேந்திரன் இங்கும் வந்தனனே!—இல்லை; என் தந்தை! ஐயோ! என்ன கோராகாரம்! பிதா! வாழியென்று என்னை ஆசீர்வதிக்கின்றீரா? வேண்டாம். இப் பாவியின்மீது வைத்த பட்சத்தை மறந்துவிடும். என்ன? என்னு டைய நிலைமையைச் சேவகன் கூறக் கேட்டு உயிர்துறந் தீரா? ஆனால், இதோ உம்முடன் நானும் வருகின்றேன்.

இரும்; போகாதீர்!—ஹா! போயினரே!—என்ன இது! என் தாய் தலைவிரிகோலமாய் இங்கே வர என்ன காரணம்?—அம்மா! ஏன் அப்படிக் கண்ணீர் சொரிகின்றாய்? என்னை ஏறெடுத்துப் பாராமல் ஏன் அப்படி முகத்தைத் திருப்பிக்கொள்கின்றாய்? இதோ உன்னை வணங்கிக் கேட்கின்றேன். என் குற்றத்தைப் பொறுத்தருள். போகாதே! போகாதே! என்ன, நான் செய்த காரியம் மன்னிக்கக்கூடாத பாபமா? ஆயினும், தன்னுடைய வயிற்றிற் பிறந்தவர் செய்த குற்றத்தைப் பெற்றவர்கள் என்றேனும் மன்னிக்காமல் இருப்பார்களா? ஹா! என்னுடைய தாயும் என்னை மன்னிக்காமல் போய்விட்டனளே!—ஹா! சாரங்கதரா! சாவதற்கு முன்னரேனும் என்னை நீ உன் பத்தினியென்று நினைத்து என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தை சொல்ல மாட்டாயா?

சாரங்கதரன்—சித்திராங்கி! உண்மையை அறிந்தேன்; உன்னையும் மன்னித்தேன். [இறக்கின்றான்.]

சித்திராங்கி—என்ன! மன்னித்தீரா! ஆனால் இதோ நான் மாலையிட்ட கத்தியை மருவி அணைத்து என் மார்பிற் பதித்தேன். [கத்தியின்மேல் விழுந்து பிராணனைப் போக்கிக்கொள்கின்றாள்.]

முற்றிற்று.



SASI VILASA SABHA, MADRAS. 1914.

குறிப்புரை

பக்கம் 1.

கலித்துறை. காரங்கமேனிக் கடவுள் - திருமால். பயந்த - தந்தருளிய. அம்பின் - அம்பினால். மெய் - தனதுமேனி. காமன் அம்பினால் வீரம் கதறவும் மெய் வெந்தழலாகவும் விழைகின்ற உள்ளத்தையும் சிறப்புடைய அங்கத்தையும் மேவித் திகழ்ந்த சித்திராங்கி. சித்திராங்கி சாரங்கதரன் ஆகிய இருவர் சரிதம் நடிக்கக் காரங்கமேனிக் கடவுள் நமக்குச் சரண்.

வேறுபொருள்: காமனது அம்பினுடைய வீரம் கதறவும் அவனது மெய் தழலாகவும் திகழ் சாரங்கதரன்; சாரங்கத்தைத் தரித்தவனாகிய சிவபெருமான்; சாரங்கம் - மான். சித்திராங்கி செறிந்த - அலங்காரம் பொருந்திய அங்கங்களையுடைய பார்வதி தேவி பொருந்திய. காரங்கமேனிக் கடவுளும் சாரங்கதரனும் இச் சரிதம் நடிக்க நமக்குச் சரண் என்க.

வரி 14. ஐயோ ஈச்வரா: கதையின் போக்கையும் முடிவையும் தழுவி முதற்கூற்று, பரிதாபக்கூற்றாய் அமைந்தது.

பக்கம் 2.

வரி 13-16. இந்த லக்ஷணத்துக்கு... ...வேண்டுமாம்: இவ் வாக்கியம் பெண்ணின் அழகு விசேஷத்தைக் குறிப்பிப்பதோடு நரேந்திரன் தனக்காகவே பெண் தேடச் செய்ததையும் குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

பக்கம் 3.

வரி 20. பாழும் கல்யாண சிந்தை: வெறுப்பிற் கூறியது; பின் விளைவைச் சூசிப்பிக்கும் தொனியாக அமைந்தது.

பக்கம் 4.

வரி 7-8. அந்த இழவுக்குத்தான்: இதுவும் மேற்கூறியது போன்றதே.

பக்கம் 6.

வரி 4-5. கட்டைமுட்டைக்கல்யாணம் - தகனக்கிரியை.

பக்கம் 7.

வரி 17-18. சித்திராங்கி மாங்கல்ய தாரணமின்றியே இறந்ததும், பெண்மூலம் நிர்மூல மென்பதற்கேற்பச் சாரங்கதரன் முதலியோரும் இறந்ததும் ஈண்டு அறிதற்குரியன.

பக்கம் 9.

விருத்தம். நல்லியல் - நற்குணம். நலிவு - துன்புறுத்தல். வல்லி - பெண்.

பக்கம் 12.

கலித்துறை 1. மன்மதன் அம்பு - மலர். எழிலியின் - மேகத்தைப்போல. பிணிமுகம் - மயில். செய்கின்ற ஆட்டம். கோகிலத்தின் வாட்டம்.

கலித்துறை 2. அண்ணம் - மேல்வாய். புலம்பு-வருத்தம். அண்ணமே பேராத வாய்ப் புலம்பு - வாய் திறவாமல் உள்ளடங்கிய அழுகை.

பக்கம் 13.

வரி 27. சாரங்கதரன் - வில்லையுடைய மன்மத னென்பது ஒரு பொருள்.

பக்கம் 15.

கலித்துறை. அத்தி - யானை. கரையிலுள்ள யானை தந்தி மேலுங்கீழுமாக உருளுகின்ற வாவி. சங்கு ஆரவாரிக்கும் வாவி. செம்மலுக்கு எனது இன்னலை அறிகின்ற வண்ணம் அகன்றே சொல்வாய்; தூதுபோவென்றபடி. இன்னே - இப்பொழுதே.

பக்கம் 27.

ஆசிரிய விருத்தம்- மதவேள் - மன்மதனைப்போன்ற சாரங்கதரன்.

பக்கம் 30.

கீர்த்தனம். சரணம் 1. "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" (குறள்). செய்வந்தனை - செய்யும் வணக்கம். செய்ய - சிவந்த.

சரணம் 2. தன்சொலால் முக்கனிச் சாறூட்டும் - தன்னுடைய சொல்லின் சுவையை முக்கனி ரசத்தின் சுவையைப்போலப் பிறர் நுகரச் செய்யும்; முக்கனிபோன்ற சொல் லென்பது கருத்து. நெகிழாதே - சோர்வை அடையாதே.

சரணம் 3. கற்றூர் அகமகிழப் பரிவொடு போற்றி அவர்களுக்குப் பொருளைக் கொடு.

பக்கம் 35.

வரி 5-6. ஈ மூட்ட அட்ட உண்ணி - இந்த மூட்டை அங்கே இருக்கட்டும் ; இது தெலுங்கு.

வரி 14-15. பிலு பிலு - கூப்பிடு, கூப்பிடு; இது தெலுங்கு.

பக்கம் 36.

கீர்த்தனம். சரணம். அழிந்திடும் தசை - இறக்கும் நிலை. இனம் நீங்கி - சுற்றத்தாரை நீங்கி.

பக்கம் 44.

கலித்துறை. பாசமாகிய வெள்ளத்திற் படிந்தேன் ; இன்பமாகிய கரையிற் சேர நின் நகிலாகிய குடத்தைத் தந்து கூடுவாய்.

பக்கம் 46.

கீர்த்தனம். பல்லவி. இந்தத் தாமதமே பண்ணத் தகுமோ வென்று கூட்டுக.

சரணம். அனங்கன் - மன்மதன். என் நோவைத் தீர்த்து அருள் செய்ய நின் வாய்த்தேனே மருந்து; திருந்திய கனிந்த மருந்து. இனி இங்குத் தனி இருந்தும் அம்மருந்தை அருந்தத் துனி தகுமோ ? துனி - கோபம்.

பக்கம் 47.

வரி 7. காடுவா வென்பது உன்னைக் கூடுவதற்கேயாகும்: சித்திராங்கியைக் காட்டில் தனியே வைத்திருந்தது நினைத்தற்குரியது.

பக்கம் 48.

விருத்தம் 1. வம்பு - வாசனை. தாரம் - மனைவி. நமன்தமர் -

யமதூதர். எற்றி - தள்ளி. நரகாவஸ்தைப் படுவாயென்பதை நினைந்தேனும் அஞ்சி என்னை நீங்கா யென்பது கருத்து.

விருத்தம் 2. அரணம் - பாதுகாவல்.

பக்கம் 49.

தர்க்கம். மூடனின் - மூடனைப்போல. நெறியா - தர்மமா.

பக்கம் 50.

வரி 15: இது முதல் சித்திராங்கியின் வசனம், நரேந்திர னுக்கு இணங்குவதுபோல் தோன்றினும் உள்ளக் கருத்து வேறு தலை உற்றுநோக்கி உணர்க.

பக்கம் 51.

வரி 12. இல்லாள் - இல்லாதவள்; மனைவி.

பக்கம் 52.

வரி 4-5. அதுவே......ஆகும்: நரேந்திரனை மிருகத்துக் குச் சமானமாகக் கருதும் சித்திராங்கியின் உள்ளக்கிடக்கை, இவ்வாக்கியத்தில் அமைந்திருக்கிறது. விலங்குகள் - மிருகங் கள்; தளைகள்.

பக்கம் 54.

கலித்துறை. இச்செய்யுள் இரண்டு பொருளுடையது. சாரங்கதரன்மேல் காதலுடையவளாகத் தோற்றுவது ஒரு பொருள்; வாத்ஸல்யமுடையவளாகத் தோற்றுவது மற்றொரு பொருள்.

1. ஆவிக்கு மாரன் - என் உயிருக்கு மன்மதன் போன்ற வன். ஆளன் - நாயகன். நின்னையகன்று - நின்னைப் பிரிந்து. நின்னையளித்த கடவுளை. நீ வந்தால் மனமுவந்து நின் அன்பை எனக்குக் கிடைக்கச்செய்த கடவுளைச் சேவிப்பேன்.

2. ஆவி குமாரன் - உயிர்போன்ற புதல்வன். ஆளன் - ஆண்மையையுடைய வீரன். நின்னை அகன்று - நின்தந்தை அக ன்று. நீ வந்து சேர்ந்தால் நான் நோய் நீங்கி நின்னையளித்த தந்தையைச் சேவிக்கும் நிலைபெறுவேன்.

பக்கம் 55.

பாட்டு. வித்வசனம் - புலவர்கூட்டம். தேன்முரல - வண்டு ரீங்காரம் செய்ய. விஜயாள் - திருமகள். தத்வம் - உண்மை. அகலத்தடவரை - மார்பாகிய பரந்தமலை. இதயமாகிய ஒப்பற்ற மலர். அத்வயிதமென அறைய நின்று அபேதமுற வெனவும், த்வயிதமென அறையநின்ற பேதமுற வெனவும் கூட்டுக. திருமகளும் திருமாலும் சேர்ந்திருத்தல் அத்வயிதம், த்வயிதம் என்ற இரண்டிற்கும் இலக்கியமாக உள்ளதென்பது கருத்து.

பக்கம் 58.

வரி 7-8. சாரங்கதரர் என்பதற்குச் சிவபெருமானென்று பொருள்கொண்டு, கைலாஸத்தில் இருப்பதாகச் சொன்னான்.

பக்கம் 60.

வரி 27. நயம் - இன்பம், மேன்மை. கனயமகமாக - பெருமையுடையதாகவும் வந்த சொல்லே வந்ததாகவும்.

பக்கம் 61.

வரி 2. மோக நயம் அகமாக - காம விருப்பத்தை உட்பொதிந்ததாக.

பக்கம் 64.

கீர்த்தனம். பரிசனம் - சுற்றத்தார். காரும் பயந்த குழல் - மேகமும் உவமையாகமாட்டாமல் பயந்து ஓடிய கரிய கூந்தல். இருநிலத்து ஆரும் புகழ் நளன். உழந்ததும் - வருந்தியதும்.

பக்கம் 65.

விருத்தம். ஒருபொருளும் கைக்கு எட்டாது என்க. கனம - பெருமை. இக்கட்டு ஆம் - இடையூறுகும். கவறு - சூதாட்டத்திற்குரிய காய்.

பக்கம் 70.

வரி 22-23. 'என்னுடைய அழகிய தாய் எனக்கு விருப்பமூட்டும் அன்பு உறவுக்காக நான் உயிரை விடுவேன்' என்ற தொனிப்பொருள் இவ்வாக்கியத்தில் அமைந்திருத்தல் காண்க.

BY THE SAME AUTHOR

YUDDHALOLAN

SHAKESPEARE'S "OTHELLO"

OPINIONS.

1. M.R.Ry., T. RAMAKRISHNA PILLAI, Avl. B.A. Chairman, Tamil Board, University of Madras:—Allow me to congratulate you on the excellence of your performance. You have done the work extremely well.

2. M.R.Ry., T. CHELVAKESAVAROYA MUDALIAR, Avl., M.A., Professor of Tamil, Pachaiyappa's College, Madras:—Your adaptation must be acknowledged to be a success. Your translation seems to be faithful and well done.

3. RAO SAHIB S. BAVANANDAM PILLAI, Avl., F. R. H. S. & M. R. A. S:—Mr P. S. D. Aiyangar deserves to be congratulated on his successful attempt to contribute to a more thorough study of Shakespeare and a fuller appreciation of his genius.

4 THE MADRAS MAIL:—The book is faithful to the original, the Tamil version being neither too literal to grate on Tamil ears nor too free to mar the spirit of the original. The style is at once dignified and easy and the play is suitable for representation on the Indian stage.

5. THE INDIAN PATRIOT:—"It is a scholarly production, written in excellent language.

6. THE HINDU:—The translation has been done with care and ability and the spirit of the original has been well preserved. The language employed is simple racy Tamil.

7. THE EDUCATIONAL REVIEW:—The author is to be congratulated upon his excellent production which leaves nothing to be desired in accuracy, finish and literary merit.

First Edition 1910.

Second Edition will be ready shortly.

BY THE SAME AUTHOR

VALLI

OR

MURUGAN THIRUMANAM

OPINIONS.

1. THE MADRAS TIMES:—"Valli or Murugan Thirumanam" is a Tamil drama (comedy) written by Mr. P. S. Duraiswami Aiyangar. It is the story of the well-known marriage of Valli with Subramania Swami. It affords pleasant reading to the Tamil public and is well adapted for enactment on the stage. We recommend it to the Tamil-speaking people.

2. THE HINDU:—"Valli" will more than sustain the reputation of the author of "Yuddhalolan." The theme of "Valli" must be dear to the hearts of students of Tamil Literature as it concerns the wedding of its Sovereign Deity, God Subramanya. The work bears the impress of the actor's hand and is well-adapted for the stage. The drama is written in simple and elegant literary Tamil, the dialogues and the character-drawing are skilfully done.

3. THE NEW INDIA:—In this little book, the author persents in a beautiful style the story relating to the marriage of Sri Subramania with Valli at the instigation of the sage Naradha. The one peculiar characteristic of the book is that it is free from the general complaint that the authors of Tamil dramas, in a majority of cases, who are unprofessional men go beyond their province and render the work unsuitable for adaptation on the stage. The author who is himself one in the field, has spared no pains to free himself from such a complaint. The literary beauty of the work and the careful selection of poems from well-known and recognised poets are other elements which add considerably to the usefulness of the book.

First Edition 1915. Second Edition 1922.

Third Edition will be ready shortly.

மனமகிழ்ந்து என்பது சித்திராங்கியின் கருத்து. அந்தரம் - தனிமை; ஆகாயம்.

வரி 7. அகமகிழ்ந்து உதார நிலையென்று தோற்றினும், அகமகிழ்ந்து தாரநிலையென்று சொல்வதே சித்திராங்கி கருத்து.

வரி 8. அவ்வன்புறவை - அந்த அன்பையுடைய காதலை; அந்த வலிய புருவை.

வரி 13. உன்னை அன்பால் - உன்னை ஆசையோடு; உன் ஐயன்பால் (தந்தையிடம்).

பக்கம் 113.

வரி 7. பாவி என்பது ஆளாக்கலாமோ பாவியென்று நரேந்திரனுக்கும், பாவி சாரங்கதரா வென்று சாரங்கதரனுக்கும் சாரும்.

பக்கம் 117—118.

அகவல் 9. சிந்தாகுலம் - மனக்கவலை. 53. சகடக்கால் - வண்டிச் சக்கரம்.

பக்கம் 124.

வரி 6. நடுக்கண்ட நியாயம் - நடு நிலைமையைக்கொண்ட நியாயம்.

பக்கம் 133.

வரி 22. உருவெளித்தோற்றம் - ஒருவருடைய நினைவாகவே இருக்கும் ஒருமனிதருக்கு அவருடைய உருவம் வெறுவெளியில் தோன்றுவது; உருவம் ஆகாயத்தில் தோன்றுவ தென்பது சொற்பொருள்.

பக்கம் 137.

வரி 4. காகதாலிகநியாயம் - காக்கை யேறப் பனம்பழம் வீழ்ந்ததுபோல வென்பது.

கீர்த்தனம். சரணம். பரிவு - அன்பு. வார் - கச்சு. கார் முகில் - நீருண்டு கறுத்த மேகம்.

பக்கம் 138.

வரி 11. தீனஸ்வரம் - மெலிந்தகுரல்.

வரி 22. *நீரஜதளநேத்திரன் - தாமரை யிதழ் போன்ற கண்ணையுடையவன்.*

வரி 28. *தச திசாதி பதிகாள் - தசைக்கும் திசைக்கும் அதிபதிகளே; தசையென்றது வாழ்க்கையி லுள்ள தசைகளை; அதன் அதிபதிகள் நவக்கிரகங்கள்.*

பக்கம் 139.

வரி 13. *கூபம் - கிணறு.*

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	13	*ராஜநரேந்திர*	*ராஜா நரேந்திர*
23	17	*தன்னுடைய*	*தம்முடைய*
25	14	*எஙகளை*	*எங்களைச்*
32	22	*ஆரப்*	*ஆறப்*
73	29	*சாரஙகதாரி*	*சாரஙகதரா*
103	25	*தெகம்*	*தேகம்*
109	4	*சூழலில்*	*சுழலில்*

பக்கம் 73.

வரி 13. நீவி - விலக்கி. வரி 22. என்னே - என்ன.

பக்கம் 77.

கீர்த்தனம்- அநுபல்லவி. மரு - வாசனை. ஆர் - பொருந்திய. மதனுகமம் - காம சாஸ்திரம்.

பக்கம் 79.

கலித்துறை. விரகு - தந்திரம். பசலை - பசப்புநிறம், தேமல்; இது நாயகரது பிரிவினால் பெண்களுக்கு உண்டாவது.

பக்கம் 81.

கீர்த்தனம். வித்தம் - பணம். சித்தஜன் - மன்மதனைப் போன்ற சாரங்கதரன்.

பக்கம் 83.

வரி 24-25. அன்புறவெனப் பிரித்து அன்பாகிய உற வென்றும் வன்புறவெனப் பிரித்து வலிய புருவென்றும் இரு பொருள் கொள்க.

பக்கம் 84.

கலித்துறை. பல்நாகம் - பல்லையுடைய நாகம்; பன்நாகம். பகழி - அம்பு. ஆகம் - மனம், தேகம்.

பக்கம் 87.

கீர்த்தனம். சரணம். நோன்பு - தவம். நுந்தியதோ - செலுத்தியதோ. புகர் - குற்றம்.

தாய் அன்று; அகமகிழ்ந்து தாரநிலையைத் தான்கொண்டு ஆற்றும் உபசாரமெல்லாம் செய்வே னென்பது சித்திராங்கி கருதிய பொருள்; தாரநிலை - மனைவியின் நிலை.

தாய் அன்று அகமகிழ்ந்து உதாரநிலையை எனப் பிரித்து, தாயார் அந்நாளில் உனக்குச் செய்த உபசாரங்களை, அன்றுணரா நிலையில் இன்று நீ பெற நான் செய்வேனென்று வேறு பொருள்கொள்க; அன்றுணரா நிலையென்றது தாய்செய்த உப

சாரத்திற்கும் நான் செய்யும் உபசாரத்திற்கும் வேறுபாடுண்டு என்றபடி.

பக்கம் 88.

வரி 20. மோகவன்புறவை - விருப்பந்தரும் அன்பையும் உறவையும்; விருப்பமுற்ற வலிய புறவை.

வரி 28. புறு, கிளி, மயில், குயில்; இவை, உவமையால் சித்திராங்கி தன் நகில், மொழி, சாயல், குரல் ஆகிய இவைகளைக் குறித்துச் சொன்னவை.

பக்கம் 89.

வரி 3-5. என் . இரண்டு தனங்களின் இடையேயுள்ள இதயத்தில் உன்னுடைய மோகமாகிய அன்புடைய காதலை வைத்திருக்கிறேனென்பது சித்திராங்கியின் குறிப்பு.

பக்கம் 98—99.

கீர்த்தனம். விரசம் - சுவையற்றது; வெறுப்பதற்குரியது. சசிவிலாசவதனம் - சந்திரனின் அழகைப் பெற்ற முகம். அனுராகம் . காதல்.

பக்கம் 100.

கீர்த்தனம். ச்ரேயம் - பெருமை. மோகமே திகழ்யோகம் - அன்புள்ளயோகம்; ஆசைமிக்க புணர்ச்சியென்பது வேறொரு பொருள். யோகமே நேசநிலைமைக்கும் வழியாக மேவுற வெனக் கூட்டுக.

பக்கம் 104.

வரி 15. வண்டு மலர்ச் சேக்கை விரும்பும் - வண்டுகள் மலர்களாகிய படுக்கையை விரும்புகின்ற.

பக்கம் 111.

வரி 4. 'அட பாபி!' என்றது, நரேந்திரனை நினைந்து. ஆயினும் 'சாரங்கதரா!' என்று அடுத்தே சொல்வதனால் சாரங்கதரனையே அங்ஙனம் சொல்வதாகக் கேட்போர் நினைப்பர்.

வரி 4-6. உன்னைப் பிரிந்து தனிமையுற்று மிகவும் வாடியலைந்து உன்னிடத்து நீங்காத காதல் உறவைப்பெற இங்கே

BY THE SAME AUTHOR

PRAHLADHA

OR

THE IDEAL DEVOTEE

OPINIONS.

1. THE MADRAS MAIL :—The various incidents are naturally full of human interest. The scenes in the play have been arranged with considerable skill and judgment, and we have no doubt that it will prove a valuable addition to the Tamil dramatic literature of the day.

2. THE HINDU :—Of the literary merits of the work, it is enough to say that Prof. T. Chelvakesavaroya Mudaliar, M. A., writes an appreciative introduction pointing to the many elements of human interest in the play and remarking that 'The diction and syntax are much above the average.' The stanzas composed for the play run smoothly. This is very creditable.

3. THE NEW INDIA :—In this book the author presents, in his usual beautiful style, the story of the ideal devotee, Prahlada. The play is compiled in simple literary Tamil. The selection and the composition of stanzas are very creditable and exhibit much skill and originality.

4. *சுதேசமித்திரன்:—...இச்சிறந்த நாடகமும் சொற்சுவை பொருட்சுவை பொருந்தி யிருப்பதோடு நடிப்பதற் கெளிதாகவும் அமைந்திருக்கிறது.*

5. *தேசபக்தன்:—ப்ரஹ்லாதனுடைய சரித்திரத்தைத் தமிழில் நாடக ரூபமாக நடித்துக்காட்டுவது இயலாதென இதுகாறும் பலர் எண்ணியிருந்தனர். அக்குறையை ஸ்ரீமான் துரைசாமி ஐயங்கார் பூர்த்திசெய்தது பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நாடகத்தின் நடை மிகவும் நன்றாயிருக்கின்றது. பொதுவாக நாடகத்தின் போக்கு பாமரரும் அறிந்துகொள்ளும்படியான விதமாக எழுதப்பட்டிருக்கின்றது. நடிப்பதற்குரியதாயிருக்கவேண்டுமென்கிற முக்ய எண்ணத்துடன் இந்நாடகத்தை இதன் ஆசிரியர் எழுதியிருப்பது போற்றத்தக்கது.*

First Edition 1919.
Second Edition will be ready shortly.

கழக வெளியீடு—௪௯௮

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS 1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

விலை ரூ. 1-8.

அப்பர் அச்சகம், சென்னை 1.